விலை : 20.00
பக்கங்கள் : இருபது
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஆவணி 26 புதன்கிழமை (11.09.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 266

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# பிரபாகரனுக்கே அஞ்சாத எமக்கு விக்னேஸ்வரன் எம் மாத்திரம்!

## ஹெல உறுமய தெரிவிப்பு

(கொழும்பு)

வடமாகாண சபைத் தேர்தலுக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்துள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தின் ஊடாக எம் மீது மீண்டும் யுத்தம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அந்த யுத்தத்தை ஏற்றுக்கொள்ளவும் அதனை எதிர்கொள்ளவும் நாங்கள் தயாராகிவிட்டோம். பிரபாகரனுக்கே அச்சப்படாத நாங்கள் விக்னேஸ்வரனுக்கு அச்சப்பட மாட்டோம் என்று சம்பிக்க ரணவக்க தெரிவித்தார். (20ஆம் பக்கம் பார்க்க)

# பயங்கரவாதத்தை அழிக்க இந்திய அரசு உதவியது

## அமைச்சர் வாசு தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையில் பயங்கரவாதத்தை அழிப்பதற்கு இந்தியா உதவி செய்தது. ராஜீவ் காந்தியை கொலை செய்த விடுதலை புலிகளை நாமே ஒழித்தோம். எனவே இரு நாட்டு உறவை தமிழ்நாட்டு அரசியல்வாதிகளால் இல்லாது செய்துவிட முடியாது என்று சமூக, ஒருமைப்பாடு மற்றும் தேசிய மொழிகள் தொடர்பான அமைச்சர் வாசுதேவ நாணயகார தெரிவித்தார்.

தமிழ் நாட்டில் உள்ள மக்கள் செல்வாக்கற்ற அரசியல் கட்சிகளே இரு நாடுகளுக்கு இடையேயும் மோதல்களை ஏற்படுத்த முயற்சிக்கின்றன என்றும் அமைச்சர் குற்றம் சாட்டினார்.

இலங்கையுடனான நல்லுறவை முறித்துக் கொள்ள வேண்டுமென புதிய கம்யூனிஸ்ட் கட்சி கூறவில்லை. அதன் தமிழ்நாட்டு மாநில செயலாளரான பாண்டியனே தெரிவித்துள்ளார்.

எனவே இது பெரிதாக எடுத்துக் கொள்ள வேண்டிய விடயம் அல்ல. தமிழ் நாட்டில் உள்ள மக்கள் செல்வாக்கு இல்லாத அரசியல் கட்சியினர். காங்கிரஸ் (20ஆம் பக்கம் பார்க்க)

# அரசின் பொதுத் தேவைக்காகவே காணி சுவீகரிப்பு இடம்பெற்றது!

## அமைச்சர் பஷில் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

காணாமல் போனோர், காணி அபகரிப்பு பிரச்சினை வடக்கில் மட்டுமல்ல தெற்கிலும்தான் உள்ளது என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வடக்கில் இடம்பெற்ற காணி சுவீகரிப்புக்கள் அரசின் பொதுத் தேவைக்காகவே இடம்பெற்றன எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

யாழ்.கிறின் கிறாஸ் விருந்தினர் விடுதியில் நேற்றுக் காலை நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கின் அபிவிருத்தி, காணாமற் (19ஆம் பக்கம் பார்க்க)

# தமிழரின் நலன்களுக்கு எதிராக போர்க்கப்பல் பயன்படுத்தக் கூடாது

## இந்திய அமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு வழங்கப்படும் போர் கப்பல்களை தமிழர்களின் நலனுக்கு எதிராகப் பயன்படுத்தினால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய அமைச்சர் நாராயணசாமி விளக்கமளித்துள்ளார்.

தற்போது இலங்கைக்கு வழங்கப்பட உள்ள போர்க் கப்பல் ஏற்கெனவே அந்நாட்டுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி வழங்கப்பட உள்ளதாகவும் கூறியுள்ளார்.

இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டில் பிரதமர் பங்கேற்க கூடாது என்று தமிழக தலைவர்களிடமிருந்து கடிதங்கள் வந்துள்ளதாகவும் கூறியுள்ளார்.

இதுகுறித்து பிரதமர் பரிசீலனை செய்வார் என்றும் நாராயணசாமி கூறினார்.

இலங்கையை எதிரி நாடு என்று அறிவிக்க தமிழக கட்சிகள் கோரினால் அந்நாட்டுடன் பேச்சுவார்த்தை நடத்தி தமிழக மீனவர்களை எப்படி மீட்பது என்று நாராயணசாமி கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கை தொடர்பாக மத்திய அமைச்சர் சுதர்சன நாச்சியப்பன் தெரிவித்த கருத்துகள் ஏற்புடையதல்ல என்றும் அவர் கூறினார்.

ஒருங்கிணைந்த இலங்கை என்ற கோட்பாட்டில் இந்தியா உறுதியுடன் உள்ளதாக குறிப்பிட்ட நாராயணசாமி, சிங்களவர்களுக்கு இணையான உரிமை தமிழர்களும் கிடைக்கும் என்பதை இந்தியா உறுதிபடுத்தும் என்றும் தெரிவித்தார். (எ-11)

# சோனியா காந்திக்கு அமெரிக்கா அழைப்பாணை



(டில்லி)

அமெரிக்காவில் சிகிச்சைக்காகச் சென்றிருக்கும் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்திக்கு, 1984 டில்லி சீக்கியர் படுகொலை வழக்கில், அமெரிக்க (20ஆம் பக்கம் பார்க்க)

# பாடசாலைகளுக்கு 20-ந் திகதி விடுமுறை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபைத் தேர்தலையொட்டி எதிர்வரும் 20-ம் திகதி வெள்ளிக்கிழமை வடமாகாணத்தில் உள்ள சகலபாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.


21-ந் திகதி தேர்தல் வாக்களிப்பு நாள் என்பது குறிப்பிடத்தக்கது. (ந)


ஐக்கிய தேசியக் கட்சி

தியாகராஜா துவாரகேஸ்வரன்

வடமாகாண சபை
முதலமைச்சர் வேட்பாளரும்
முதன்மை வேட்பாளரும்

5





# வடக்கு மாகாண சபைத் தேர்தல் சுமுகமாக நடைபெற வேண்டும்!

## பிரி.உயர்ஸ்தானிகர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபைத்தேர்தல் சுமுகமான முறையில் இடம் பெறவேண்டும் என்பதே சர்வதேச நாடுகளின் விருப்பம் என இலங்கைக்கான அவுஸ்திரேலிய நாட்டு உயர்ஸ்தானிகர் திருமதி அல்மா றொபின் மூடி தெரிவித்தார்.

யாழ். ஆயர் தோமஸ் செளந்தரநாயகம் ஆண்டகையுடனான சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்தோடு வடக்கு மாகாண சபைத்தேர்தல் இங்குள்ள மக்களுக்கு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது எனவும் சுதந்திரமாக தேர்தல் இடம்பெறக் கூடிய சூழ்நிலைகள் உள்ளனவா எனவும் ஆயருடனான சந்திப்பின் போது உயர்ஸ்தானிகர் கேள்வி எழுப்பியுள்ளார்.

தேர்தல் நிலைவரம் தொடர்பான தகவல்களை அறிந்து செல்லும் நோக்கத்தோடு யாழ்ப்பாணத்திற்கு நேற்று வருகைதந்த அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர், யாழ்.ஆயரை அவரது இல்லத்தில் நேற்று மாலை 4 மணியளவில் சந்தித்து கலந்துரையாடினார்.

இந்தச் சந் (20ஆம் பக்கம் பார்க்க)

# தவறியோர் வாக்களிக்கலாம்

(கொழும்பு)

வடக்கு, வடமேல் மற்றும் மத்திய மாகாணசபைகளுக்கான தபால மூல வாக்களிப்பு அமைதியான முறையில் நேற்று மாலை 4 மணியுடன் நிறைவடைந்துள்ளது.

நேற்றுமுன்தினம் ஆரம்பமான தபால் வாக்களிப்பு நடவடிக்கைகள் நேற்றும் இடம்பெற்றது. குறித்த இரண்டு நாட்களும் வாக்களிக்க தவறிய அரச உத்தியோகத்தர்கள் மாவட்ட தேர்தல் அலுவலகங்களுக்கு சென்று, தங்களது அடையாளத்தை உறுதிப்படுத்துவதன் மூலம் எதிர்வரும் 12,13 மற்றும் 14 ஆம் திகதிகளிலும் வாக்களிக்க முடியுமென பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம்.மொஹமட் தெரிவித்துள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாணம் வந்த ரணில் ஆயரைச் சந்தித்துப் பேச்சு



(யாழ்ப்பாணம்)

நாட்டின் பிரதான எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க, யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையினை நேற்று மாலை அவரது இலலத்தில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

வடக்கு மாகாண சபைத் தேர்தலை முன்னிட்டு பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடும் நோக்குடன் யாழ்ப்பாணத்திற்கு நேற்றுக் காலை வருகை தந்த ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட ஐ.தே.கவின் பாராளுமன்ற உறுப்பினர்களான டி.எம்.சுவாமிநாதன், ரவி கருணாநாயக்க ஆகியோர் சங்கானை பொதுச் சந்தைப் பகுதியிலும் காரைநகர் பகுதியிலும் நல்லூர்ப் பகுதியிலும் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இதேவேளை, நேற்று மாலை 4.30 மணியளவில் யாழ்.ஆயர் இல்லத்திற்கு வருகை தந்த எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட ஐ.தே.கவினர் ஆயரைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். (எ-6)

# வீடமைப்புத் திட்டத்தை பார்வையிட இந்திய உயர்மட்டக்குழு வருகை

இலங்கையில் நடக்கும் இந்திய உதவி வீடமைப்புத் திட்டத்தில் காணப்படும் முன்னேற்றம் குறித்து நேரில் ஆராய்வதற்காக இந்திய வெளியுறவு அமைச்சின் அதிகாரிகள் குழுவொன்று இலங்கை வந்துள்ளது.

இந்திய வெளியுறவு அமைச்சின் அபிவிருத்தி மற்றும் பங்களிப்பு நிர்வாகத்திற்கான சிறப்பு செயலாளர் பி.எஸ். ராகவன் தலைமையிலான இக்குழுவில் வெளியுறவு அமைச்சின் அதிகாரிகளுடன் கட்டட கலை நிபுணர் ஒருவரும் இடம் பெற்றுள்ளார்.

போருக்கு பின்னர் இந்தியா இலங்கைக்கு வழங்க முன் வந்துள்ள 49 ஆயிரம் வீடுகளில் 10 ஆயிரம் வீடுகள் கிழக்கு, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

ஏனைய வீடுகள் வடமாகாணத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டுமான வேலைகளும் நடைபெற்று வருகின்றன.

கிழக்கு மாகாணத்தில் முதற்கட்டமாக மட்டக்களப்பு மாவட்டம் செங்கலடி பிரதேசத்திலுள்ள உறுகாமம், புல்லுமலை மற்றும் மங்களகம ஆகிய கிராமங்களில் இந்த வீடமைப்புப் பணிகள் கடந்த மே மாதம் 15-ம் திகதி ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

மேற்படி வீடமைப்புத் திட்டத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து நேரில் பார்வையிட மட்டக்களப்புக்கு ஹெலிக் கொப்டர் மூலம் சென்றிருந்த இந்திய வெளியுறவு அமைச்சின் அதிகாரிகளை கொண்ட குழுவினரை மாவட்ட அரசாங்க அதிபர் பி.எம். எஸ். சார்ள்ஸ் விமான நிலையத்தில் வரவேற்றார்.

தமிழர்களும் முஸ்லிம்களும் வாழும் உறுகாமம் கிராமத்திற்கு சென்று வீடமைப்பு பணிகளை பார்வையிட்டதோடு அவர்கள் பயனாளிகளை சந்தித்து உரையாடினர். (எ-11)

# 58 தொலைபேசிகள் கைப்பற்றப்பட்டன

இலங்கையில் பயன்பாட்டிற்கு தடை செய்யப்பட்ட ஆயிரத்து 800 மெஹா ஹேட்ஸ் நிலையான தொலைபேசிகள் 58ஐ தாம் கைப்பற்றியுள்ளதாக தொலைத்தொடர்புகள் ஒழுங்குப்படுத்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

கொழும்பு மற்றும் சனநெரிசல் மிக்க பகுதியிலேயே இவற்றை மீட்டுள்ளதாக அந்த ஒழுங்குப்படுத்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தொலைத்தொடர்புகள் ஒழுங்குப்படுத்தல் ஆணைக்குழுவினர் மற்றும் பொலிஸார் இணைந்து வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்களில் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போதே சட்டவிரோத தொலைபேசிகள் மீட்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் அனுஷ பெல்பிட்ட தெரிவித்தார்.

தொலைத்தொடர்புகள் ஒழுங்குப்படுத்தல் ஆணைக்குழுவில் அனுமதியின்றி நாட்டில் இந்த மாதிரியான பாரிய தொழில்நுட்பங்களை கொண்ட 600 தொலைபேசிகள் நாடளாவிய ரீதியில் பயன்படுத்தப்படுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இது சாதாரண தொலைபேசி வலையமைப்பிற்கு இடைஞ்சல்களை ஏற்படுத்தும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-11)

# மந்தனா வீட்டில் மீண்டும் கொள்ளை

சண்டேலீடர் பத்திரிகையின் சிரேஷ்ட ஊடகவியலாளர் மந்தனா ஸ்மாயில் அபேவிக்ரமவின் வீட்டில் மீண்டும் கொள்ளைச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது. மந்தனா இலங்கை ஊடகவியலாளர் தொழிற்சங்கத்தின் தலைவி என்பது குறிப்பிடத்தக்கது. பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள அவரது வீடு உடைக்கப்பட்டு கணனி களவாடப்பட்டுள்ளது.

வீட்டில் அலுவலக அறையாக பயன்படுத்திய பகுதி உடைக்கப்பட்டு கணனி எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. இரண்டாவது தடவையாக வீடு உடைக்கப்பட்டு கணனி களவாடப்பட்டபோது மந்தனாவின் குடும்பத்தினர் வீட்டில் இருக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஓகஸ்ட் மாதம் 24ஆம் திகதியும் மந்தனாவின் வீடு உடைக்கப்பட்டு கொள்ளை முயற்சி மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# முதியவர்களுக்கான ஆயுர்வேத சிகிச்சை முகாம் இன்று

வலி.தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட முதியவர்களிற்கான விசேட ஆயுர்வேத சிகிச்சை முகாம் இன்று காலை 9 மணிக்கு நவாலி ஹேமலதா ஞாபகார்த்த நிதியத்தில் இடம்பெறும். வடமாகாண ஆயுர்வேத திணைக்கள வைத்திய கலாநிதி டாக்டர் அன்பரதி கேதீஸ்வரன் தலைமையில் விசேட சிகிச்சை இடம்பெறும்.

இதில் முதியவர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு நிதியத் தலைவர் செ.ரமேஷ் கேட்டுள்ளார். (எ-11)

# இலங்கை முஸ்லிம்கள் பயங்கரவாதிகள் அல்ல - அமைச்சர் பௌசி

இலங்கையில் உள்ள முஸ்லிம்கள் தீவிரவாதிகள் இல்லை. அவர்களுக்கு ஏனைய தீவிரவாத குழுக்களோடு எந்த தொடர்பும் இல்லை என அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி தெரிவித்தார்.

முஸ்லிம் சமூகம் தலிபான் தீவிரவாதக் குழுக்களுடனோ அல்லது அல்-குவைதா குழுவோடு எந்தவித தொடர்பிலும் இல்லை என குறிப்பிட்டார். பாதுகாப்பு செயலாளர் வெளியிட்ட கருத்துக்கே அமைச்சர் பௌசி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இலங்கையில் உள்ள முஸ்லிம் மக்கள் பாதுகாப்புடனும் சமாதானத்துடனும் வாழ நடவடிக்கை எடுக்கப்படும் எனக் குறிப்பிட்டிருந்ததை அவர் இங்கு சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் இஸ்லாமிய அடிப்படைவாதத்தை கொண்டு வர முயற்சிக்கப்படுவதாக பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ இலங்கை உளவுத்துறை மற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற இராணுவக் கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசிய போதே பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்திருந்தார்.

கோத்தபாயவின் குறித்த கருத்துக்கு முஸ்லிம் சமூகம் அதிருப்தியை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(எ-11)

# ஆசிரியரின் கைப்பை அபகரிப்பு

(பருத்தித்துறை)

சைக்கிளில் சென்ற ஆசிரியர் ஒருவரை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் தள்ளி விழுத்திவிட்டு அவர் வைத்திருந்த கைப்பையை அபகரித்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுப் பிற்பகல் 3.45 மணியளவில் பருத்தித்துறை கலட்டிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

பாடசாலை முடிந்து முதலாம் கட்டைப் பகுதியில் உள்ள பருத்தித்துறை கல்வி வலயத்துக்குச் சென்றபோதே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

அக் கைப்பையில் அடையாள அட்டை, கைத்தொலைபேசி, வங்கி இலத்திரனியல் அட்டை என்பன இருந்ததாக பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்ட முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்ற சம்பவங்கள் அப்பகுதியில் இடம்பெற்று வருவதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (எ)


வட மாகாண சபைத் தேர்தல் -2013
யாழ். மாவட்டம்
இளைஞர் அமைப்பு
சுயேட்சைக்குழு - 01



அன்ரனி
( தலைவர் )
( முதன்மை வேட்பாளர் )
X
2
(E-038)
புறப்படுவோம் இளைஞர் அணியுடன்
எங்கும் செல்வோம் பந்தில் வெல்வோம்.
- எமது அணியை வெல்லச் செய்யுங்கள் -



வட மாகாண சபைத் தேர்தல் -2013
யாழ். மாவட்டம்




க. கமலேந்திரன் (தோழர் கமல்)
(யாழ். மாவட்ட அமைப்பாளர்)
X 10
(EC-5016)
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி
ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (EPDP)
வலி கிழக்கு, விவசாய அபிவிருத்திச் சபை

# முப்பது வருடங்களாக புனரமைக்கப்படாத வீதி

(பருத்தித்துறை)

அச்சுவேலி இடைக்காடு பாடசாலை வீதி 30 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாது குன்றும் குழியுமாக காணப்படுவதால் இவ் வீதியால் போக்குவரத்து செய்ய சிரமப்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

சுமார் 2 1/2 கிலோ மீற்றர் தூரமுடைய இவ் வீதி, இடைக்காட்டுச் சந்தியிலிருந்து மயிலிட்டிக்குச் செல்லும் கடற்கரை வீதி வரை நீண்டு செல்கின்றது.

இவ் வீதியினுடாக அன்றாடம் பல ஆயிரக்கணக்கான மக்கள் போக்குவரத்தை பல இன்னல்களின் மத்தியில் மேற்கொண்டு வருகின்றனர்.

எனவே, உரியவர்கள் பாடசாலை வீதியைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-10)

# உணவு ஒவ்வாமையால் 100 பேருக்கு பாதிப்பு

ஹற்றன் டிக்கோயா பெருந் தோட்டத்தில் உணவு ஒவ்வாமை காரணமாக 100 இற்கும் மேற்பட்ட தமிழ் தொழிலாளர்கள் வைத்திய சாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பட்ட தோட்டத்தில் நேற்று முன்தினம் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு கோயில் உற்சவம் ஒன்று இடம் பெற்றுள்ளது. இதன் போது நூற்றுக்கும் மேற்பட்ட உணவுப் பொதிகள் அடியார்களுக்கு விநியோகிக்கப்பட்டன. இந் நிலையில் குறித்த உணவு காரணமாக ஏற்பட்ட ஒவ்வாமையால் இதுவரை சிறுவர்கள் உட்பட நூறுக்கும் மேற்பட்டோர் டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் வாந்தி, வயிற்றோட்டம், மயக்கம் என்ற குணங் குறிகளுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# தே.அ. அட்டை கண்டெடுப்பு

கொக்குவில் கிழக்கு உடையார் ஒழுங்கை என்னும் முகவரியையுடைய தமிழினி பரமநாதன் என்பவரது 857442954V என்னும் இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை, வங்கிப்புத்தகம் என்பன வீதியில் கண்டெடுக்கப்பட்டு வலம்புரி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அலுவலக நேரத்தில் வருகைதந்து ஆதாரம் காட்டி அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம். (அ-7)

# துறைமுக வீதி திறப்பு விழா

(தும்பளை)

பருத்தித்துறை துறைமுக வீதி திறப்பு விழாவும் இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழிருந்த வீடுகள் கையளிப்பு நிகழ்வும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை துறைமுகப் பகுதியிலுள்ள வீடுகளைக் கையளிப்பதற்கு 27 குடும்பங்களின் விபரங்கள் கிராம அலுவலகரினால் அறிவிக்கப்பட்டுள்ளன.

ஆயினும் இதுவரை வீட்டு உரிமையா ளர்களுக்கு அறிவித்தல் கிடைக்காவிடின் ஜே/401 கிராம அலுவலகரிடம் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. துறைமுக வீதி காப்பெற் இடப்பட்டு திறந்து வைக்கப்படவுள் ளமை சுட்டிக்காட்டத்தக்கது. (அ-9-19)

# செய்முறை பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கழகத்தில் சித்திரமும் வடிவமைப்பும் கற்கை நெறியைத் தொடரும் மாணவர்களுக்கான செய்முறைப் பரீட்சை எதிர்வரும் 21, 22 ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த நிலையில் இச் செய்முறைப் பரீட்சை எதிர்வரும் 28, 29 ஆம் திகதிகளுக்கு பிற்போடப்பட்டுள்ளதாக பதிவாளர் அறிவித்துள்ளார். (அ-5)


வடமாகாண சபைத் தேர்தல் 2013
யாழ். மாவட்டம்

கார்த்திகேசு நடராசா
விந்தன் கனகரத்தினம் MMC
(யாழ்.மாநகர சபை உறுப்பினர்)
தமிழினத்தின் தன்மானக் குரல்!
வட மாகாணத்தின் எழுச்சிக் குரல்!
யாழ்ப்பாணத்தின் உரிமைக் குரல்!!!
12
இலங்கைத் தமிழரசுக் கட்சி X 12
(E-016)

வடமாகாண சபைத் தேர்தல் - 2013
யாழ்.மாவட்டம்
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி

ஐக்கிய இலங்கைக்குள்
அதிகாரப் பகிர்வு கண்டிட
அபிவிருத்தியுடன்
சமாதானம் ஒன்றாய் பெற்றிட
உங்கள் தெரிவு
X 11
சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினரும்
தென்மராட்சி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளரும்
குமாரு சர்வானந்தன் (சர்வா)
(EC/5013)

வடமாகாண சபைத் தேர்தல் 2013
கிளிநொச்சி மாவட்டம்
அகிம்சையையும் சகிப்புத் தன்மையையும்
மேம்படுத்தும்
"யுனேஸ்கோ" விருது பெற்ற இலங்கையின்
ஒரே ஒரு அரசியல்வாதி
வீ. ஆனந்தசங்கரி

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு (இலங்கைத் தமிழரசுக் கட்சி)
X 2
(EC/5006)

வடமாகாண சபைத் தேர்தல் 2013
(கிளிநொச்சி மாவட்டம்)
இலங்கைத் தமிழரசுக் கட்சி

3
டாக்டர் கந்தசாமி
திருலோகமூர்த்தி
தமிழினத்தின் தன்மானக் குரல்
கிளிநொச்சியின் உரிமைக் குரல்
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
(EC/5014)

வடக்கு மாகாண சபைத் தேர்தல் - 2013
யாழ்ப்பாண மாவட்டம்

எமது போராட்டத்தில்
இதுவரை இழந்த இழப்புகளை
அர்த்தமுள்ள உரிமை
அரசியலாக்க வாக்களியுங்கள்
5
ஈழமக்கள்
ஜனநாயகக் கட்சி
(ஈ.பி.டி.பி.)

ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன்
(பருத்தித்துறை பிரதேச சபை
எதிர்க்கட்சித் தலைவர்)
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி
X 5
(E-019)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு
வடமாகாண சபைத் தேர்தல் 2013

X 4
சத்தியத்தின் தேடல்
சனங்களின் நாடல்
யாழில் ஓர் விடியல்
யாவும் வேண்டும் யாவருக்கும்
உண்மையோடு உங்களை நாடி
அண்ணன்
சிராஸ்
உங்கள் குரல்! எனது செயல்...!
www.voiceofseeras.com
(EC/5009)


# மாகாணசபைத் தேர்தல் 2013

## யாழ்ப்பாண மாவட்டம்




"அபிவிருத்தி
சுதந்திரம்
ஜனநாயக உரிமை
என்பவற்றுக்காக
உழைக்கும்..."

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி சார்பாக போட்டியிடும் வேட்பாளர்கள்



**அந்தோனிப்பிள்ளை அகஸ்ரின்**
. ஓய்வு பெற்ற ஆசிரியர்
வடகடல் நிறுவன கண்காணிப்பாளர்
**3**



**ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன்(ரங்கன்)**
பருத்தித்துறை
பிரதேச சபை உறுப்பினர்
**5**



**சின்னத்துரை தவராஜா**
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்
முதன்மை வேட்பாளர்
**7**



**அலெக்ஸான்டர் சூசைமுத்து(சார்ள்ஸ்)**
சாவகச்சேரி
நகரசபை உறுப்பினர்
**8**




**கந்தசாமி கமலேந்திரன்(கமல்)**
யாழ் மாவட்ட
பிரதம அமைப்பாளர்
**10**



**கோடீஸ்வரன் றுஷாங்கன்**
ஊடகவியலாளர்
ஊடக ஆய்வாளர்
**12**



**ஞானசக்தி சிறீதரன்**
முன்னாள் வடக்கு கிழக்கு
மாகாணசபை உறுப்பினர்
**13**



**நாகன் கணேசன்**
பனை, தென்னை வள
கூட்டுறவு சமாச தலைவர்
**15**



**பாலகிருஸ்ணன் சிவகுரு (ஜீவன்)**
வலி. மேற்கு
பிரதேச சபை உறுப்பினர்
**17**



**சுந்தரம் திவகலாலா**
முன்னாள் செயலாளர்
கல்வியமைச்சு, வடக்கு கிழக்கு மாகாணம்
**19**

(EC-5011)

## ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி

# அரசுடன் இணக்க அரசியலைப்பேணி அபிவிருத்தியை ஏற்படுத்துவோம்

## ஐ.ம.சு.மு.முதன்மை வேட்பாளர் ஆ.சி.தவராசா



சுயலாப அரசியல்வாதிகளின் எதிர்ப்பரசியல் தொடர்பான வீராவேச பேச்சுக்களுக்கு இடங்கொடுத்து ஏமாறக்கூடாது என்றும் இணக்க அரசியல்வாதிகளாகிய எமக்கு மக்கள் ஒன்றிணைந்த ஆதரவை வழங்கும் பட்சத்தில் மக்களது அடிப்படை பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு காணப்படுமென்றும் ஈ.பி. டி.பியின் சார்பில் ஐ.மு. சு.முன்னணியின் முதன்மை வேட்பாளர் சி.தவராசா தெரிவித்துள்ளார்.

உரும்பிராய் யோகபுரம் அண்ணா சனசமூக நிலையத்தின் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு சமூகம் முன்னேற வேண்டுமாயின் அச்சமூகம் முதலில் கல்வியில் முன்னேற்றம் காணவேண்டும். அதனூடாகத்தான் அங்குள்ள ஏனைய தேவைகளிலும் முழுமையான நிவர்த்தி காணும்.

இப்பகுதி மக்கள் அடிப்படை வசதிகள் இல்லாது வாழ்ந்து வருவதை நாம் அறிந்துகொண்டுள்ள அதே வேளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமை மற்றும் வழிகாட்டலுக்கு அமைவாக அவற்றுக்கான தீர்வுகள் தொடர்பிலும் உரிய கவனம் செலுத்தவுள்ளோம்.

எதிர்ப்பரசியலை நடத்துபவர்கள் வாக்குகளை மட்டுமே அபகரிப்பார்களேயன்றி வேறொன்றும் செய்துவிடப்போவதில்லை. ஆனால் நாம் மத்திய அரசுடனான நல்லுறவின் ஊடாகவும் இணக்க அரசியலூடாகவும் மக்களுக்கான பல்வேறு அபிவிருத்தி மேம்பாட்டு செயற்றிட்டங்களை மட்டுமே முன்னெடுக்கமுடியும் என்றும் தெரிவித்தார்.

எனவே நடைபெறவுள்ள மாகாணசபைத்தேர்தலில் மக்கள் எமக்கு பூரண ஆதரவை வழங்கும் பட்சத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையின் கீழ் மக்களது வாழ்வாதாரம், அரசியலுரிமை உள்ளிட்ட அனைத்துரிமைகளையும் வென்றெடுக்க எம்மால் முடியுமென்றும் அவர் சுட்டிக் காட்டினார். (அ)



ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வடமாகாண சபைத் தேர்தல் வேட்பாளர் அங்கஜன் இராமநாதனின் மக்கள் சந்திப்பு ஒன்று அளவெட்டி மேற்கு கலைமகள் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றபோது...

# அதிகாரத்தை எமக்களித்தால் மக்கள் நலனுக்காக போராடுவோம்

## த.தே.கூ.வேட்பாளர் க.விந்தன் தெரிவிப்பு



மாகாண சபைகளின் கீழ் உள்ள அதிகாரங்களை மக்களின் நலன்களுக்காக ஊழல் அற்ற வகையில் நீங்கள் பெற்றுக் கொள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போடியிடும் எம்மை வெற்றி கொள்ளச் செய்வதே ஒரே வழியென கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட வேட்பாளரும் யாழ்.மாநகர சபை உறுப்பினருமான கே.என். கனகரத்தினம் தெரிவித்தார்.

எதிர்வரும் வட மாகாண சபைத் தேர்தலை முன்னிட்டு கோப்பாயில் அண்மையில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரத்தில் அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் கருத்துரைக்கையில்,

மாகாண சபைகளின் எல்லைக்குட்பட்டு கல்வி, உள்ளூராட்சி, வீடமைப்பு நிர்மாணம், மாகாண தெருக்கள், பொருளாதாரக் கொள்கை திட்டமிடல், புனர்வாழ்வு, சமூக சேவை, விவசாயம், கிராம அபிவிருத்தி, சுகாதாரம், நீர்ப்பாசனம், கால்நடை வளர்ப்பு, சூழல் பாதுகாப்பு, போன்ற அதிகாரங்கள் காணப்படுகின்றன.

இவற்றின் தேவையும் எமக்கு அவசியமானது என்பதை நான் கூறித்தான் நீங்கள் அறிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை. இவற்றை நியாயமான தேவைகளின் அடிப்படையில் உங்கள் காலடியில் கொண்டு வந்து சேர்ப்பதற்காகவே நாம் போட்டியிடுகின்றோம்.

மேற்கூறிய விடயங்களில் தமிழ் மக்களின் நலன்களுக்கு மாறாக தேசிய கொள்கை என்னும் காரணத்தைக்காட்டி மத்திய அரசு தனது கைவரிசையை காட்ட முற்பட்டால் நாம் அதற்கெதிராக துணிந்து குரல் கொடுப்போம். போராடுவோம் வீதிக்கு இறங்குவோம்.

மாகாண அரசாங்கத்தின் இணக்கத்துடன் செயற்படுத்த வேண்டிய விடயங்களிலும் நாம் உறுதியுடன் செயற்படுவோம். ஆகவே அரசாங்கம் ஏனைய மாகாணங்களில் தனக்கேற்றாற்போல் செயற்படுவது போன்று இம்மாகாணத்திலும் செயற்படுவதை நாம் அனுமதிக்க மாட்டோம்.

எங்களைப் போசிப்பதற்கு யாரும் இல்லை என துவண்டு விடாதீர்கள்.நீங்கள் வாக்களித்து எம்மைத் தெரிவு செய்யுங்கள். உங்களைக் காக்கும் பொறுப்பை நாம் கையில் எடுத்திருக்கின்றோம்.

துணிச்சலுடன் சென்று வாக்களியுங்கள். தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வெற்றி தமிழர்களின் வெற்றியாக அமையும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ)




வடமாகாண சபைத் தேர்தல் - 2013 யாழ் மாவட்டம்

உண்மையில் நான் அரசியலுக்கு வந்தது ஒரு கோபத்திற்தான் ஆத்திரம்! என் சுற்றம், சூழலில் உள்ள மக்கள் தொடர்ந்தும் துன்பங்களில் வாழ வழிகாட்டும் இந்தப் பிழைப்பு அரசியல்வாதிகளின் மீது எனக்கு வந்த ஆத்திரமும், கோபமுமே என் அரசியல் பிரவேசத்திற்கு வித்திட்டது. சாதிக்கவும், வாழ்க்கையை வளமாக்கிக் கொள்ளவும் கூடிய அத்தனை திறமைகளும், ஆற்றலும் உள்ள எனையொத்த இளைஞர்கள், யுவதிகள் தோல்வியிலும் விரக்தியிலும் வாழும் துர்பாக்கிய நிலையை தொடர்ந்து பேணிக்கொண்டிருக்கும் இந்த பிழைப்பு வாதிகளை எதிர்க்க, அவர்களை முறியடிக்க எனக்கு வேறுவழி தெரியவில்லை.
அரசியல் ரீதியாக இவர்களை தோற்கடிக்காமல் எமது மக்களை வளப்படுத்தவும், மீளகட்டியெழுப்பவும் எனக்கு வேறுவழி தெரியவில்லை.



(EC/5010)

எனது வழி - நேர்மை, தெளிவு, அர்ப்பணிப்பு, செயற்திறன்.

1

அங்கஜன் இராமநாதன்
MBA (International) B.Eng (Hons)

எங்களின் நேர்மை
உங்களின் நம்பிக்கை

முகப்புத்தகத்தில் தொடர...
www.facebook.com/angajan1

# இன்று ஒரு தகவல்

## தவளையின் தலைக்கனம்

ஓர் ஊரில் ஒரு பெரியவர் இருந்தார். அவர் சொல்லும் அறிவுரைகளைக் கேட்பதற்காக பலர் அவரைத் தேடி வருவதுண்டு.

ஒருநாள் அவர் உபதேசம் பண்ணிக் கொண்டிருந்தார். சீடர்கள் பலர் எதிரில் உட்கார்ந்து அவரது அறிவுரைகளைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். இந்தச் சமயத்தில் புதிதாக ஒரு ஆள் வந்தான். மிகவும் அடக்கமாக ஒரு மூலையில் உட்கார்ந்தான். உபதேசத்தைக் கேட்டான்.

யாரிடமும் எதுவும் பேசவில்லை. கடைசி வரைக்கும் அமைதியாக இருந்து கேட்டுவிட்டு அவன் பாட்டுக்கு எழுந்து போய் விட்டான். அதன்பின் தினமும் வர ஆரம்பித்தான். அவனுடைய அடக்கம்-பணிவு எல்லோரையும் ஆச்சரியப்பட வைத்தது.

ஒரு நாள் அந்தப் பெரியவரும் அவனுடைய இன்னொரு சீடரும் வெளியூருக்குப் போனார்கள். போகும் வழியில் ஒரு நதி. அதைக் கடந்து போக வேண்டும். படகில் ஏறி உட்கார்ந்து அடுத்த கரையில் போய் இறங்கினார்கள். அங்கே ஒரு ஆள் உட்கார்ந்திருந்தான். அவன் மிகவும் உல்லாசமாக காற்று வாங்கிக் கொண்டு உட்கார்ந்திருந்தான். இவர்கள் முதலில் அவனைக் கவனிக்கவில்லை.

"என்ன... எப்படியிருக்கிறாய்? சௌக்கியமாக இருக்கிறாயா?" என்று பெரியவரைப் பார்த்துக் கேட்டான்.

அதற்குப் பின்னர்தான் இவர்கள் அவனைப் பார்த்தார்கள். இவர்களுக்கு ஆச்சரியம்! வழக்கமாக வந்து பணிவாக உட்கார்ந்து உபதேசம் கேட்டுக் கொண்டு போவானே... அதே ஆள்தான்!

அவ்வளவு அடக்கமாக இருந்தவன், இப்பொழுது ஆணவத்துடன் மரியாதையில்லாமல் பெரியவரைப் பார்த்து

"எப்படியிருக்கிறாய்?" என்கிறானே, கூட வந்த சீடனுக்குக் கோபம்.

பெரியவர் முகத்தில் இலேசான புன்னகை. ஒன்றும் பேசாமல் இவர்கள் பாட்டுக்கு வந்தார்கள். சிறிது தூரம் வந்ததும் சீடன் "இவன் பேசிய தோரணையே சரியில்லையே" என்றான்.

"இவனுக்குப் பணம் கிடைத்திருக்கிறது. அதனால்தான் இப்படிப் பேசுகிறான்" என்றார் குரு.

"பணம் கிடைத்தால் இப்படிப் பேசுவதா?" "இவன் மட்டும் இல்லை... மனித இயல்பே பணம் வந்தால் மாறிப் போய்விடும்! இவன் ஒரு சராசரி மனிதன் என்ன பண்ணுவான்... பாவம்!"

"பணம் வந்தால் மனம் தடுமாறும் என்று சொல்கிறீர்களே?"

"தவளையே தடுமாறிப் போன கதை தெரியுமா உனக்கு?"

"தெரியாதே"

"சொல்கிறேன் கேள்" பெரியவர் சொல்லத் தொடங்கினார்.

ஓர் ஊரில் ஒரு தவளை இருந்தது. மற்ற தவளைகள் போலல்லாமல் இதன் தலை கொஞ்சம் நிமிர்ந்தது. ஒரு நாள் யானை ஒன்று அந்தத் தவளையைத் தாண்டிப் போனது. அவ்வளவுதான்! தவளைக்குக் கோபம் வந்துவிட்டது.

உடனே வளையிலிருந்து வெளியே வந்தது. அந்த யானையை எட்டி உதைப்பதற்காக காலைத் தூக்கியதாம். அது மட்டுமல்ல "உனக்கு எவ்வளவு துணிச்சல்? என்னைத் தாண்டிக் கொண்டு போகிறாய்?" என்று வேறு மனதுக்குள் நினைத்ததாம்.

சீடன் சிரித்தான்.

"ஏன் சிரிக்கிறாய்?" என்று கேட்டார் பெரியவர்.

"அந்தத் தவளை நடந்து கொள்ளும் விதத்தை பார்த்தால் சிரிப்புத்தான் வருகிறது"

"அது எப்படி நடந்து கொண்டது தெரியுமா?"

"தெரியவில்லையே?"

"அந்தத் தவளை தன் வளைக்குள் ஒரு ரூபாய் வைத்திருந்ததாம். அதனால்தான்!"

சீடன் யோசிக்க ஆரம்பித்தான். அவனுக்குப் புரிய ஆரம்பித்தது. ஒரு ரூபாய் காசு ஒரு தவளையையே அப்படிப் பேச வைத்து விட்டதென்றால்... மனிதனின் கையில் பணம் வந்தால் அவனுடைய மனம் சும்மா இருக்குமா?

இன்றைக்கு நாம் காத்துக் கொண்டிருக்கும் பல குற்றங்களுக்கு அடிப்படைக் காரணம் பணம்தான்.

அதற்காகப் பணத்தைக் குறை கூற முடியாது. அதைக் கையாளத் தெரியாத மனிதன்தான் குற்றவாளி. மனித இயல்பு மாறக் கூடிய அளவுக்குப் பணத்துக்கு அடிமையாகி விடக் கூடாது. அதுதான் முக்கியம்.

ஒரு பணக்கார எறும்பு நடந்து போய்க் கொண்டிருந்ததாம். அதன் பின்னால் நான்கு எறும்புகள் வரிசையாக போய்க் கொண்டிருந்தன. அந்த வழியாக ஒரு யானை வந்தது. அது நினைத்ததாம்.

"ஐயோ பாவம். நாம் குறுக்கே போனால் எறும்புகள் மிதிபடும். அதனால் விலகிப் போகலாம்" என்று நினைத்துக் கொண்டு ஒதுங்கிப் போனதாம். அதைப் பார்த்துவிட்டு அந்த எறும்பு மற்ற எறும்புகளிடம் சொன்னதாம்.

"அதோ பாருங்கள்... நம்மை பார்த்துவிட்டு அந்த யானை பயந்து போய் ஓடுகிறது.

பாவம் அதை ஒன்றும் செய்யாதீர்கள்.

விட்டு விடுங்கள். பிழைத்துப் போகட்டும்" என்றதாம்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு 11 கோரிக்கைகள் அடங்கிய மகஜர்

## மூன்று அமைப்புக்கள் சமர்ப்பிக்கின்றன

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு கோரிக்கை விடுக்கும் முகமாக யாழ். மாவட்ட மீனவ ஒத்துழைப்பு இயக்கம், தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம், யாழ். மாவட்ட கிராமிய இயக்கங்கள் ஆகிய 3 இயக்கங்கள் இணைந்து பதினொரு கோரிக்கைகள் அடங்கிய அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளன.

இவ்வறிக்கை வடக்கு தேர்தலில் போட்டியிடும் அனைத்து கட்சிகளுக்கும் கையளிக்கப்படவுள்ளது எனவும் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் தேசிய இணைப்பாளர் ஏ. ஜேசுதாஸன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டமைப்பின் அலுவலகத்தில் நேற்று மதியம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

☛ இடம்பெயர்ந்து இதுவரை காலமும் மீளக் குடியேற்றப்படாத மக்களை அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியேற்றுவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். மீளக் குடியேறிய மக்களுக்கு முழுமையான அடிப்படை வசதிகளைப் பெற்றுக் கொடுக்க வேண் டும்.

☛ இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டுள்ள மக்களின் காணிகள் மற்றும் அவர் களின் வாழ்விடங்கள் அனைத்தையும் இராணுவத்தினரிடமிருந்து உடனடியாக மக்களுக்கு பெற்றுக் கொடுக்க வேண்டும்.

☛ காணியில்லாத மக்களுக்கும் காணிகளைப் பெற்றுக் கொடுத்து அக்காணிகளுக்கான நிரந்தர உறுதிப் பத்திரம் வழங்கப்பட வேண்டும்.

☛ மீனவர்களை தொழில் மேற்கொள்ளவிடாது தடுத்து வைத்திருக்கும் பிரதேசங்களில் கட்டுப்பாடுகளை நீக்கி அவர்கள் சுதந்திரமாக தொழில் செய்வதற்கான வாய்ப்புக்களை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

☛ கரையோரப்பகுதியில் வாழ்ந்து வரும் மக்களின் காணிகளை விரைவாக அளவிட்டு அக்காணிகளுக்குரிய இலக்கங்களை பெற்றுக் கொடுத்து நிரந்தர உரிமை உறுதி களையும் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

☛ தடைசெய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களையும் இந்திய இழுவைப் படகுகளின் வருகையையும் நிறுத்திதேசிய மீனவ கொள்கையின் மூலம் நிரந்தர மீனவ தொழில் ஒன்றினை ஏற்படுத்தி கொடுக்க வேண்டும்.

☛ காணாமற் போன உறவுகளுக்காய் ஏங்கித் தவிக்கும் உறவுகளுக்கு உரிய பதிலை உடனடியாக வழங்கவேண்டும். அரசியல் கைதிகளாய் தடுத்து வைத்திருப்பவர்களை விரைவில் விடுதலைசெய்யவேண்டும்.

☛ யுத்தத்தினால் கணவர் இறந்தோ அன்றே அவர் கடத்தப்பட்டோ தனிமைப் படுத்தப்பட்ட பெண்களைத் தலைமைத்துமாகக்கொண்ட குடும்பங்களில்சமூக, பொருளாதார, கலாசார மேம்பாடுகளை ஏற்படுத்த வேண்டும்.

☛ யுத்தத்துக்கு பின்னர்அதிகரித்துக்காணப்படும் சமூக, கலாசார சீர் கேடுகள் மற்றும் போதைப் பொருள் பாவனைகளை தடுத்து நிறுத்துவதற்கு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

☛ கிராமிய மட்டத்தில் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கான சந்தை வாய்ப்பை உறுதி செய்து அவர்களின் உற்பத்தி நிலையை அதிகரிக்கக்கூடிய வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும்.

☛ அபிவிருத்தி என்ற போர்வையில் வடக்கின் விளை நிலங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றமை தடுக்கப்பட வேண்டும்என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-4)

# மீள்குடியேற்ற கலந்துரையாடல்

காங்கேசன்துறை உதயசூரியன் சனசமூக நிலையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள காங்கேசன்துறை, தையிட்டி கிராமங்களில் மீள்குடியமர்வது குறித்த கருத்தரங்கொன்று நடைபெறவுள்ளது. பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே. என்.டக்ளஸ் தேவானந்தாவுடனான இக் கருத்தரங்கு இன்று புதன்கிழமை பிற்பகல் 5 மணிக்கு அமைச்சரின் அலுவலகத்தில் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 50 | 60 |
| உருளைக்கிழங்கு | 100 | 100-140 | 120 |
| பச்சைமிளகாய் | 60 | 70 | 100 |
| தக்காளி | 40 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 40 |
| கோவா | 60 | 60 | 60 |
| கரட் | 60 | 80 | 100 |
| பூசணி | 20 | 30 | 40 |
| புடோல் | 20 | 40 | 40 |
| வாழைக்காய் | 60 | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 160 | 120-140 | 160-200 |
| பெரிய வெங்காயம் | 110 | 60 | 120 |
| பாகற்காய் | 60 | 60 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 40 |
| கருணைக் கிழங்கு | 100 | 60 | 80 |
| பயற்றங்காய் | 100 | 120 | 180 |
| லீக்ஸ் | 80 | 60 | 100 |
| பீற்றூட் | 10 | 20 | 40 |
| கறிமிளகாய் | 60 | 30 | 80 |
| முருங்கைக்காய் | 40 | 80 | 100 |
| போஞ்சி | 100 | 110 | 160 |
| கீரை - 1 பிடி | 10 | 25 | 20 |
| தேசிக்காய் | 400 | 350 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 50 | 35-45 |
| இராசவள்ளி | 50 | 70 | 120 |

# இராசி பலன்

*11.09.2013*
*(ஆவணி 26, புதன்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு*
*சஷ்டி பிற்பகல் 12.34 மணிவரை*
*விசாகம் முற்பகல் 7.40 மணிவரை*
*இராகுகாலம் 12.03-1.33 மணிவரை*
*சுபநேரம் 4.33-6.03 மணிவரை*
*சித்தாமிர்தம்*

**மேடம்** இறைவழிபாட்டால் இனிமை காண வேண்டிய நாள், தேகாரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய சூழ்நிலை உருவாகும், கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை.

**இடபம்** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கலாம், நண்பர்களால் நன்மை உண்டு, செய் தொழிலில் சிறப்புக்கள் வந்து சேரலாம், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**மிதுனம்** தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும், தொழிலில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கப் பெறுவீர்கள், கௌரவமான நாள், கைமாற்றாக வாங்கிய பணத்தை திரும்பக் கொடுக்க முயல்வீர்கள்.

**கடகம்** தொழிலில் புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், பெற்றோர் மீதான பாசம் கூடும், மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறலாம், கல்வி நலன் கருதி சில செலவுகள் ஏற்படலாம்.

**சிங்கம்** தாயின் உடல் நலம் சீராகும், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், வாகன சுகமுண்டு.

**கன்னி** உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, நீண்ட நாளைய பிணக்குகளில் திடீர் திசை திருப்பம் ஏற்படலாம், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும்.

**துலாம்** நிலையான வருமானத்துக்கு வழி அமைத்துக் கொள்வீர்கள், விவாக பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்** குடும்பத்தினர் உங்கள் குணம் அறிந்து நடந்து கொள்வர், சந்தித்தவர்களால் சந்தோசம் அதிகரிக்கும் நாள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், புதிய திருப்பங்கள் ஏற்படலாம்.

**தனுசு** சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம்.

**மகரம்** பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்கள் தகுதியை உயர்த்தும், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், மறக்க முடியாத இனிய சம்பவங்கள் இடம் பெறலாம், பொதுவாழ்வில் புகழ் கூடும்.

**கும்பம்** எதிர்கால நலன் கருதி புதிய திட்டமொன்றைத் தீட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**மீனம்** அன்பால் சாதித்துக் காட்டும் நாள், உறவினர்களை உபசரிப்பதில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தடைப்பட்ட திட்டங்களில் முன்னேற்றமுண்டு, பயணங்களால் பலனுண்டு.

வளவன்

# முகாம்களில் வசிக்கும் மக்கள் தேர்தலில் வாக்களிப்பதை தவிர்த்துக்கொள்வர்

## தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் தெரிவிப்பு

**மக்கள் போராட்டமே எமது பிரச்சினைக்கு ஒரே தீர்வு. மாகாணசபை எமக்கு எவ்விதத்திலும் உதவப்போவதில்லை என தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் தெரிவித்துள்ளது.**

யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டமைப்பின் அலுவலகத்தில் நேற்று மதியம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவ் இயக்கம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

இவ் இயக்கத்தின் தேசிய இணைப்பாளர் ஏ.ஜேசுதாசன் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது தமிழ் மக்கள் தமது பிரச்சினையை எவரிடம் கூறுவது என்ற குழப்ப நிலையிலுள்ளனர்.

காலம் காலமாக நடைபெற்று வந்த தேர்தல்களில் அரசியல்வாதிகள் போலி வாக்குறுதிகளை அளித்து எமது மக்களை ஏமாற்றியே வந்துள்ளனர்.

ஆனால், தற்போது நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலின் போதாகிலும் தமிழ்மக்கள் ஏமார்ந்துவிடக்கூடாது.

வாழ்விழந்து, மானமிழந்து, நிலமிழந்து, உறவிழந்து தவிக்கும் மக்களுக்கு இம்மாகாணசபை ஒரு தீர்வாக அமையாது போயினும் இங்கு மக்களுக்கு சுதந்திரம் இல்லையென்பதையாவது நாம் இம்மாகாண சபை தேர்தல் முடிவுகளினூடாக சர்வதேசத்திற்கு தெரிவிக்கவேண்டிய கட்டாய நிலையிலுள்ளோம்.

வடக்கு மாகாண சபைத்தேர்தல் முடிவு ஏமாற்றுக்காரர்களுக்கு ஒரு படிப்பினையாகவும் தமிழ்மக்களின் பிரச்சினையை தீர்ப்பதற்கு ஒரு ஆரம்பமாகவும் அமையவேண்டும்.

கடந்த 4 வருடங்களில் நடைபெற்ற தேர்தல்களின் போதும் அரசு இடம்பெயர் மக்களை சொந்த இடங்களில் மீள்குடியேற்றுவோம் எனக்கூறி வந்தது.

ஆனால், இன்று அவ்வாக்குறுதிகள் பொய்த்துப்போன நிலையில் முகாம்களில் வசித்துவரும் மக்கள் இம்மாகாண சபைத் தேர்தலில் தாம் வாக்களிக்கப்போவதில்லை எனக்கூறியுள்ளனர்.

இவ் அறிவிப்பு ஒரு மக்கள் போராட்டத்தின் ஆரம்பமே. மக்கள் போராட்டத்தின் மூலமே நாம் தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றார்.

மேலும் இச்சந்திப்பின்போது யாழ்.மாவட்ட இணைப்பாளர் எஸ்.இன்பமும் உடனிருந்தார். (அ-4)

# வடிகான்கள் இன்மையால் சந்தைக்குள் நீர் தேக்கம்

(குனங்கிளப்பு)

சங்கானை பொதுச் சந்தையில் நீர் வழிந்தோடுவதற்கு வடிகான்கள் அமைக்கப்படாமையினால் சந்தைக்குள் நீர் தேங்கி நிற்பதாக விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இச் சந்தை வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்கு சொந்தமானது. இச்சந்தைக்கு அண்மையில் தான் சுற்று மதில்கள் அமைக்கப்பட்டன.

இதனால் மழை நீர் வழிந்தோட இடமின்றி சந்தைக்குள் தேங்கி நிற்கின்றது.

இதனால் வியாபாரிகளும் சந்தைக்கு பொருட்களைக் கொள்வனவு செய்யவரும் மக்களும் பல அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

தற்போது மழை காலம் ஆரம்பித்துள்ளதால் அண்மையில் பெய்த மழையினால் நீர் வழிந்தோட இடமின்றி சந்தை முழுவதும் வெள்ளக் காடாக காட்சியளிக்கின்றது.

எனவே, இச்சந்தைப் பகுதியில் வடிகான்களை அமைக்க உரியவர்கள் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென சந்தைப் பாவனையாளர்கள் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளனர். (அ-9-37)

# இலங்கை மனிதவுரிமை ஆர்வலர் மரணமானார்



இலங்கை சிரேஷ்ட மனித உரிமை ஆர்வலரான சுனிலா அபேசேகர காலமானார்.இவர் உடல் நலக் குறைவால் கொழும்பி லுள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

இவர் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கை மற்றும் தெற்காசிய நாடுகளில் பெண்களின் உரிமைகள் மனித உரிமைகள் தொடர்பில் பணிகளை ஆற்றி வந்தார்.

நெதர்லாந்து தலைநகர் ஹேக்கிலுள்ள சமூக கற்கைகளுக்கான நிறுவனத்தில் 1994 ஆம் ஆண்டு எம்.ஏ.பட்டம் பெற்ற இவர் அதே வருடத்தில் சிறந்த ஆய்வுப் பத்திரிகைக்கான விருதையும் பெற்றார்.

ஐக்கிய நாடுகளின் முன்னாள் செயலாளர் கொபி அனானிடம் இருந்து ஐக்கிய நாடுகளின் மனித உரிமைக்கான விருதை பெற்றுள்ளார். அத்துடன் மனித உரிமை கண்காணிப்பகமும் இவரை மனித உரிமை பணிகளுக்காக கௌரவித்தது. (அ-2)

# பாயும் புலியைப் பார்த்து பயந்தே போனேன்

## அமைச்சர் பசில்

(யாழ்ப்பாணம்)

பற்றுச்சீட்டில் காணப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் சின்னமான பாயும் புலியை பார்த்து தான் பயந்ததாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். யாழ். கிறீன் கிறாஸ் விருந்தினர் விடுதியில் நேற்றுக் காலை நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா கதிர்காமர் முகாமில் 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மதகுருமார்களை சந்திப்பதற்காக நான் சென்றிருந்தேன். இதன்போது அங்கிருந்த தாயொருவர் என்னை அணுகி தனது தங்க நகைகளை மீட்டுத்தருமாறு கோரினார்.

அதற்கு நான் உங்கள் தங்க நகைகள் எங்குள்ளன என வினவியதோடு அதற்கான ஆதாரம் ஏதாவது உண்டா எனவும் அவரிடம் கேட்டிருந்தேன். உடனடியாக அவர் ஒரு பற்றிச் சீட்டை எனக்கு காண்பித்தார்.

அதனைப் பார்த்த நான் பயந்தே போனேன். ஏனென்றால் அதில் விடுதலைப் புலிகளின் பாயும் புலியின் சின்னம் பொறிக்கப்பட்டிருந்தது. அப்பெண் தனது நகைகளையும் விடுதலைப் புலிகளின் வங்கியிலேயே அடகு வைத்துள்ளார். இச்சம்பவத்தின் போது எனது அருகில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் இருந்தார்.

அவரைப் பார்த்த நான் நீங்கள்தானே தமிழ்த் மக்களின் பிரச்சினையை தீர்த்து வைப்பதாக கூறித்திரிகின்றீர்கள். ஆகையால் இப்பிரச்சினையையும் நீங்களே தீர்த்து வையுங்கள் என கூறி கூட்டமைப்பு எம்.பியிடமே அப்பற்றுச்சீட்டை கொடுக்குமாறு அப்பெண்ணிடம் கூறினேன் என்றார் அமைச்சர் பசில். (அ-4)









# நயவஞ்சக நரி



ஒரு காட்டில் நரி ஒன்று இருந்தது. ஒருமுறை அது ஒரே வேளையில் நிறைய உணவு சாப்பிட வேண்டுமென்று விரும்பியது. அதற்காக சந்தர்ப்பம் எப்போது வாய்க்கப்போகிறதோ என்று காத்துக் கொண்டிருந்தது. மரத்தின் நடுவிலுள்ள பொந்து ஒன்றில் அது மிகவும் நல்லவனைப்போல வசிக்க ஆரம்பித்தது. மனதுக்குள் இந்த மரத்தின் கூடு கட்டி வரும் பறவைகள் குஞ்சு பொரித்தால் குஞ்சுகளை அப்படியே சாப்பிட்டு விடலாமே என்றெண்ணியது நரி.

அதன் எண்ணம் வீண்போகவில்லை. இரண்டு கழுகுகள் அம்மரத்தில் கணவன், மனைவியாக வாழ்ந்து வந்தன. மரப்பொந்தில் மிகவும் சாது மாதிரி படுத்துக் கிடக்கும் நரியைப்பார்த்தன. "நரியாரே! நீர் இம்மரப்பொந்தில் எவ்வளவு நாளாக இருக்கிறீர்?" என்று கேட்டது ஆண் கழுகு.

"கழுகாரா... வாங்க... கூட யாரு? மனைவியா?" என்று கேட்டது நரி. "ஆமாம்! நான் கேட்டதற்கு நீர் இன்னமும் பதில் சொல்லவில்லையே!" என்றது கழுகு. "ஆமாம்! இம்மரப்பொந்தில் பல வருடங்களாக இருக்கிறேன்...! ஏன் கேட்கிறீர்?" என்றது நரி.

"என் மனைவிக்கு பிரசவ காலம் நெருங்குகிறது. இம்மரத்தில் கூடு கட்டி, முட்டையிட்டு, குஞ்சு பொரிக்கலாமா என்று ஆசை!" என்றது ஆண் கழுகு. ரொம்ப ராசியான மரம் இது...முன்பு கூட ஒரு பருந்து இங்கு கூடு கட்டி, குஞ்சு பொரித்து, சுகமாக வாழ்ந்தது" என்றது நரி. "ஆபத்து ஏதாவது உண்டாகுமா?" என்று கவலையோடு கேட்டது பெண் கழுகு.

"நான் வயதானவன். இந்த பொந்தே கதி என்று கிடக்கிறேன். நீங்கள் பயப்படவே வேண்டாம். நாம் நல்ல நண்பர்களாக இருப்போம்!" என்றது நரி. பிறகு மரத்தை அண்ணாந்து பார்த்து மூன்று கிளைகள் பிரியும் ஒரு இடத்தை சுட்டிக்காட்டி, "அங்கு கூடு கட்டிக் கொள்ளுங்கள். மிகவும் வசதியாக இருக்கும்!" என்றது. ஆண் கழுகும், பெண் கழுகும் அங்கு சென்று கூடு கட்ட ஆரம்பித்தன. ஆண் கழுகு



வெளியில் இரை தேடிச்செல்லும் பொழுது, என் மனைவி மட்டும் கூட்டிலிருக்கிறாள். "அவளால் பறக்க முடியவில்லை... இன்றோ நாளையோ முட்டை இடப்போகிறாள்... கொஞ்சம் பார்த்துக் கொள்ளும் நரியாரே!"

**பஞ்சதந்திரக் கதைகள்**

என்றது.

"கவலைப்படாமல் போய் வாரும் நண்பரே! நான் இங்கிருக்கும் வரை எந்த ஆபத்தும் அண்டாது!" என்றது நரி. நமக்கு நல்ல நண்பன் கிடைத்தான் என்றெண்ணி இரை தேட பறந்து சென்றது ஆண் கழுகு. பெண் கழுகு முட்டையிட்டு குஞ்சுகள் பொரித்து அவை சுமாராக பெரிதானதும், எல்லாவற்றையும் சாப்பிட்டு விட வேண்டுமென்று நரி எண்ணிக் கொண்டிருக்கும்பொழுது, மரத்தடியில் புதிதாக வந்த பன்றியும், அதன் கொழு கொழு குட்டிகளும் அதன் பார்வையில் பட்டன.

பன்றிக் குட்டிகளை சாப்பிட்டு பல நாள் பசியாறலாம் போலிருக்கிறதே எண்றெண்ணிற்று நரி, மேலே கழுகு குஞ்சுகள், கீழே பன்றிக் குட்டிகள்... பேஷ்பேஷ்...

"நரியாரே இந்த மரத்தடியில் நானும் என் குட்டிகளும் தங்கப் போகிறோம். ஏதாவது ஆபத்து வருமா? என்று கவலையோடு கேட்டது அம்மா பன்றி.

"பேஷாக தங்கலாம்!"

"நான் இருக்கும் இடத்துக்கு வந்துவிட்டாய் பன்றியே... கவலையே படாதே...!நான் வயதானவன். இந்த பொந்தே கதி என்று கிடப்பவன்...! எதிரிகள் எவரையும் மரத்தருகில் அண்டவே விடமாட்டேன்...! நானிருக்க பயமேன்?" என்றது நரி.

பன்றி தன் குட்டிகளுடன் மரத்தடியில் தங்கிக்கொண்டது. நாளடைவில் மரத்தின் மேல் உள்ள கூட்டில் பெண் கழுகு முட்டையிட்டு குஞ்சு பொரித்தது. நான்கைந்து குஞ்சுகள் இருக்கும். கத்தியபடி இருந்தன. மரத்தடியில் பன்றிக்குட்டிகளும் "கர்,கர்" என்று உறுமியபடி உலாவிக் கொண்டிருந்தன.

முன்னையதை விட இப்போது பன்றிக் குட்டிகளும் மிகவும் பருத்திருந்தன. அம்மா பன்றியும்தான். 'அவைகளை எப்படி சாப்பிடலாம் என்று யோசித்த நரி, ஆண்கழு



கையும், பெண் கழுகையும் அழைத்தது. "இதோ பாருங்கள்...! மரத்தடியில் இருக்கிறதே பன்றி அது சுத்த மோசம்... உங்கள் குஞ்சுகளை எப்பொழுது சாப்பிடலாமென்று தருணம் பார்த்துக் கொண்டிருக்கிறது!" என்றது.

இரண்டு கழுகுகளும் இரை தேடக் கூட வெளியில் செல்லாமல், கூட்டிலுள்ள குஞ்சுகளை காவல் காக்கத் தொடங்கின. வெளியே எங்கேயும் போகப் பயந்தன. மேலே ஒருமுறை பார்த்துவிட்டு குட்டிகளுடன் மேய்ந்து கொண்டிருந்த பன்றியிடம் வந்தது நரி.

"பன்றியே...! நீ உன் குட்டிகளை மிகவும் ஜாக்கிரதையாக பார்த்துக் கொள்ள வேண்டும். மேலே இருக்கிற இரண்டு கழுகுகளும் மகா பொல்லாத கழுகுகள். அவை நீ இல்லாத சமயத்தில் உன் குட்டிகளைக் கொத்திக் கொன்று சாப்பிட்டுவிட நேரம் பார்த்துக் கொண்டிருக்கின்றன" என்றது நரி.

பன்றி ஒரேயடியாக பயந்து போய்விட்டது. குட்டிகளை எல்லாம் தன் காலின் கீழ் அழைத்துக் கொண்டது. மரத்தடியிலேயே இருக்க வேண்டும். குட்டிகளை தனியாக விட்டு விட்டு போய்விடக் கூடாது.

கழுகுகள் சாப்பிடவா என் குட்டிகளை கண்போல வளர்க்கிறேன் என்றெண்ணியது பன்றி. அதன் பிரகாரமே இருக்கவும் ஆரம்பித்தது அம்மாப் பன்றி.

ஆண், பெண் கழுகுகளும், அம்மா பன்றியும், பன்றிக் குட்டிகளும் இரை தேடாததால் வாடி இளைத்து, சோர்ந்து துவண்டு, ஒரு நாள் எல்லாமே இறந்து போயின. நரி விரும்பியதுபோல் நிறைய சாப்பிடுவதற்கு கழுகுகளும், பன்றிகளும் அதன் தந்திரத்தால் கிடைத்து விட்டன.

***எவர் நரியாரிடம் நட்பு கொள்ள வேண்டுமென்று யோசித்து நட்புக் கொள்ளாததால் கழுகுகளுக்கும், பன்றிகளுக்கும் நேர்ந்த பரிதாபமான முடிவைப் பார்த்தீர்களா, நல்லவர்களோடு மட்டுமே நட்பு கொள்ள வேண்டும்.***

# பெருகிவரும் மண முறிவு! பிரியாமலிருக்க என்ன வழி?

கடந்த வாரத் தொடர்ச்சி...

ஆனால் , மேற்கண்டவாறு குரு சேர்ந்த ஜாதகர் எப்போதும் கோவில் குளம் என்று சுற்றுக் கொண்டே இருப்பர். ஜாதகியோ இன்று இந்த விரதம். அதனால் படு சுத்தம் என்று கூறிவிட பொறுத்தது போதும் என்று பொங்கி எழும் வாழ்க்கைத்துணை நீ கோவிலுக்குப் போ நான் நீதிமன்றம் போகிறேன் என்று போய் விடுவார். சந்திரனோ, இராகுவோ சேர்ந்தால் சிலருக்கு வெளிநாட்டுப் பயணத்தின் மூலம் விவாகரத்தாகும். சிலருக்கு ஆராய்ச்சி சம்பந்தமான கல்வியும் ஒரு காரணமாகிவிடும்.

7, 6 ஆம் இடம் 10+ஆம் இடம்

இவ்வமைப்பு இருந்தால் முழுக்க முழுக்க தொழில் , வேலையே மணமுறிவுக்குக் காரணமாகும். தற்போதைய காலகட்டத்தில் இந்த விடயம் சம்பந்தமான விவாகரத்துகளே பெருகி வருகின்றன. தற்காலத்தில் பெண்களும் நல்ல படிப்பு, பதவி பெற்று, தங்கள் முன்னேற்றம் என்ற தகுதி பாழ்படக்கூடாது என்று நினைக்கிறார்கள். ஆண்களோ, உத்தியோகம் புருஸ இலட்சணம் என்று ஊறிப்போய் இருக்கிறார்கள்.

சில வீடுகளில் கணவன் கொஞ்சம் குறைவான சம்பள வேலையும் மனைவி அதிக சம்பள வேலையும் பார்க்கும் போது ஆணகளால் அதனை ஜீரணிக்கவே முடிவதில்லை. இதுவே பின்னர் கௌரவப் பிரச்சினையாக மாறிவிடுகிறது. கடைசியில் யார் வேலைக்குப் போவது யார் வீட்டில் இருப்பது என ஆரம்பித்து பின் இருவரும் நீதிமன்றம் போய் விடுகிறார்கள்.

7, 6 ஆம் இடம் +11 ஆம் இடம்

இந்த அமைப்பு காணப்பட்டால் ஜாதகரின் மணமுறிவுக்கு மூத்த சகோதரனே காரணமாக இருப்பார். இவ்வமைப்பில் சந்திரன் பலமற்று சேர நினைப்பு உழைப்பைக் கெடுத்தது என்கிற கதையாக இவர்கள் தவறாக எண்ணும் எண்ணங்களே மணமுறிவுக்குக் காரணமாகி விடும்.

11 ஆம் இடம் உபய களத்திர வீடு. ஆதலால் சிலர் அமைத்துக் கொண்டிருக்கும் இன்னொரு வீடு அல்லது வீடுகள் பற்றிய இரகசியம் வெளிப்பட அதுவே மணமுறிவுக்குக் காரணமாகிவிடும். ( 6 ஆம் இடம் என்பது களத்திரத்திற்கு மறைவு ஸ்தானம். ஒருவகையில் 6 ஆம் இடமும் இரகசிய களத்திரத்தையும் குறிக்கும். எனவே, இவ்வமைப்பு கண்டிப்பாக முறையற்ற உறவுகளால் உண்டாகும் முறிவைக்குறிக்கும்)

7, 6 ஆம் இடம் சம்பந்தம் +12 ஆம் இடம்

12 ஆம் இடம் என்பது உறக்கம் சம்பந்தமான இடம். சிலர் அதிக குறட்டை விடுகிறார்கள் என்று விவாகரத்து கோரியதாக பத்திரிகைகளில் படிக்கிறோம். அதற்கெல்லாம் காரணம் இந்த அமைப்புத்தான். இதில் சந்திரன் அல்லது சுக்கிரன் இணைய வெளிநாட்டுப் பயணம் சம்பந்தமான மணமுறிவு உண்டா கும். நீச சனி சேர எப்போதும் தூங்கிக் கொண்டிருக்கிறார். வேலை வெட்டி செய்வதில்லை என்பது காரணமாகும். சில நேரங்களில் ஜாதகர் சிறைக்குச் செல்வதும் ஒரு காரணமாகி விடும். இவ்வமைப்பில் சுக்கிரன் இருக்க வாழ்க்கைத் துணையின் கட்டுக்கடங்காத செல வும் ஒரு காரணமாகும்.

12 ஆம் இடம், படுக்கை, தூக்கம் சம்பந்தமான ஸ்தானமாவதால் சிலர் விடயத்தில் கட்டுப்பாடற்ற உறவு நிலைகளும் விவாகரத்துக்குக் காரணமாகிவிடும். திருமண முறிவுக்கான மேலும் சில காரணங்கள். அம்சத்தில் சுக்கிரனும் செவ்வாயும் பரிவர்த்தனை ஆகியிருந்தாலும் மணமுறிவுக்கு காரணமாகிவிடும்.

குரு, செவ்வாய் பார்வை இருப்பினும் திருமண முறிவு உண்டு என்கிறனர் சிலர். 2 ஆம் இடத்தில் பாபர் இருந்தால் அவரது தசாபுத்திகள் மணமுறிவுக்கு வழி வகுக்கிறது. (ஏனெனில் 2 ஆம் வீடு என்பது 7 ஆம் வீட்டிற்கு 8 ஆம் வீடு) லக்னாதிபதியும் 7 ஆம் அதிபதியும் 6,8 என்ற நிலையில் இருப்பதும் ஒரு காரணமாகும். 7 ஆம் அதி பதி 6 அல்லது 8 ஆம் வீட்டில் இருப்பதும் மணமுறிவிற்கு ஒரு காரணமாகி விடும். களத்திர காரகன் சுக்கிரனின் நீசம் அல்லது மறைவும் காரணமாகும்.

## ஜோதிடக் களம்

8 ஆம் இடத்தில் அமர்ந்த இராகுவும் மாங்கல்ய பலத்தை பலவீனமடையச் செய்து மறுமணத்திற்கு வழிவகுப்பர். மேற்கண்டவற்றில் ஒன்று அல்லது இரண்டு விடயம் ஜாதகத்தில் இருந்தாலும் அது மணமுறிவிற்கு வழிவகுத்துவிடுகிறது.

மணமுறிவிற்கான அமைப்புள்ள ஜாதகர்களின் பெற்றோர்கள் முதலில் செய்ய வேண்டிய பரிகாரம் தாலி தானம்தான். அவரவர் வீட்டுப் பெரியவர்களிடம் கலந்து பேசி குலதெய்வக் கோவிலிலோ, பெருமாள் கோவிலிலோ அல்லது இஷ்ட தெய்வக் கோவிலிலோ தாலி தானம் கொடுக்கவும். உங்கள் பகுதியில் வசதி குறைவானவர்கள் திருமணம் செய்யும்போது அவர்களுக்கு தாலி வாங்கிக் கொடுக்கலாம். அல்லது அதற்குண்டான பணத்தைக் கொடுக்கலாம். புதுமணத் தம்பதிகளுக்கு படுக்கை விரிப்பு, தலையணையும் வழங்கலாம்.

மணமுறிவுககான காரணங்களில் 3 ஆம் இடம் மற்றும் 8 ஆம் இடம் காரணம் மட்டுமே தவிர்க்க முடியாத முறிவு ஏற்படக் கூடியதாகும். ஏனைய அமைப்பு இருந்தால் பேசித் தீர்வு காணுங்கள். முடியாத பட்சத்தில் உளவியல் சென்று பிரச்சினை யைத் தீர்க்க வழிகாணுங்கள். உப்புச் சப்பல்லாத ஈகோ பிரச்சினை காரணமாக விவாகரத்து வாங்குவது அப்போதைக்கு சரியாகத் தோன்றலாம். எதிர்காலம் எதிர் கொள்ள முடியாததாகிவிடும். (முற்றும்)

# சமுதாயத்தின் மீது தான்கொண்ட பற்றை வெளிப்படுத்திய பாரதி

## இன்று சுப்பிரமணிய பாரதியாரின் நினைவு தினம்



பாரதியாரின் பாடல்களை மேலோட்டமாக கற்றாலே அவர் சமுதாயத்தின் மீது கொண்டிருந்த அக்கறை தெளிவாக புலனாகும்.

பாரதியார் தம் காலத்து நிலைமையை **நெஞ்சு பொறுக்குதில்லையே** என்ற கவிதையில் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

ஆயினும் இன்று வரையில் அந்த நிலைமையில் மாற்றம் ஏற்பட்டதா? இல்லை. அப்படியே தான் இருக்கின்றது.

தனிமனிதன் சமூகத்தில் ஒருவன் ; குடும் பத்திலும் ஒருவன்; தனி மனிதன் தன் கடமைகளை சரிவர மேற்கொண்டால் குடும்பம் சிறக்கும். பல குடும்பங்களை உள்ளடக்கிய இந்த சமூகம் சீர்படும்.

பல சமூகங்கள் அடங்கிய இச் சமுதாயம் சிறந்து விளங்கும். பாரதி தனி மனிதனின் கடமைகள் என நான்கினைக் கூறுகின்றார்.

அக் கடமைகளாவன , தன்னைக் கட்டுதல் , பிறர்துயர் தீர்த்தல், பிறர் நலம் வேண்டுதல், உலகெல்லாம் காக்கும், ஒருவனைப் போற்றுதல் எனப்படும் இந்நான்கே இப் பூமியில் எவர்க்கும் கடமையெனப்படும்.

தன்னைக் கட்டுதல் என்பது மனதைக் கட்டுதல், ஐம்பொறி களை அடக்கி மனதைக் கட்டுதல் ஆகும்.

ஐம்பொறிகளை அடக்கி மனதைக் கட்டுதல் என்று ஞானிகள் கூறும் பொருள்பட பாரதி இதனைக் குறிப்பிடவில்லை.

பாதரசம் விழுந்தால் அங்கும் இங்குமாக உருண்டு ஓடும். இவ்வாறு பல பொருட்களின் மேல் சபலப்பட்டு அலையும் மனதை அடக்கினால் போதும் என்பதே பாரதியின் கருத்து.

மனம் சில சமயம் ஒருபொருளைப் பற்றிக் கொண்டு ஊசலாடும். அடுத்ததை நோக்கி அடுத்தடுத்து உலவும். விட்டு விடு என்று கூறினாலும் விடாது போய் அதன் மீது விழும். புதியவற்றைக் கண்டால் புலனிழந்து அவற்றின் மீது வெறி கொண்டு விழும். பிணத்தை விரும்பும் காக்கை போல அழுகுதல், சாதல், அஞ்சுதல் முதலிய இழி பொருட்களில் தன்னைப் பறிகொடுக்கும் இன்பத்தை நாடி எண்ணிலாப் பிழை செய்யும் என்றெல்லாம் மனதை பெண்ணாக உருவகித்து மனதின் தன்மைகளை எடுத்துக் காட்டி

**பேயாய் உழலும் சிறுமனமே!**<br>
**பேணாய் என் சொல் இன்று முதல்**<br>
**நீயாய் ஒன்றும் நாடாதே**<br>
**நினது தலைவன் யானே காண்.**

என்று மனதை நன்னெறிப் படுத்த விளைகிறார் புரட்சிக் கவிஞர்.

பிறர் துயர் தீர்த்தல் என்பது மற்றொரு கடமையாகக் கூறப்படுகின்றது. அன்பர் பணி செய்ய எம்மை ஆளாக்கி விட்டால் எமக்கு இன்ப நிலை வந்து விடும் என்று இன்ப நிலை காண இதன் மூலம் வழிகாட்டுகிறார் கவிஞர்.

**மண்ணி லார்க்கும் துயரின்றிச் செய்வேன்**<br>
**வறுமையென்பதை மண்மிசை மாய்ப்பேன்**

என்று பிறர் துயர் தீர்ப்பதை கடமையாக உரைக்கின்றார். பிறர் நலம் பொருட்டே பாரதி இறைவனைப் பல இடங்களில் வேண்டுகின்றார். மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்பதை இறுதிக் குறிக்கோளாக கொள்ள வேண்டும் என்று தெளிவாக எடுத்துரைக்கின்றார்.

சமுதாயத்தில் எத்தனையோவகைகளில் பல்வேறு கேடுகளை காண்கிறார் பாரதி. நாட்டு மக்களிடையே காணப்படும் கேடான நிலைமைகளை அவர் எடுத்துக் காட்டுகின்றார்.

பாரதியார் கருத்துப் படி கிருதாயுக சமுதாய அமைப்புக்கு அரணாக அமைந்தவை நான்கு மறைகளும் சாஸ்திரங்களுமே.

ஆனால் இறைவனை இணைத்து அந்த (மறைகள்) வேதங்களில் பல பொய்மைகள் புகுத்தப்பட்டு விட்டதாக அவர் கருதுகின்றார்.

**வேதங்கள் கோர்த்து வைத்தான்– அந்த**<br>
**வேதங்கள் மனிதர் தம் மொழி யிலில்லை**<br>
**வேதங்கள் என்று புவியோர் – சொல்லும்**<br>
**வெறுங் கதைத் திறன்களில் அவ் வேதமில்லை**

என்று அவற்றை சாடுவதை இதில் காண்பார்.

இத்தகைய போலிச் சாஸ்திரங்களை நம்பி மக்கள் தம் வாழ்வை பாழடித்து வருவைத இன்றும் காண்கின்றோம். விஞ்ஞானம் வளர்ந்து விட்ட இக்காலத்தில்கூட பேய்கள் இருப்பதாகவும் அவை மரத்தில், குளத்தில் , வீட்டின் முகட்டில் நடமாடுவதாகவும் எண்ணி அஞ்சி அஞ்சி சாவதையும் மந்திரவாதி என்ற பெயரைக்கேட்ட மாத்திரத்திலேயே இவர்கள் மனக்கிலிபிடித்து ஆடி நிற்பதையும் என்னென்று சொல்வது?

**அஞ்சி அஞ்சி சாவார் இவர் அஞ்சாத பொருள் இல்லை உலகினிலே** என்னும் பாரதி கூற்றுத் தான் நினைவுக்கு வருகின்றது.

தன்னாட்டுப் பற்றும் தன்னாசாரப் பற்றும் தன் மொழிப்பற்றும் இருக்க வேண்டிய இடத்தில் அவையெல்லாம் போலி வடிவங்கள் எடுத்து கூத்தாடுகின்றன.

இத்தனை துன்பங்கள் ஏற்பட்டு விட்ட போதிலும் சாதி வெறி எனும் சாம்ராஜ்யம் மறைந்த பாடில்லை. மக்கள் தமக்குள்ளேயே ஒரு பகுதியினரை தீண்டத் தகாதவர் என்று ஒதுக்கி வைக்கும் மனநிலை மாறாத ஒரு சமுதாயத்துக்கு சுதந்திரம் என்பது எதற்கு?

பாரதியார் சாதிக் கொடுமையை தகர்த்தெறிய குழந்தைகளை அடிப்படையாகக் கொண்டு வழிசமைக்க ஆரம்பித்தார். பிஞ்சு மனங்களில் அவர் விதைத்த அறிவுரைகள் விழலுக்கிறைத்த நீராகின.

மூத்தவர்களின் நடத்தைக் கோலங்களை நேருக்கு நேர் காணும் குழந்தைகளுக்கு இவரின் இந்த அறிவுரைகள் கறிக்குதவாத ஏட்டுச் சுரக்காய்கள் ஆகின.

**சாதிகள் இல்லையடி பாப்பா– குலத்**<br>
**தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்!**<br>
**நீதி உயர்ந்த மதி கல்வி– அன்பு**<br>
**நிறைய உடையவர்கள் மேலோர்.**

என்ற பாடல் குழந்தைகளின் உள்ளங்களில் ஆழப்பதியும் வகையில் உணர்ச்சியோடு அமைந்துள்ளது. ஆனால் அது நீருக்குள் பாசி போல் வேர் கொள்ளாமல் கிடக்கின்றது. நாடோறும் சாதிப் பிரிவினை நிரந்தரமாகவே இருக்கும் சூழ்நிலைதான் வளர்ந்து கொண்டு வருவதைக் காண்கின்றோம். ஆரோக்கியமான சமுதாயம் ஒன்று உருவாவதற்கு இந்தச் சிந்தனை உதவாது. பாரதியின் மேல் மனதில் எப்போதும் சமூகத்தில் நிலவும் கேடுகள்தோன்றிக் கொண்டேயிருந்தன.

அவர் உள் மனம் அவைக்குரிய தீர்வுகளை (கழுவாய்) சிந்தித்துக் கொண்டே இருந்தது. இதன் காரணமாகவே அவர் எவை பற்றிப் பாடினும் அவற்றுள் சமுதாயம் பற்றிய எண்ணம் நிழலிடுவதைக் காணலாம். ரஷ்ய புரட்சியை மகா காளி பராசக்தியின் கடைக்கண் நோக்கு என்றே அவர் கருதினார். அதனால்தான் அங்கு ஆகாவென்றெழுந்ததுபார் யுகப் புரட்சி என்று சங்குநாதம் செய்தார்.

பாரதியாரை நினைக்கும் இந்நாளில் பாரதி கண்ட கனவுகளை நனவாக்க அனைவரும் உழைத்திடல் வேண்டும். வெற்றுக் கோஷங்கள் எதனையும் செய்து விடாது இதய சுத்தியுடன் செயற்படக் கூடியவர்கள் ஒன்றிணைந்து தான் தமிழ் சமுதாயத்திற்கு புதிய பாதை காட்ட வேண்டும்.


**ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு** என்பது எக்காலத்திலும் எந்த விடயத்திலும் பொருந்தி நிற்கும். தனி மனித நலன்களுக்காக ஒரு சமுதாயத்தை அழிவுப்பாதை க்கு இட்டுச் செல்லலாமா?

இளைஞர்களே! பாரதியின் சிந்தனையில் இருந்த ஆழமான கருத்துக்களை ஒரு கணம் எண்ணிப் பாருங்கள்; செயற்படுங்கள். தமிழர் வாழ்வு சிறக்க வழி பிறக்கும்.

**சொல்லின் செல்வர்**<br>
**இரா.செல்வவடிவேல்**

# இந்தியாவை மையப்படுத்தி சீனாவும் பாகிஸ்தானும் காய் நகர்த்தல்...

இலங்கை கடற்படைக்கு இரண்டு ஆழ்கடல் ரோந்துக் கப்பல்களை இந்தியா கட்டிக் கொடுக்கப்போவதான தகவல், மீண்டும் ஒரு சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இலங்கைக்கு எத்தகைய இராணுவ உதவிகளையும் இந்தியா வழங்கக் கூடாது என்றும் அதனுடனான இராணுவத் தொடர்புகளை முறித்துக் கொள்ள வேண்டும் என்றும் தமிழ்நாட்டில் தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டுவரும் நிலையிலேயே இந்தப் போர்க்கப்பல்களை இந்தியா வழங்கப் போகிறது. இலங்கைக் கடற்படையின் ஆழ்கடல் கண்காணிப்புத் திறனை அதிகரித்துக் கொள்வதற்காகவே இந்த இரண்டு போர்க் கப்பல்களும் இந்தியாவினால் வழங்கப்படவுள்ளன. இலங்கயின் ஆழ்கடல் கண்காணிப்புத் திறனை அதிகரித்துக் கொள்வதற்கு இந்தியா உதவிகளை வழங்குவது இதுதான் முதல்முறை அல்ல.



விடுதலைப்புலிகள் 2000 ஆம் ஆண்டு ஓயாத அலைகள்– 3 நடவடிக்கையின் மூலம் வடக்கில் தம்மை நிலைப்படுத்திக்கொண்ட பின்னர் இந்தியா முதலாவதாக சுகன்யா வகையைச் சேர்ந்த ஆழ்கடல் ரோந்துக்கப்பலை இலங்கைக் கடற்படைக்கு வழங்கியது இந்தக் கடற்படையில் ஐ.என்.எஸ் சயுர என்ற பெயருடன் இருந்த 101 மீற்றர் நீளமான இந்தப் போர்க்கப்பல் இலங்கைக்கு வழங்கப்பட முன்னர் பல நவீன கண்காணிப்பு தாக்குதல் வசதிகள் செய்துகொடுக்கப் பட்டன. இலங்கைக் கடற்படையில் அந்தப் போர்க்கப்பல் சயுர என்ற பெயருடன் செயற்பட்டு வருகிறது. அதன்பின்னர் 2007இல் போர் உச்சக் கட்டத்தை எட்டியபோது இந்தியக் கடலோரக் காவற்படையிடம் இருந்த வரஹா என்ற ஆழ்கடல் ரோந்துக் கப்பலை இலங்கைக்கு குத்தகைக்கு வழங்கியது இந்தியா. 74 மீற்றர் நீளம் கொண்ட விக்ரம் வகையைச் சேர்ந்த இந்தக் கப்பலுக்கு இலங்கைக் கடற்படை சாகர என்று பெயரிட்டது. இந்த இரண்டு போர்க்கப்பல்களும் விடுதலைப் புலிகளுக்கெதிரான போரில் முக்கிய பங்கை வகித்திருந்தன. 2000 ஆம் ஆண்டு நவம்பரில் இலங்கைக் கடற்படைக்கு வழங்கப்பட்ட சயுர போர்க்கப்பல், கடற்புலிகளின் ஆழ்கடல் நடவடிக்கைகளுக்கு, குறிப்பாக போர் நிறுத்த காலத்தில் அவர்களின் ஆயுதக் கப்பல்களுக்கு பெரும் சவாலாக இருந்தது. போர் நிறுத்தம் நடைமுறையில் இருந்த போது விடுதலைப்புலிகளின் ஆயுதக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்ட தாக்குதல்களில் சயுர முக்கிய பங்கு வகித்தது. 2006 இல் போர் தொடங்கிய பின்னரும் அடுத்தடுத்து விடுதலைப்புலிகளின் ஆயுதக்கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்ட தாக்குதல்களிலும் சயுரவுக்கு முக்கியமான பங்கு இருந்தது.

2007 இல் இந்திய கடலோரக் காவற்படை வழங்கிய சாகரமும் இலங்கைக் கடற்படையில் இணைக்கப்பட்ட பின்னர் கடற்புலிகளின் ஆழ்கடல் நடவடிக்கைகளுக்கு பெரும் சவால் ஏற்பட்டது. போருக்குத் தேவையான ஆயுதங்களை கடல்வழியாக கொண்டுவர முடியாமல் தடுக்கப்பட்டது. கடல்வழி முற்றுகை மூலம் கடற்புலிகளின் செயற்பாடுகள் முடக்கப்பட்டமை ஆகியவற்றுக்கு இந்தியா வழங்கிய இந்த இரண்டு கப்பல்களும் முக்கிய காரணமாகியது. இது விடுதலைப்புலிகள் தோல்வியை சந்திப்பதற்கான முக்கிய காரணங்களில் ஒன்று.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் இராணுவ ரீதியாக எந்த உதவிகளையும் வழங்கவில்லை; தமக்கு எந்தப் பங்கும் கிடையாது என்று இந்தியா கூறிவந்தாலும் இரண்டு போர்க்கப்பல்களும் போரை முடிவுக்குக் கொண்டுவர கணிசமான உதவிகளை வழங்கியதை மறுக்க முடியாது. இப்போது போர்ச்சூழல் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட நிலையிலும் இலங்கைக் கடற்படை ஆழ்கடல் கண்காணிப்புத் திறனை மேலும் அதிகரித்துக் கொள்வதில் அக்கறை செலுத்தி வருகிறது. இரண்டு ஆழ்கடல் கண்காணிப்புக் கப்பல்களை வாங்கப்போவதாக இலங்கைக் கடற்படை நீண்டகாலமாகவே கூறிவந்த போதிலும் இந்தியாவே, அவற்றை வழங்கப் போகின்றது என்ற தகவல் இப்போதுதான் கசிந்துள்ளது.

கோவாவிலுள்ள அரச பாதுகாப்புத்துறை சார் நிறுவனமான பி.எஸ் யு. கோவா சிப்பிங் யார்ட் நிறுவனமே இந்த இரண்டு போர்க் கப்பல்களையும் 2017-2018 காலப்பகுதிக்குள் கட்டிக்கொடுக்கவுள்ளது.

இந்தியா, ஏற்கனவே வழங்கிய சுகன்யா -விக்ரம் வகை போர்க்கப்பல்களைவிட இப்போது வழங்கவுள்ள சயுர வகைப் போர்க்கப்பல்கள் அளவில் பெரியவை 2300 தொன் எடையும் 105 மீற்றர் நீளத்தையும் கொண்டவையாக இவை இருக்கும்.

110 கடற்படையினர் பணியாற்றும் இந்தப் போர்க்கப்பல்களில் ஒரு ஹெலிகொப்டர் மற்றும் நவீன ஆயுதங்கள் பொருத்தப்பட்டிருக்கும். இந்த உடன்பாடு எத்தனை மில்லியன் டொலர் பெறுமதி கொண்டது என்ற தகவல் இன்னமும் வெளியாகவில்லை.

இலங்கையுடன் இரண்டு விதமான பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ள சூழலில்தான் இந்தியா இந்தப் போர்க்கப்பல்களை விற்கும் முடிவை எடுத்துள்ளது.

முதலாவது பிரச்சினை – போரில் பல்லாயிரக்கணக்கான தமிழர்களைக் கொன்ற இலங்கைக்கு இராணுவ உதவிகளை வழங்கக் கூடாது; அதனுடன் பாதுகாப்பு உறவுகளை வைத்துக் கொள்ளக் கூடாது என்று தமிழ் நாடு எழுப்பிவரும் குரல்.

இரண்டாது பிரச்சினை– தமிழக மீனவர்கள் மீதான இலங்கைக் கடற்படையின் நடவடிக்கைகள்.

இலங்கையுடன் பாதகாப்பு உறவுகளை வைத்துக்கொள்ளக் கூடாது என்றும், இராணுவ உதவிகளை வழங்கக் கூடாது என்றும் தமிழகத்தில் இருந்து கோரிக்கைகள் விடுக்கப்பட்டாலும் அதை இந்திய அரசாங்கம் காதில் போட்டுக்கொள்வதேயில்லை. இலங்கைக்கு உதவிகள் தேவைப்படும் போதெல்லாம் ஓடிச் சென்று உதவியுள்ளது.

கடற்புலிகளை ஒடுக்க போர்க்கப்பல்களை வழங்கியதுபோன்று விடுதலைப்புலிகளின் வான் தாக்குதல் அச்சுறுத்தல்களை முறியடிக்கத் தேவையான இந்திரா ரக ரேடர்களையும் விமான எதிர்ப்பு பீரங்கிகளையும் இலங்கைக்கு வழங்கியிருந்தது. போர் முடிவுக்கு வந்தபின்னர், இலங்கைப் படையினருக்கு இந்தயாவில் பயிற்சி அளிக்கக்கூடாது என்று தமிழ் நாட்டில் எத்தனையோ போராட்டங்கள் நடத்தப்பட்ட போதிலும், **ஆண்டுக்கு 800 இற்கும் அதிகமான இலங்கைப் படையினருக்கு அளித்துவரும் பயிற்சிகளை இந்தியா இன்னமும் நிறுத்தவில்லை.** தமிழ்நாட்டில் பயிற்சி அளிக்கப்படாது என்ற உத்தரவாதத்தை மட்டுமே இப்போதைக்கு இந்திய அரசு வழங்கியுள்ளது. வழக்கம் போலவே இலங்கைக் கடற்படையும் இந்தியக் கடற்படையும் போர்ப்பயிற்சிகளை நடத்துகின்றன. தமிழ் நாட்டிலிருந்து வலுவான குரல்கள் எழுந்தாலும் கூட இலங்கைக்கான இராணுவ உதவிகளை வழங்குவதிலும் அதனுடன் பாதுகாப்பு உறவுகளை வளர்த்துக் கொள்வதிலும் இந்தியா ஒருபோதும் பின் நிற்கவில்லை.

மீனவர்கள் தாக்கப்படும் விவகாரம் தமிழகத்தில் பெரும் பிரச்சினையாக உருவெடுத்திருந்தாலும் அதற்காக இலங்கைக் கடற்படையுடன் உறவுகளை துண்டித்துக்கொள்ள இந்தியா தயாராக இல்லை.

கச்சதீவு விவகாரத்தில் கூட, இந்திய மத்திய அரசு தமிழ்நாட்டைக் கோபத்துக்குள்ளாக்கும் முடிவைத்தான் எடுத்துள்ளது.

கச்சதீவு இந்தியாவுக்குச் சொந்தமானதல்ல என்று வரலாற்றுக்கு முரணான கருத்தை இந்திய அரசு வெளியிட்டுள்ளது.

இதுகூட இலங்கை அரசுக்கு மிகவும் சாதகமானதொன்று என்பதில் சந்தேகமில்லை.

இலங்கைக் கடற்படையால் தமது நாட்டு மீனவர்கள் பாதிக்கப்படுகின்றனர் என்பதை அறிந்திருந்தும், இலங்கைக்கு இராணுவ உதவிகள் வழங்கப்படுவதை தமிழ்நாடு விரும்பவில்லை என்பதை உணர்ந்திருந்தும் இந்தியா எதற்காக இலங்கையுடன் ஒட்டிக் கொண்டு நிற்கிறது என்ற கேள்வி பலரிடம் உள்ளது.

இந்தியாவைப் பொறுத்தவரையில் இலங்கையுடன் தந்திரோபாயமான உறவுகளையும் தொடர்புகளையும் வைத்துக்கொள்ளும் முடிவை எடுத்துள்ளதாகவே தெரிகிறது.

இலங்கை ஊடாக இந்தியாவுக்குப் பல பிரச்சினைகள் உள்ளன.

வடக்கே எல்லை வழியாக தொல்லை கொடுக்கும் சீனா, தெற்கே இலங்கை வழியாகவும் இந்தியாவின் கால்களை சுரண்டுகிறது.

எப்போதும் கோபத்தைக் கிளறும் பாகிஸ்தானும்கூட, இலங்கையை இந்தியாவுக்கு எதிரான களமாகப் பாவிக்கிறது என்ற சந்தேகம் இந்தியாவுக்கு உள்ளது.

சீனாவுடன் இலங்கை கொண்டுள்ள உறவுகள் நாளுக்கு நாள் புதிய புதிய வடிவங்களில் விருத்தி பெற்று வருகிறது.

இந்தியா எதிர்பாராத துறைகளிலெல்லாம் இலங்கையில் சீனா கால் பதிக்கத் தொடங்கியுள்ளது.

இதெல்லாம் வெறும் வியாபார நோக்கம் தான் என்றும் இந்த உறவுகளுக்கு இராணுவ நோக்கம் கிடையாது என்றும் இலங்கையும் சீனாவும் எத்தனை முறை சொன்னாலும் இந்தியா அதை நம்பத்தயாராக இல்லை.

இந்தியாவின் பாதுகாப்பு வல்லுனர்களில் ஒருவரும் பாதுகாப்பு கொள்கை ஆய்வு மையத்தின் பேராசிரியருமான பாரத் கர்நாட், அண்மையில் புதுடெல்லியில் பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் பேசும்போது கூட, இலங்கையில் சீனாவின் செல்வாக்கு அதிகரித்து வருவது குறித்து இந்தியா கவலை கொள்ளாமல் இருக்க முடியாது என்று கூறியுள்ளார். இந்தியாவின் பின்வாசல் என்று அவர் இலங்கையைச் சுட்டிக்காட்டியுள்ளார். ஆனால், கடந்த வாரம் கொழும்பில் நடந்த இராணுவக் கருத்தரங்கில் பேசிய சீனாவின் மூத்த இராணுவ அதிகாரியான கேணல் சூ ஹுய்யும் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவும் இலங்கையுடன் சீனா கொண்டுள்ள உறவு குறித்து யாரும் கவலைப்பட வேண்டியதில்லை என்று குறிப்பிட்டுள்ளனர்.

இலங்கையில் சீனாவின் தலையீட்டை முறியடிப்பதற்கு இந்தியாவுக்கு வேறு வழியுமில்லை. இந்தியா இந்தப் போர்க்கப்பல்களை இலங்கைக்கு வழங்க மறுத்தால் சீனாவிடம் அவற்றை வாங்கும். எனவே, தந்திரோபாயமாக நடந்துகொள்ள முனைகிறது இந்தியா. அதுபோலவே பாகிஸ்தான் உளவுப் பிரிவின் செல்லப்பிள்ளைகளாகவுள்ள தீவிரவாத அமைப்புகள் இந்தியாவுக்குள் ஊடுருவ இலங்கையைத் தளமாகப் பயன்படுத்த முனைகின்றன என்ற சந்தேகமும் இந்தியாவிடம் உள்ளது. அதை முறியடிக்க வேண்டுமானால் இலங்கையுடன் நெருக்கமான புலனாய்வுத் தொடர்புகள் அவசியம் என்று இந்திய பாதுகாப்பு நிபுணர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

இத்தகைய கட்டத்தில் இந்தியா தனது பிரதான சவால்களான, சீனாவையும் பாகிஸ்தானையும் வைத்தே இலங்கையுடனான உறவுகளைத் தீர்மானிக்க முற்படுகிறது. இலங்கையை விடவும் இந்த இரண்டு நாடுகளும் மிகப் பெரியவை என்பதுடன் இந்தியாவுக்கு பெரும் அச்சுறுத்தலையும் ஏற்படுத்தக்கூடியவை. இதனால்தான், தமிழ்நாட்டின் எதிர்க்குரலையும் இந்தியா புறந்தள்ளிக் கொண்டு இலங்கைக்கு உதவ முன்வருகிறது. இந்நிலையில், இந்தியாவை மையப்படுத்தி சீனாவும் பாகிஸ்தானும் நகர்த்தும் காய்களால் இலங்கையின் பாடுதான் கொண்டாட்டம்.

-சுபத்ரா-

# ஸ்ரீலஸ்ரீ காகபுஜண்டர் தலையாட்டி சித்தரின் காலஞானம்



ஆன்மீகம் 113

சித்தர் பெருமான் கூறிய அருள்வாக்கு:

ஒவ்வொரு 2010 வருடங்களுக்கு ஒரு பூலோக பிரளயகாலம், ஒவ்வொரு பிரளயகாலத்திற்கும் ஒரு சிவன் புதிதாய் அவதாரம் செய்வார். அதுபோலவே பிரம்மா, விஷ்ணுவும் ஆகும். இதேபோல் ஒவ்வொரு ஏழரை லட்சம் கோடி காலமாய் யுகயுகமாய் பிரளயத்தைக் கண்டு வரும் பூலோக இந்திரன் என்று தேவர்களால் புகழ்ந்தும் மந்திரசக்தி, இந்திர சக்தி, எந்திரசக்தி, தந்திர சக்திகளுக்கு அப்பாற்பட்ட வருமான ஸ்ரீல ஸ்ரீ காகபுஜண்ட மகரிஷியாய், ஸ்ரீ அகத்தியராகவும், ஸ்ரீபோகர், ஸ்ரீகொங்கணர் என்றும், துர்க்கை சக்தி, அஷ்டலெச்சுமி சக்தி என பல அவதாரங்களைப்பெற்று ரிஷிகளுக்கென்றே உள்ள பிரம்மரிஷி மலையின் நாயகனாய் விளங்கும் ஸ்ரீ ல ஸ்ரீ தலையாட்டிச் சித்தர் பெருமான் சித்தர்களாய், ரிஷி, யோகி, ஞானிகளாய் தர்ம சிந்தனையுடைய மக்களின் மக்களாகிய 1 கோடி ஜீவ வித்துக்களை பூமி அழிவிலிருந்து காக்கவே கூறியது.

முன்பு ஒரு காலத்தில் சிவனுக்கு சந்தேகம் ஏற்பட்டது. நாம் எப்படி சிவபெருமான் என்ற பதவிக்கு வந்தோம்! இதற்கு யார் காரணம்? அப்போது அவர் ஆழ்ந்து சிந்தித்திருந்த வேளையில் ஒரு முடிவிற்கு வந்தவராய் படைக்கும் கடவுள் பிரம்மாவைக் கேட்டால் தெரிந்து விடும் என்று நினைக்கும் போது பிரம்மா அங்கே வந்துவிட்டார். பிரம்மா என்னை சிவபதவியில் வைத்தது யார்? நான் எப்படி சிவம்



சித்தர் ஆச்சிரமத்தில் அன்னை சித்தர், தியாகிகளுடன் அன்னக்கொடி ஏற்றுதல்

ஆனேன்? என்றார்.

உடனே பிரம்மா அதே கேள்வியைத் தான் நான் உங்களிடம் கேட்க நினைத்தேன்? நான் எப்படி பிரம்மா ஆனேன்?

நம் இருவருக்கும் தெரியவில்லை என்றால் காக்கும் கடவுள் விஷ்ணுவைக் கேட்போம் என்று கூற விஷ்ணுவும் அங்கு வந்தார். விஷ்ணு உடனே நானும் உங்களை இதே கேள்வியைத்தான் கேட்க வேண்டுமென்று இருந்தேன் சரி மூவருக்கும் தெரியவில்லையென்றால் நமக்கு முன்னால் இருக்கும் ரிஷி, சித்தர்களையாவது கேட்போம் என்று சித்தர்கள், ரிஷிகள், முனிவர்கள் சபைக்கு வந்து கேட்ட ரிஷிகள், முனிவர்கள், சித்தர்களும் விழிக்க உடனே மார்க்கண்டேய மகரிஷி வந்து! இந்த ரகசியங்களை தெரிந்தவர் பூலோகத்தில் ஒரு கிழ முனி, பழமுனி இருக்கிறார் என்று சொல்லிட அவரை அழைக்க வசிட்டர் மட்டுமே செல்ல முடியும்.

ஏனென்றால் புஜண்டர் சாய்கையே வசிட்டர்தான் என்றதும் சிவன் சிந்திக்க.

வசிட்டர் சபைக்கு வந்து, சிவனின் நிலை அறிந்து பூலோகம் சென்றார். ஆலிலை மேல் பள்ளி கொண்டு காகம் வடிவாய் இருக்கும் புஜண்டர் நோக்கி தந்தையே! தந்தையே என்று கூறி அழைக்க பேய் பிடித்தவர் வார்த்தை சொல்ல வந்தரே வாரும்! வாரும்! வசிட்டரே இதே கேள்வியை எட்டுமுறை பிறந்து வந்து கேட்கிறாய், என்னை இந்த கேள்வியை கேட்க சொன்ன சிவன் எத்தனை சிவனுக்குப் பிறகு வந்த சிவன் என்று அவரிடமே கேட்டு வாரும்! என்றதும் வசிட்டர் நடுநடுங்கி சிவனிடம் வந்து சொல்ல! எல்லோரும் ஆச்சரியத்துடன் காகபுஜண்டரிடம் வர நினைத்தனர். அதற்குள் அவர்கள் எதிரில் புஜண்டரே தோன்றி கூறினார். (தொடரும்)

அன்னை சித்தர்
இராஜ்குமார் குருஜி

# சிரியா மீதான அமெரிக்காவின் எச்சரிக்கை, இலங்கைக்குமா!

சிரிய பிரச்சினையில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கடந்த வாரம் வெளியிட்ட கருத்து இலங்கை அரசாங்கத்துக்கும் சற்று உதறல் எடுக்கக் கூடியதுவிடயம்தான்.

இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்திய சிரியாவை தண்டிக்கும் உரிமை அமெரிக்காவுக்கு உள்ளது. ஐ.நா. பாதுகாப்பு சபையில் ரஷ்யாவைக் கவசமாகப் பாவித்து சிரியா தப்பிக் கொள்ள முனைவதை அனுமதிக்க முடியாது. பாதுகாப்புச் சபையின் அனுமதியைப் பெறாமலேயே சிரியா மீது தாக்குதல் நடத்துவோம். எந்த நாடும் ஐ.நா.வைக் கேடயமாகப் பயன்படுத்திக் கொள்வதைப் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. இவ்வாறு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா குறிப்பிட்டது, நேரடியாக இலங்கையுடன் சம்பந்தப்பட்ட விவகாரம் அல்ல.

ஆனால், ஐ.நா. பாதுகாப்புச் சபையை கவசமாகப் பயன்படுத்தி தப்பிக்கொள்ளலாம் என்ற இலங்கை அரசின் நினைப்பில் இது மண் போட்டு விடக்கூடிய கருத்து. ஏனென்றால், ஐ.நா. பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பு நாடுகளான சீனாவும் ரஷ்யாவும் தமது பக்கத்தில் நிற்கின்றன என்ற துணிச்சலில் தான், இலங்கை அரசாங்கம் இதுவரை செயற்பட்டு வந்துள்ளது.

ஐ.நாவினது, அமெரிக்காவினது, மேற்குலகினது பல கோரிக்கைகளை நிராகரித்ததற்கும் அழுத்தங்களைத் தூக்கியெறிந்ததற்கும் இலங்கை அரசாங்கத்துக்கு அடிப்படைப் பலத்தைக்கொடுத்தது, இந்த ஐ.நா. பாதுகாப்புச் சபை தான்.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான போர் இறுதிக்கட்டத்தை அடைந்திருந்தபோது போர் நிறுத்தம் செய்யுமாறு ஐ.நா.வும் அமெரிக்காவும் பிற நாடுகளும் விடுத்த வேண்டுகோள்களை இலங்கை அரசாங்கம் உறுதியாக நிராகரித்திருந்தது.

போர் முடிவுக்கு வந்த பின்னர் வவுனியாவில் முகாம்களுக்குள் அடைத்து வைக்கப்பட்டிருந்த தமிழர்களை விடுவிக்கவும் வேறு மனிதாபிமானத் தேவைகளை நிறைவேற்றவும் மனித உரிமைகளை உறுதிப்படுத்தவும் கொடுக்கப்பட்ட அழுத்தங்கள் குறித்தும் அரசாங்கம் அலட்டிக்கொள்ளவேயில்லை.

சர்வதேச அரங்கில் எந்த நெருக்கடி ஏற்பட்டாலும் சீனாவும் ரஷ்யாவும் தோள் கொடுப்பார்கள் என்ற தைரியத்தில் யாராக இருந்தாலும் தூக்கியெறியத் தயங்கியதில்லை இலங்கை அரசாங் கம்.


ஐ.நா. பொதுச்செயலர் பான்கீ மூன் நியமித்த நிபுணர் குழு சர்வதேச போர்க்குற்ற விசாரணையை நடத்த வேண்டும் என்று வலியுறுத்தியிருந்த போதிலும், அவரோ அல்லது ஐ.நாவோ அதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொள்ளாது தள்ளிப் போட்டதற்கும் காரணம் ரஷ்யாவும் சீனாவும் தான்.

ஐ.நா. பாதுகாப்புச் சபையின் அனுமதியுடன் தான் சர்வதேச போர்க்குற்ற விசாரணைக்கு உத்தரவிட முடியும் என்ற நிலையில் தான் அந்த அறிக்கையின் பரிந்துரையை ஐ.நா. பாதுகாப்புச்சபைக்கு அனுப்புவதைத் தவிர்த்திருந்தார் பான்கீ மூன்.

கடைசியான வேறு வழியின்றி அதை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கு அனுப்பி விட்டு பான் கீ மூன் தனது பொறுப்பு முடிந்து போனதாக நழுவிக்கொண்டார்.

அந்த அறிக்கையை வைத்து நவநீதம்பிள்ளையாலும் ஒன்றும் செய்ய முடியவில்லை.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்த இரண்டு தீர்மானங்கள் பெரும்பான்மை நாடுகளின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்ட போதிலும் அந்தத் தீர்மானங்களை நிறைவேற்றுவதற்காக அமெரிக்கா



கூட தனது நிலையில் இருந்து இறங்கிப்போக வேண்டியிருந்தது.

அதனால் அமெரிக்கா எதிர்பார்த்தது போன்று கடுமையான தீர்மானங்களை இலங்கைக்கு எதிராக கொண்டு வர முடியவில்லை.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் ரஷ்யாவுக்கும் சீனாவுக்கும் வீட்டோ அதிகாரங்கள் இல்லாவிடினும் இலங்கை அந்த நாடுகளின் செல்வாக்கைப் பயன்படுத்தி தப்பிக்கப் பார்த்தது உண்மை.

இரண்டு தீர்மானங்களின் போதும் இலங்கையைக் காப்பாற்ற சீனா உச்சக்கட்ட முயற்சிகளை எடுத்திருந்தது. இரண்டு தடவைகள் இலங்கைக்கு எதிரான தீர்மானங்களை நிறைவேற்றிய அமெரிக்காவுக்கு இனி அடுத்து என்ன செய்வது என்ற குழப்பம் இருக்கவே செய்கிறது.

-ஹரிகரன்- (தொடரும்)

# எதிர்க்கட்சியிலிருந்த போது பேசியதை அமைச்சரவையிலிருந்து பேச முடியாது

## அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு



**(கொழும்பு) பல இலட்சம் மக்களின் வாக்கு வங்கியைக் கொண்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய எமது அமைப்பை எவரும் வெறும் கிள்ளுக்கீரையாக எடைபோடமுடியாது. அமைச்சரவையில் இருந்துகொண்டு அனைத்தையும் பேசமுடியாது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.**

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

நான் எதிர்க் கட்சியிலும் இருந்துள்ளேன், அரசின் அங்கத்தவனாகவும் இருந்துள்ளேன், சுயாதீன முடிவெடுக்கக் கூடிய நான் அரசின் பங்காளியாகவும் இருந்துள்ளேன்.

இவை அனைத்திலும் ஒரேவிதமாக என்னால் பேச அல்லது நடந்து கொள்ள முடியாது. எதிர்க்கட்சியில் இருந்தபோது பேசிய பேச்சுக்களை அமைச்சரவையில் அங்கத்தவனாக இருந்து கொண்டு பேசமுடியாது.

எனவே, சந்தர்ப்பங்கள் சூழ்நிலைகளின்படி செய்ய வேண்டியவற்றை நான் செய்து கொண்டுதான் இருக்கிறேன்.

உணர்ச்சி ததும்பும் வசனங்களை விட, எந்நேரத்தில் எது செய்ய வேண்டுமோ அதனை மேற்கொள்ளும் பக்குவம் எம்மில் வளர வேண்டும்.

இலங்கையிலுள்ள சக்தி மிக்க ஒரு அமைப்பான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அதனைச் செய்து வருகிறது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இன்று 8 பாராளுமன்ற அங்கத்தவர்களையும் 40இற்கும் மேற்பட்ட உள்ளூராட்சி சபை அங்கத்தவர்களையும் ஐந்து உள்ளூராட்சி அமைப்புக்களின் தலைவர்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

மேலும்' இது பல இலட்சம் மக்களின் வாக்கு வங்கியைக் கொண்ட ஒரு அமைப்பாகும்.

எனவே, எமது அமைப்பை எவரும் வெறும் கிள்ளுக் கீரையாக எடைபோடமுடியாது.

உணர்ச்சிவசப்பட்டுகடும்வார்த்தைகளைப் பேசி மக்களை மகிழ்விக்க முடியும். அப்படி பேசித் தீர்ப்பதை விட, சந்தர்ப்ப சூழ்நிலைகளை அனுசரித்து அதற்கேற்ப பேசுவதுதான் புத்திசாலித்தனம்.

வீரவசனம் பேசி வாக்குக் கேட்க முடியும். ஆனால் ,அது காத்திரமானதாகாது. இன்று சில அரசியல் சக்திகள் எதற்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை விமர்சித்து வருகின்றன.

அப்படி நாம் எதிர்மறையாக எதனையும் செய்தவர்கள் அல்லர். ஆனால், அண்மித்த காலப் பகுதியில் அரசு சில நெருக்கடிகளை சந்தித்துள்ளது.

அத்தகைய சந்தர்ப்பங்களில் அதற்கு உதவுவது ஒரு புறம் இருக்க, மறுபுறமாக நாம் கூட்டுப் பொறுப்புடன் நடந்து கொள்ளவேண்டி உள்ளதே தவிர ஏனையவர்கள் இதனை விமர்சிக்கும் கோணம் தவறானது என்றார். (அ-2)

# கூட்டமைப்பின் விஞ்ஞாபனத்திற்கு எதிராக உச்ச நீதிமன்றில் வழக்கு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் வடமாகாண சபைத் தேர்தலை முன்னிட்டு வெளியிட்டுள்ள விஞ்ஞாபனத்திற்கு எதிராக சட்டத்தரணிகள் பேரவை வழக்குத் தொடரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கூட்டமைப்பின் தேர்தல் கொள்கைப் பிரகடனத்திற்கு எதிராக உச்ச நீதிமன்றில் மனுவொன்றை தாக்கல் செய்யவுள்ளதாக சட்டத்தரணிகள் பேரவையின் அழைப்பாளர் கபில கமகே தெரிவித்துள்ளார்.

செத்சிறிபாயவில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்ற போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

நாட்டின் எந்தவொரு தேர்தலிலும் போட்டியிட்டு வெற்றியீட்டுவோர் அரசியல் அமைப்பைப் பேணிப் பாதுகாப்பதாக வாக்களிக்க வேண்டியது அவசியமானது.

எனினும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொள்கைப் பிரகடனம் அரசியல் அமைப்புக்கு புறம்பானது. தனி இராச்சிய கோரிக்கையை முதனிலைப்படுத்தி கூட்டமைப்பு இக் கொள்கைப் பிரகடனத்தை வெளியிட்டுள்ளது.

சுயாட்சி அதிகாரம், வடக்கு-கிழக்கு மீள இணைவு உள்ளிட்ட பல்வேறு அரசியலமைப்புக்கு முரணான விடயங்கள் கொள்கைப் பிரகடனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

தேர்தலில் வெற்றியீட்டினால், வடக்குமாகாண மக்களின்ஆணையை சர்வதேச சமூகத்திற்கு காண்பித்து தனி இராச்சியமொன்றை அமைக்கும் முனைப்புக்களை கூட்டமைப்பு மேற்கொள்ளும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# தங்க பிஸ்கட்டுக்களை கடத்த முயன்றவர்கள் கைது

(கொழும்பு)

இலங்கையிலிருந்து தங்க பிஸ்கட்டுக்களையும் அமெரிக்க டொலர்களையும் சென்னைக்கு கடத்த முற்பட்ட மூவர், கட்டுநாயக்க விமான நிலைய சுங்க பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் மட்டக்குளியைச் சேர்ந்த 30 வயதான நபர் ஒருவர், கடந்த 8 ஆம் திகதி சென்னைக்கு பயணம் செய்ய விமான நிலையத்துக்கு வந்திருந்த போது, அவர் ஆணுறையை பயன்படுத்தி 2 தங்க பிஸ்கட்டுக் களை குதவழியில் மறைத்து வைத்திருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது.

சுமார் 10 இலட்சத்து 45 ஆயிரம் ரூபா பெறுமதியான 209 கிராம் எடைகொண்ட அந்த இரு தங்க பிஸ்கட்டுகளும் பறிமுதல் செய்யப்பட்டதுடன், 50 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.(அ-2)

# தமிழர் பூமியான இலங்கையை கைப்பற்ற வேண்டும்

## சுதர்சன நாச்சியப்பன் அதிரடி



தமிழர் பூமியான இலங்கையைக் கைப்பற்ற வேண்டும் என மத்திய இணையமைச்சர் சுதர்சன நாச்சியப்பன் அதிரடியாக கூறியிருப்பது காங்கிரசார் இடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சென்னை விமான நிலையத்தில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றும் போதே இவ்வாறு அவர் கூறினார். இதன் போது தமிழர்களுக்கு சொந்தமான பூமி இலங்கை என்று தெரிவித்த நாச்சியப்பன்; தொடர்ந்து கூறுகையில்,

இஸ்ரேல், பாலஸ்தீனம் போன்று தமிழர் பூமியான இலங்கையையும் கைப்பற்ற வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

தமிழீழ கனவை நாம் நனவாக்க வேண்டும் என்பதே அனைவரின் விருப்பம் என்றும் குறிப்பிட்டார். (அ-2)

# தெரிவுக்குழுவிலிருந்து யார் விலகினாலும் பணிகள் தொடரும்

(கொழும்பு)

அரசியலமைப்பு திருத்தம் தொடர்பாக பரிந்துரை செய்வதற்கென நியமிக்கப்பட்டுள்ள விசேட பாராளுமன்ற தெரிவுக்குழுவில் இருந்து தாம் ஒதுங்குவதாக ஜாதிக ஹெல உறுமய கட்சி செயலாளர் அமைச்சர் சம்பிக்க ரணவக்க அறிவித்துள்ளார்.

ஆனால், பாராளுமன்ற தெரிவுக் குழுவில் இருந்து ஒதுங்குவது குறித்த, ஹெல உறுமயவின் அறிவிப்பு தங்களுக்கு இதுவரை உத்தியோகபூர்வமாக கிடைக்கவில்லை எனவும் இதில் பங்கேற்பதும் ஒதுங்குவதும் ஒவ்வொரு கட்சியினதும் சொந்த விருப்பமாகும் எனவும் பாராளுமன்ற தெரிவுக்குழுவின் தலைவரும் அமைச்சருமான நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இது குறித்து வினவியபோது மேலும் பதிலளித்த அவர், தெரிவுக் குழுவில் யார் பங்கேற்பினும் அன்றேல் ஒதுங்கினும் எமது பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்றார். நேற்றுமுன்தினமும் பாராளுமன்ற தெரிவுக்குழுவின் அமர்வொன்று இடம்பெற்றது.

அரசியலமைப்புத் திருத்தம் குறித்து ஆராயும் இத் தெரிவுக் குழுவில் த.தே.கூ., ஐ.தே.க.,ஜே.வி.பி. ஆகிய கட்சிகள் இடம் பெறவில்லை என்பது தெரிந்ததே. (அ-2)



புனர்வாழ்வு பெற்ற 107 முன்னாள் போராளிகள் சமூகத்துடன் இணையும் நிகழ்வு நேற்றுமுன்தினம் வவுனியா நகர சபை கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற போது...

(படங்கள்:-குருமன்காடு செய்தியாளர்)

# தீவிர போராட்டத்தை முன்னெடுக்க தமிழக மீனவர்கள் தீர்மானம்

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களை விடுவிப்பதற்கென தீவிர போராட்டங்களை முன்னெடுக்கப் போவதாக தமிழக மீனவர்கள் தீர்மானித்துள்ளனரென த ஹிந்து செய்தித்தாள் தெரிவித்துள்ளது.

இலங்கையில் கைது செய்யப்பட்ட 35 இந்திய மீனவர்களின் விளக்கமறியலை இலங்கை நீதிமன்றம் எதிர்வரும் 23 ஆம் திகதி வரை நீடித்துள்ளது.

இதனை ஆட்சேபித்து தமது போராட்டங்களை முனைப்புப்படுத்தவுள்ளதாக தமிழக பாம்பன் மீனவர்கள் எச்சரித்துள்ளனர்.

இந்த 35 மீனவர்களும் கடந்த 26 ஆம் திகதி இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# இனவாத அரசியல் கட்சிகள் இனவாதத்தை கைவிடவில்லை

**இனவாதத்தினால் பாதிப்புக்களை எதிர்கொண்டு அவை மூலம் பாடங்களை கற்றுக் கொண்டாலும் சில இனவாத அரசியல் கட்சிகள் இனவாதத்தை இன்னும் கைவிடவில்லை என்று ஏகாதிபத்தியத்துக்கு எதிரான மக்கள் அமைப்பின் இணை ஏற்பாட்டாளர் தம்பர அமிலதேரர் தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் அண்மையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சில இனவாத கட்சிகளும் அரசியல் தலைவர்களும் தமது அதிகார இருப்பைத் தற்காத்து கொள்வதற்காக இனவாதத்தைப் பயன்படுத்தி வருகின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம் பிள்ளையின் கருத்துக்கள் ஆகிய இரண்டும் இலங்கையின் தேசிய பிரச்சினை மற்றும் அதன் அழுத்தங்கள் காரணமாக ஏற்பட்டவை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இனவாத கட்சி என்றும் நவநீதம் பிள்ளையை மேற்குல நாடுகளின் முகவர் என்றும் கண்டிக்காது ஆழமாக சிந்தித்து அவர்களின் கருத்துக்கள் குறித்து ஆராய வேண்டும்.

இது அவர்களின் நிலைப்பாடுகளையும் கருத்துக்களையும் ஆதரிப்பதாக அமையாது. எனினும் இவை தனிமைப்படுத்தப்பட்ட சம்பவங்கள் அல்ல. அவற்றை ஆராய்ந்து பார்க்க வேண்டிய சூழல் காணப்படுகிறது.

இலங்கையில் சிங்களம், தமிழ், முஸ்லிம் என மூன்று பிரதான இனங்கள்வாழ்கின்றன. இனங்கள் யாவும் ஒரு நாட்டின் இனமாக தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளும் அளவுக்கு ஏற்றதான செயற்பாடுகளை ஆட்சியாளர்கள்வரும்மேற்கொள்ளவில்லை.

பிரித்தானியர்கள் இலங்கையை கைப்பற்றிய பின்னர் நாட்டை முதலாளித்துவ பொருளாதாரத்துக்குள் கொண்டு சென்றனர். அத்துடன் இனங்களுக்குள் பிளவுகளை ஏற்படுத்தி இனவாத ரீதியான ஆட்சியை நடத்தினர்.

சிங்கள, தமிழ், முஸ்லிம் நிர்வாக முறைகளை ஏற்படுத்தும் போது ஆங்கிலேயர் இனவாதத்தை பயன்படுத்தினர். இதனால் இலங்கையில் சகல இனங்களும் தம்மை தனித்து அடையாளப்படுத்தி கொண்டனவே அன்றி இலங்கையர் என்ற எண்ணம் அவர்களுக்குள் ஏற்படவேயில்லை.

இந்நிலையிலேயே இனங்களுக்கு இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டன. இம் முரண்பாடுகளை நாட்டை ஆட்சி செய்த முதலாளித்துவ அரசாங்கங்கள் மேலும் அதிகரிக்கச் செய்துள்ளன என்றார். (அ-2)

# தேர்தல் விதிகளை அமுல்படுத்துங்கள்

தேர்தல் விதிகளை அமுல்படுத்துமாறு தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய, பொலிஸாருக்கு உத்தவிட்டுள்ளார்.

தேர்தல் கடமைகளுக்காக பயன்படுத்தப்படும் அரச வாகனங்களை கைப்பற்றுமாறு பொலிஸாருக்கு அவர் பணிப்புரை விடுத்துள்ளார். தேர்தல் பிரசார பணிகளுக்காக அரச வாகனங்கள் பயன்படுத்தப்படின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்காக அரச சொத்துக்கள் எதனையும் பயன்படுத்தக் கூடாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரச சொத்துக்களை தேர்தல் பிரசாரத்திற்காக பயன்படுத்துவது சட்டவிரோதமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களில் அதிகளவில் இவ்வாறு அரச சொத்துக்கள் பயன்படுத்தப்பட்டு வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# போதைப்பொருள் கடத்தல் குறித்த விசாரணைக்கு வருகிறது சீ.ஐ.ஏ.

சர்வதேச போதைப் பொருள் கடத் தல் குறித்து விசாரணை நடத்த அமெரிக்காவின் சீ.ஐ.ஏ. உளவுப் பிரிவு அதிகாரிகள் இந்த வாரத்தில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

அண்மையில் கொள்கலன் ஒன்றில் பாரியளவில் ஹெரோயின் போதைப் பொருட்கள் மீட்கப்பட் டன.

இவை பிரபல தாதாக்களில் ஒருவரான தாவூத் இப்ராஹிமின் டி கம்பனியினால் பாகிஸ்தானிலிருந்து இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படிருந்தன.

போதைப் பொருள் கடத்தல் சம்பவம் குறித்து சீ.ஐ.ஏ. உளவுப் பிரிவு ஏற்கனவே விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. இலங்கையில் இது தொடர்பில் விசாரணை நடத்தும் பொலிஸ் அதிகாரிகளையும் சீ.ஐ.ஏ. அதிகாரிகள் சந்திக்கவுள்ளனர்.

பாகிஸ்தான் போதைப் பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகளும் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளனர். சம்பவத்துடன் தொடர்புடைய முக்கிய சந்தேக நபர் ஒருவரை கைது செய்து இலங்கையிடம் ஒப்படைப்பதாக பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயம் இதுவிடயத்தில் உறுதியளித்துள்ளது. (அ-2)

# கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் தனி ஈழத்திற்கான அடித்தளம்

## குணதாச குற்றச்சாட்டு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் முன்வைக்கப்பட்ட தேர்தல் கொள்கைப் பரப்பு விஞ்ஞாபனம் தனி ஈழம் ஒன்று உருவாவதற்கான மக்கள் கருத்துக் கணிப்பை பெறும் வகையில் அமைந்துள்ளதாக தேசிய இயக்கங்களுக்கான ஒன்றியம் குற்றம் சுமத்தியுள்ளது.

கொழும்பில் அண்மையில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய குறித்த ஒன்றியத்தின் இணைப்பாளர் குணதாச அமரசேகர இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் சில எதிர்ப்புக்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட ஒன்று எனவும் உண்மையில் இதனை ஒரு தேர்தல் விஞ்ஞாபனமாகக் கருத முடியாது என்றும் அவர் குறிப்பிட்டதுடன் இது மக்கள் கருத்துக் கணிப்பைக் கோரும் வகையிலும் தனி ஈழ இராச்சியம் ஒன்றை அமைப்பதற்கான அடித்தளத்தை அமைக்கும் வகையிலும் அமைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை கொழும்பில் செய்தியாளர் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவும் தமது கருத்தை வெளியிட்டார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் விஞ்ஞாபனம் குறித்து கருத்து வெளியிட்ட அவர் யுத்தம் தொடர்பில் மாறுபட்ட கருத்துக்களை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு முன்வைத்துள்ளதாக குறிப்பிட்டார்.

குறித்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் எந்தவொரு இடத்திலும் தமிழீழ விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட கொலைகள் தொடர்பில் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

ஆனால் அரசாங்கத்திற்கு எதிரான போர்க்குற்ற விசாரணைகளை முன்னெடுக்க வலியுறுத்தும் வகையில் தேர்தல்கள் விஞ்ஞாபனம் அமைந்திருப்பதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். (அ-2)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

11 09.2013

- 1541 - சிலியின் சண்டியாகோ நகரம் மிச்சிமாலொன்கோ தலைமையிலான பழங்குடிகளால் அழிக்கப்பட்டது.
- 1609 - ஹென்றி ஹட்சன் மான்ஹட்டன் தீவைக் கண்ணுற்றார்.
- 1709 - பிரித்தானியா, நெதர்லாந்து, ஆஸ்திரியா ஆகிய நாடுகள் பிரான்ஸ் மீது போர் தொடுத்தன.
- 1802 - பிரான்ஸ் சார்டீனியா பேரரசை தன்னுடன் இணைத்துக் கொண்டது.
- 1889 - யாழ்ப்பாணத்தில் இந்து சாதனம் (The Hindu Organ) என்ற ஆங்கிலப் பத்திரிகை டி. பி. செல்லப்பாபிள்ளை என்பவரால் வெளியிடப்பட்டது.
- 1893 - முதலாவது உலக சமய நாடாளுமன்ற மாநாடு சிக்காகோவில் ஆரம்பமானது.
- 1897 - எதியோப்பியாவின் இரண்டாம் மெனெலிக் மன்னன் கஃபா இராச்சியத்தைக் கைப்பற்றினான்.
- 1906 - மகாத்மா காந்தி, **சத்தியாக்கிரகம** என்ற சொற்பதத்தை தென்னாபிரிக்காவில் வன்முறையற்ற இயக்கத்தின் செயற்பாடுகளுக்கு பயன்படுத்த ஆரம்பித்தார்.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: பக்கிங்ஹாம் அரண்மனை ஜேர்மனியரின் வான் தாக்குதலில் சேதமடைந்தது.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: போர்னியோ தீவில் ஜப்பானியரால் அடைக்கப்பட்டிருநத போர்க்கைதி களை அவுஸ்திரேலயப் படையினர் விடுவித்தனர். இவர்களில் பெண்கள், குழந்தைகள் உட்பட 2 ஆயிரம் பேர் செப்டெம்பர் 15 இல் கொல்லப்படவிருந்தனர்.
- 1973 - சிலியின் மக்களாட்சி அரசு இராணுவப் புரட்சியில் கவிழ்க்கப்பட்டது. ஜனாதிபதி சல்வடோர் அலெண்டே கொல்லப்பட்டார். இராணுவத் தலைவர் ஆகுஸ்டோ பினொச்சே ஆட்சியைக் கைப்பற்றி 17 ஆண்டுகள் சர்வாதிகார ஆட்சி நடத்தினார்.
- 1978 - அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர், எகிப்திய ஜனாதிபதி அன்வர் சதாத், இஸ்ரேல் பிரதமர் பெகின் ஆகியோர் மத்திய கிழக்கு அமைதி முயற்சிகளை முன்னெடுக்க காம்ப் டேவிட்டில் சந்தித்தனர்.
- 1982 - பாலஸ்தீன அகதிகளின் பாதுகாப்புக்கென வந்திருந்த சர்வதேச படைகள் பெய்ரூட் நகரை விட்டு அகன்றனர். ஐந்து நாட்களின் பின்னர் அங்கு பல்லாயிரக்கணக்கான அகதிகள் கொல்லப்பட்டனர்.
- 2001- வான் தாக்குதல்களில் உலக வர்த்தக மையம் எரிந்தது.
- 1989 - ஹங்கேரிக்கும் அவுஸ்திரியாவுக்குமான எல்லை திறந்து விடப்பட்டதில் ஆயிரக்கணக்கான கிழக்கு ஜேர்மனி மக்கள் தப்பியோடினர்.
- 1997 - ஐக்கிய இராச்சியத்தினுள் அடங்கிய தனியான ஸ்கொட்லாந்து நாடாளுமன்றத்தை அமைக்க ஸ்கொட்லாந்து மக்கள் வாக்களித்தனர்.
- 2001 - நியூயோர்க் நகரின் உலக வர்த்தக மையம் மற்றும் பென்டகன் மீது நடத்தப்பட்ட வான் தாக்குதல்களில் மொத்தம் 2 ஆயிரத்து 974 பேர் கொல்லப்பட்டனர்.
- 2006 - ஜேர்மனியின் முதல் 24 மணி நேரத் தமிழ் வானொலியான ஐரோப்பியத் தமிழ் வானொலி ஆரம்பிக்கப்பட்டது.


**பிறப்புக்கள்**

- 1862 - ஓ ஹென்றி, ஆங்கில எழுத்தாளர் (இ. 1910)
- 1917 - பேர்டினணட் மார்க்கோஸ், பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி (இ. 1989)

**இறப்புகள்**

- 1921 - சுப்பிரமணிய பாரதியார், (பி. 1882)
- 1948 - முகம்மது அலி ஜின்னா, பாகிஸ்தான் ஸ்தாபகர்
- 1957 - இம்மானுவேல் சேகரன், தலித் மக்களின் உரிமைகளுக்காக போராடிய ஒரு தலைவர் (பி. 1924)
- 1971 - நிக்கிட்டா குருசேவ், சோவியத் ஒன்றியத் தலைவர் (பி. 1894)
- 1973 - சல்வடோர் அலெண்டே, சிலியின் ஜனாதிபதி (பி. 1908)
- **2009 - யுவான் அல்மெய்டா, கியூபா புரட்சியாளர் (பி. 1927)**

## யுவான் அல்மெய்டா



யுவான் அல்மெய்டா பொஸ்க் 1927 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதி அவானாவில் பிறந்தார். இவர் கியூபாவின் அரசியல்வாதியும் 50 களில் இடம்பெற்ற கியூபா புரட்சியின் முக்கியமான ஆரம்பகட்டத் தலைவர்களில் ஒருவரும் ஆவார். புரட்சியின் பின்னர் இவர் கியூபா பொதுவுடைமைக் கட்சியின் முக்கிய உறுப்பினராக இருந்து வந்தார். 2009 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 11 ஆம் திகதி அவர் இறக்கும் போது கியூபாவின் துணை ஜனாதிபதியாக இருந்தார்.

பிடல் காஸ்ட்ரோ மற்றும் ராவுல் காஸ்ட்ரோவுடன் இணைந்து புரட்சியின் ஆரம்பகாலங்களின் போது போராடியிருந்தார். இந்த போராட்டத்தின் முடிவாக ஃபல்கேன்சியோ பாட்டிஸ்டாவின் அரசாங்கம் 1959 ஆம் ஆண்டு ஆட்சியில் தூக்கி எறியப்பட்டது. அவானாவைச் சேர்ந்த கட்டட தொழிலாளியான யூவான் அல்மெய்தா, புரட்சியாளர்கள் தலைமை பீடத்தில் இருந்த ஒரே கறுப்பினத் தவர் ஆவார். அவானா பல்கலைக்கழகத்தில் 1952 இல் சட்டம் பயின்ற அல்மெய்டா, அங்கு பிடெல் காஸ்ட்ரோ வுடன் நெருங்கிய நட்புக் கொண்டார். அதே ஆண்டில் கியூபாப் புரட்சியில் இணைந்து கொண்டார். 1953 பிடல் மற்றும் ராவுல் உடன் இணைந்து சண்டியாகோவில் மொன்காடா இராணுவ நிலை மீதான தாக்குதலில் பங்குகொண்டு காஸ்ட்ரோக்களுடன் கைது செய்யப்பட்டார். 1955 ஆம் ஆண்டு, மே மாதம் 15 ஆம் திகதி பொதுமன்னிப்பு வழங்கப்பட்டு மெக்சிக்கோவுக்கு அனுப்பப்பட்டார். இவர் பின்னர் 1956 ஆம் ஆண்டு, நவம்பர் மாதம் 25 ஆம் திகதி சேகுவேரா மற்றும் காஸ்ட்ரோக்களுடன் மொத்தம் 82 பேர்களாக படகில் கியூபா வந்திறங்கினர். இவர்களில் 16 பேரே உயிர் தப்பினர். ஏனையோர் இராணுவத்தினரால் கொல்லப்பட்டனர்.

## இயங்கியபடி நின்ற மோ.சைக்கிள் தீ பிடித்தது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொதுச் சந்தைப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் திடீரென தீப்பற்றி எரிந்த சம்பவம் நேற்று நண்பகல் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிள் உரிமையாளர் சைக்கிளை எஞ்சின் இயங்கிய நிலையில் நிறுத்திவிட்டு பொருட்களை கொள்வனவு செய்வதற்காக சென்ற வேளையிலேயே மோட்டார் சைக்கிள் தீப்பற்றி எரிந்துள்ளது. எனினும் அச் சந்தர்ப்பத்தில் அங்கு நின்றிருந்த வர்த்தகர்களால் விரைவாக தீ அணைக்கப்பட்டுள்ளது. இதனால் மோட்டார் சைக்கிளுக்கு பாரிய சேதங்கள் எவையும் ஏற்படவில்லை. (அ-5)

# சீனமயமாகும் நடவடிக்கைகளையே அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது

## திஸ்ஸ அத்தநாயக்க குற்றச்சாட்டு

(கொழும்பு)

**மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் அரசாங்கத்தின் வேட்பாளர்கள் மதுபானத்தை தானமாக வழங்கி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் அரசாங்கத்தின் வாக்குறுதிகளை நம்பி ஏமாறாது, சிந்தித்து தமது வாக்குகளை வழங்க வேண்டும். அரச வளங்களை விற்பனை செய்யப் போவதில்லை என அரசாங்கம் கூறுகின்ற போதிலும் தற்போது அரச வளங்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

அத்துடன் அரசாங்கம் தொடங்கிய மிஹின் எயார் விமான சேவை நிறுவனம் கடந்த மூன்று வருடங்களில் ஆயிரத்து 300 மில்லியன் ரூபாவை இழந்துள்ளது.

இவற்றைத் தவிர அண்மையில் திறந்து வைக்கப்பட்ட கொழும்பு துறை முகத்தின் தெற்கு முனையம் சீனாவின் நிறுவனம் ஒன்றுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதில் கிடைக்கும் வருமானத்தில் சீன நிறுவனத்திற்கு 55 வீதமும் துறைமுக அதிகார சபைக்கு 15 வீதமும் மற்றுமொரு நிறுவனத்திற்கு 30 வீதமும் வழங்கப்படவுள்ளதுடன் அந்த நிறுவனத்தின் பெயர் இதுவரை நாட்டுக்குத் தெரியப்படுத்தப்படவில்லை.

அனைத்துக்கும் தேசப்பற்று என்ற முத்திரையைக் குத்திக் கொள்ளும் அரசாங்கம், தேசப்பற்று என்ற முத்திரையை தம்மீது ஒட்டியிருக்கும் சீனர்களை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கின்றது. இதேவேளை தற்போதைய மஹிந்த ராஜபக்ஷ அரசு, தனியார் மயப்படுத்தலுக்குப் பதிலாக தேசப்பற்றுள்ள சீன மயமாக்கலை செயற்படுத்தி வருகிறது.

இலங்கையில் இடம்பெறும் முக்கிய அபிவிருத்தி செயற்றிட்டங் களை சீன நிறுவனங்களுக்கு கைமாற்றும் நடைமுறையையே அரசாங்கம் கடைப்பிடித்து வருகின்றது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை நிர்மாணிப்பதற்கு சைனா ஹாபர் என்ற நிறுவனமே செலவிட்டிருந்தது. மத்தலவில் அமைந்துள்ள விமான நிலைய திட்டத்திற்கும் இதே நிலைமையே ஏற்பட்டுள்ளது.

இதுதவிர, நாட்டின் தேசிய பெருந் தெருக்களில் முக்கியமான 7 திட்டங்கள் சைனா ஹாபர் நிறுவனத்திலேயே மேற்கொள்ளப்படுகின்றன.

இலங்கையின் நிலத்தை வெளி நாட்டவர்களுக்கு கையளிக்கப் போவதில்லை என வாய்மொழி மூலமான கருத்துக்கள் முன்வைக்கப்பட்ட போதிலும் சீன மயமாக்கும் நடவடிக்கைகளே முன்னெடுக்கப்படுகின்றன. அதேவேளை அரசாங்கம் இனவாதத்தை தூண்டி வருகிறது என்றார். (அ-2)

# நிபந்தனைகள் எதுவுமின்றி ஆளும் கட்சிக்கு ஆதரவு

## அமைச்சர் வாசு தெரிவிப்பு

நிபந்தனைகள் எதுவுமின்றி ஆளும் கட்சிக்கு ஆதரவளிப்பதாக அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

குருநாகல் மாவட்டத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் பங்கேற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இம்முறை மாகாண சபைத்தேர்தல் நாட்டுக்கு மிகவும் முக்கியமானது. 30 ஆண்டு கால போரின் பின்னர் வடக்கில் மாகாண சபைத்தேர்தல் முதல் தடவையாக நடத்தப் படுகின்றது.

தேர்தல்களுக்கு இடையில் முரண்பாடுகள் காணப்படலாம். எனினும் தேர்தல் காலத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வெற்றிக்காக பாடுபட வேண்டும். சில வலுவானவர்கள் வடக்கு தேர்தலை நடத்த வேண்டாம் என ஜனாதிபதியிடம் கோரினார்கள்.

ஜனாதிபதி இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை. அரசாங்கத்துடன் முரண்பாடுகள் காணப்படுகின்றன. எனினும் தேர்தல் காலத்தில் அந்த முரண்பாடுகளைக் களைந்து செயற்படவேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை வாசுதேவ நாணயக்கார, டியூ குணசேகர மற்றும் பேராசிரியர் திஸ்ஸ விதாரண ஆகிய சிரேஷ்ட அமைச்சர்களின் இடதுசாரி கட்சிகள் மாகாணசபைத் தேர்தலில் தனித்து போட்டியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## நாவல்

**Botanical Name:- Syzygium Jambolanum**
**Family:-Myrtaceae**
**Engl- Jambul**



உயர்ந்து கிளைத்து வளரும் பெருமரம். எப்பொழுதும் பசிய இலையுடையது. 3 தொடக்கம் 6 அங்குல நீளமும் ஒரு அங்குல அகலமுள்ள தனியிலை. இலை நரம்புகள் நுனியில் இணைந்து இலை விளிம்புக்குள் காணப்படும் .இலைக்கோணத்தில் அல்லது பக்கத்தில் உண்டாகும் நுனி வளராப் பூந்துணர் கொத்தாகக் காணப்படும். வெண்ணிறமான மலர். 4 புற இதழ்கள் இணைந்து புல்லிவட்டமும் 4 அகவிதழ்கள் வெண்மையான, உள் வளைவான அல்லிவட்டத்தையும் கொண்டிருக்கும். மிகப்பல தனித்த மகரந்தத்தாள்கள் காணப்படும். இரு செல்லுடைய சூலக வட்டம். ஒவ்வொன்றிலும் பல சூல்கள் காணப்படும். ஒரு சூல்தண்டு, உருண்டையான சதைக்கனி, கருநீல நிறமானது. இனிப்பானது. கனிச்சாறு ஊதா நிறமானது. வித்திலைகள் சதைப்பற்றானவை. இவற்றுள் கருமுளை மறைந்திருக்கும். மலையிடத்தும் கடலோரப் பகுதிகளிலும் வளர்கின்ற மரமாகும். இதன் கனிக்காகவும் வளர்க்கப்படுகிறது. இம்மரம் வன்மையானது. செம்பழுப்பு நிறமானது. விதைகள் மூலம் இனவிருத்தி செய்யலாம்.

### மருத்துவப் பயன்கள்

- நாவல் இலைக்கொழுந்தை இடித்து பிழிந்த இரசம் ஒரு தேக்கரண்டி எடுத்து அதில் இரண்டு ஏலரிசியும் இலவங்கப்பட்டை 2 கிராம் தூள் செய்து காலை, மாலை இரு வேளை எடுக்க அஜீரணம் சம்பந்தப்பட்ட பேதி, உஷ்ணபேதி தீரும். சிறுவர்களுக்கு இரண்டு நாவல் இலைக் கொழுந்து, 2 மாவிலைக்கொழுந்து. இவையிரண்டையும் ஒரு பிடி சேர்த்து மைபோல அரைத்து 5 கிராம் அளவு 20 மில்லி தயிரில் காலையில் இரண்டு முதல் 4 நாட்கள் பருக சீதபேதி, இரத்த பேதி, வயிற்றுக்குத்து, தீராப்போகும் பேதி ஆகியவை தணியும்.
- குழந்தைகளுக்கு நாவல்மர இலையை மட்டும் அரைத்து உடம்பெல்லாம் தடவி உடனே வெந்நீரில் குளிக்க வைக்க சகல பூதகண பாலகிரஹ தோஷமெல்லாம் விலகிப் போகும்.
- நாவல் இலைக்கொழுந்துடன் இரண்டு மிளகு சேர்த்து அரைத்து வெந்நீரில் ஒரு சுண்டைக்காய் அளவு கலந்து கொடுக்க குழிதோஷம் விலகி குழந்தைகளுக்கு போகும் நீரான மலம் கட்டும்.



- நாவல் பழத்தின் மேற்றோலை எத்தனை முறையாயினும் உட்கொள்ள நீர்ப்பெருக்கு, நீர் வேட்கை நீங்கும். பழச்சாற்றை மணப்பாகு செய்து கொடுக்க பசியை உண்டாக்கி வயிற்றுப்போக்கை நிறுத்தும்.
- நாவல் வேர் ஊறிய நீரானது கழிச்சல், நீரிழிவு நீக்கும். உடலுக்குக் குளிர்ச்சியையும் ஆண்மையையும் தரும்.
- நாவல் பூ, திப்பிலி இரண்டையும் வெயிலில் காயவைத்துப் பொடியாக்கி தினமும் காலை, மாலை இரு வேளையும் சாப்பிட்டு வந்தால் காசநோய் குணமாகும்.
- நாவற்பழத்தை ஒருநாள் விட்டு ஒரு நாள் சாப்பிட்டு வந்தால் கண் எரிச்சல், கண்ணில் நீர் வடிதல் குணமாகும்.
- நாவல் விதை, அதிவிடயம் இரண்டையும் சம அளவு எடுத்துப் பொடி செய்து சாப்பிட்டு வந்தால் இரத்தமூலம் குணமாகும்.
- நாவல் விதையை (3 கிராம்) பால் சேர்த்து அரைத்துச் சாப்பிட்டால் அதிக இரத்தப் போக்கை நிறுத்தலாம்.
- நாவல்பழ விதைகளை (10) இடித்து 150 மில்லிலீற்றர் தண்ணீரில் போட்டு சுண்டக்காய்ச்சி அந்தத் தண்ணீரில் தினமும் இரு வேளை குடித்து வந்தால் நீரிழிவு குணமாகும்.
- நாவல் விதைகளைச் சேகரித்து நன்றாக உலர்த்தி இடித்து துணியில் அரித்து போத்தலில் அடைத்து வைத்துக்கொள்க. காலை, மாலை வெறும் வயிற்றில் 2 தொடக் கம் 4 கிராம் எடை சுத்தமான நீரில் சாப்பிட 4 முதல் 10நாளில் சிறுநீரில் உள்ள சீனிச் சத்தைக் குறைத்து அதிக சலத்தைக் குறைக்கும்.
- நாவல் மரத்தின் 5 இலையை அரை லீற்றர் தண்ணீரில் போட்டுக் கசாயம் காய்ச்சிக் குடித்தால் வாய்ப்புண், வாய் வேக்காடு குணமாகும்.
- நாவல் இலைத்துளிரை ஒரு கைப்பிடி எடுத்து அரைத்து தயிரில் கலந்து சாப்பிட்டால் மாதவிலக்கின்போது ஏற்படும் அதிகபடியான இரத்தப்போக்கு கட்டுப்படும்.
- நாவல் மரப்பட்டை 20 கிராமை ஒரு லீற்றர் தண்ணீரில் போட்டுக்கொதிக்க வைத்துக் குடித்தால் தோல் நோய்கள் குணமாகும்.
- நாவல்விதை, சிறுகுறிஞ்சா, வெந்தயம், மாம்பருப்பு ஆகியவற்றைச் சம அளவு எடுத்து அரைத்துப்பொடி செய்து தினமும் மூன்று கிராம் அளவுக்குச் சாப்பிட்டால் நீரிழிவுநோய் குணமாகும்.
- நாவல்விதை, தேற்றான்விதை இரண்டையும் சமஅளவு எடுத்துப் பொடி செய்து சாப்பிட்டு வந்தால் உள்மூலம், கீழ் மூலம், இரத்தமூலம் போன்றவை குணமாகும்.
- நாவல் பருப்பு, சீரகம் இரண்டையும் சமஅளவு எடுத்து எலுமிச்சம்பழச்சாற்றில் கலந்து சாப்பிட்டால் இரத்த அழுத்தம் குணமாகும்.
- நாவல் பழத்தை மாதவிலக்கு வருவதற்கு ஒரு வாரம் முன் சாப்பிட்டால் மாதவிலக்கு தள்ளிப்போகும்.

### 100 கிராம் நாவல் பழத்தில் உள்ள சத்துக்கள்

ஈரலிப்பு-83.7 g
கலோரி-62 kcal
புரதம்- 0.7g
கொழுப்பு- 0.3 g
காபோவைதரேற்று-14 g
கல்சியம்- 15 mg
பொஸ்பரஸ்-15 mg
இரும்பு-11.5 g
βகரோட்டின்-48mcg
தயமின்-30mcg
ரைபோபிளேவின்- 10mcg

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்,
கைதடி.



நியாசின்-0.2mcg
விற்றமின் சி-18 mg
கழிவு- 34%

குறிப்பு: நாவல் பழத்தை அதிகஅளவில் உண்ணக்கூடாது. ஒவ்வாமை உள்ளவர்கள். நாவற்பழங்கள் உண்பதைத் தவிர்க்க வேண்டும். அத்துடன் கடி, சொறி, புண், கிரந்தி போன்ற வியாதி உடையோரும் நாவற்பழங்களைத் தவிர்த்தல் சிறப்பானது. நாவற்பழங்களை அதிகமாகச் சாப்பிட்டால் தொண்டையைக் கட்டும், குரல் கம்மும் மற்றும் படிப்படியாக தொண்டை, குரல்வளையில் கிருமித்தொற்று காரணமாக அமையலாம்.

# அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்படவில்லை

(புளியம்பொக்கணை)

**கிளிநொச்சி மாவட்ட கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள கண்டாவளை, புன்னைநீராவி, முரசு மோட்டை ஆகிய பொதுச் சந்தைகள் அடிப்படை வசதிகள் எதுவுமின்றி காணப்படுவதாக வியாபாரிகளும் நுகர்வோரும் விசனம் தெரிவித்துள்ளனர்.**



இச்சந்தைகளில் குடிநீர் வசதி இல்லை. இதனால் சந்தைப் பாவனையாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

அண்மையில் புன்னைநீராவி சந்தையில் மட்டும் கிணறு அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மின்சாரம், மலசலகூடம் போன்ற அத்தியாவசிய வசதிகள் இச் சந்தையில் இல்லை. குறிப்பாக மலசல கூட வசதியின்மை சந்தை பாவனையாளர்களைப் பெரிதும் பாதிக்கின்றது.

இச் சந்தைகளில் காவலுக்கு மக்கள் தமது செலவிலேயே காவலாளி ஒருவரை நியமித்துள்ளனர்.

கண்டாவளை பொதுச் சந்தையில் மீன் விற்பனைக்கான இடம் ஒதுக்கிக் கொடுக்கப்படவில்லை.

இதனால் மரநிழல்களே மீன் வியாபாரிகளுக்கு அடைக்கலம் தருகின்றன.

ஆயினும் மழை காலங்களில் மீன் வியாபாரத்தை எப்படி? எங்கு மேற்கொள்வதென மீன் வியாபாரிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே, வியாபாரிகளும் நுகர்வோரும் பயன்பெறுகின்ற இச் சந்தைகளில் அடிப்படை வசதிகள் அனைத்தையும் ஏற்படுத்தி தருமாறு சந்தைகளின் பாவனையாளர்கள் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-263)




## சட்டவிரோத மணல் அகழ்வு; 11 நபர்களுக்கு தண்டம்

(முல்லைத்தீவு)

மாங்குளம் பகுதியில் சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்ட 11 பேரை பொலிஸார் தமது அதிரடி சோதனையின் போது கைது செய்து, 11 கனரக வாகனங்களையும் கைப்பற்றியுள்ளனர். 11 பேருக்கும் மூன்று இலட்சம் ரூபா தண்டப் பணமும் இதனை செலுத்தத் தவறின் ஒவ்வொருவருக்கும் 6 மாத கடூழியச் சிறைத்தண்டனையும் விதித்து முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா தீர்ப்பளித்துள்ளார்.

வாகனங்களை நீதிமன்றின் பாதுகாப்பில் வைக்குமாறும் மணலை அரசுடைமையாக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. (ம)

## தேசியமட்ட கபடிப் போட்டியில் தமிழ் மொழி புறக்கணிப்பு

(பூந்தோட்டம்)

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் கடந்த சனிக்கிழமை முதல் நடைபெற்றுவரும் தேசியமட்ட கபடிப் போட்டியில் தமிழ் மொழி தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டு வருவதாக விசனம் தெரிவித்துள்ளனர்.

இங்கு நடைபெற்றுவரும் போட்டி தொடர்பான அறிவித்தல்கள் அனைத்தும் சிங்கள மொழியில் இடம் பெற்று வருவதாகவும் நடுவர்களில் பெரும்பான்மையினர் சிங்கள இனத்தை சார்ந்தவர்களாக இருப்பதால் போட்டியின் போது சிங்கள மொழியில் அவர்களால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களை தம்மால் புரிந்து கொள்ள முடியாதிருப்பதாகவும் விசனம் தெரிவிக்கின்றனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தமிழ் மொழிமூல மாணவர்கள் போட்டியிடுகின்ற போட்டிகளில் மாணவர்கள் திட்டமிடப்பட்ட வகையில் தோல்வியை தழுவ நிர்ப்பந்திக்கப்படுகின்றனர் எனவும் இது தொடர்பாக இங்கு கடமையில் உள்ள தமிழ் அதிகாரிகளிடம் முறையிட்டும் உரிய பதில் எதுவும் கிடைக்கவில்லை எனவும் போட்டியாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ம-266)

## மாடு களவாடிய நபருக்கு 6 மாத கடூழிய சிறை

முல்லைத்தீவு வள்ளுவர்புரம், ரெட்பானா என்னுமிடத்தில் வசிக்கும் நபர் ஒருவர் 8ஆயிரத்து500 ரூபா பெறுமதியான மாட்டை களவாடி இறைச்சிக்காக விற்பனை செய்ததாக 23.12.2012 இல் குற்றஞ்சாட்டப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டிருந்தார்.

இந் நபருக்கு 6 மாத கடூழியச் சிறைத் தண்டனை விதித்து முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா தீர்ப்பளித்துள்ளார்.

தொடர்ச்சியாக இந்நபர் மாடுகளை களவாடி இவ்வாறு விற்பனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததாக பொலிஸார் எதிரிக்கு எதிராக குற்றச்சாட்டு சுமத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

வடக்கு மாகாண சபைத் தேர்தல் 2013
கிளிநொச்சி மாவட்டம்



மிகப்பெரும் விருட்சத்தை வேரறுத்துவிட்டு
இளங்கன்றுகள் விருட்சமாக முடியுமோ!
இளங்கன்றுகளும் விருட்சமாக ஒருகாலம் வரும்
அதுவரை காத்திருப்பதுதான் உயர்பண்பு
எடுத்த எடுப்பில் விருட்சமாகும் நினைப்பில்
விருட்சங்களை வேரறுக்காதீர்
அது மண்ணுக்கும் (தமிழ்)
மக்களுக்கும் ஈனமாகும் செயல்
அனுபவமும் ஆழ்ந்த புலமையும் கொண்ட
எங்கள் அரசியல்வாதிகளை ஓரங்கட்டினால்
அடுத்தவரின் ஆலோசனையில்
எங்கள் தலைவிதி நிர்ணயமாகும்
அதுதானே! எங்கள் அரசியலில் நடக்கிறது!

எமதருமை வடபுலத்து மக்களே!

எங்கள் அரசியலில் நிகழ்ந்த பட்சா பாதங்களுக்காக
நாங்கள் பிராயச்சித்தம் செய்வது அவசியம்
எங்கள் மண்ணின் மூத்த அரசியல் தலைவர்
மார்தட்டி நான் தமிழ்மறவன் என்று
மாற்றானிடம் கூறும் வல்லமை கொண்டோன்
என் வன்னி மண்ணில் 3 இலட்சம்
உறவுகள் துடிக்கின்றனர் என்று
உலகுக்கு முன் உரக்கக் குரல் எழுப்பி
உலகத்தார் எங்கள் அவலம் உணரவைத்த உத்தமர்

ஆனந்தசங்கரி ஐயாவை
மாகாண சபைக்கு அனுப்பிவைப்போம். இப்பெரும் பணியை கிளிநொச்சி மண்ணின் தமிழ்மறவர்களே! தூய உளம்கொண்ட இளைஞர்களே! நீங்கள்தான் செய்யவேண்டும் உங்களால்தான் அது முடியும் ஆதலால் உங்கள் வாக்குகள்
வீ.ஆனந்தசங்கரிக்கே (தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு)
தமிழரசுக்கட்சியின் சின்னமாகிய வீட்டிற்கு நேரே புள்ளடியிடுவதுடன்
வீ.ஆனந்தசங்கரியின் விருப்பு இலக்கமான 2 இன் மேல் புள்ளடி இடுக.

(EC/5015)

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி X

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|

கிளிநொச்சி மாவட்ட
தமிழர் மேம்பாட்டு அமையம்

# கிராம அலுவலர்களுக்கு எதிரான முறைப்பாடு குறித்து விசாரணை

(தும்பளை)

தேர்தல் ஆணையாளரின் அறிவுறுத்தலுக்கமைய, இவ்வாண்டு நடைபெற்ற வாக்காளர் கணக் கெடுப்பு பணியின் போது, கிராம அலுவலர்களுக்கெதிராக கிடைத்த முறைப்பாடுகளை விசாரணை செய்யுமாறு பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலர் அறிவுறுத்தியுள்ளார்.

இதனடிப்படையில், முறைப்பாடுகளை நாட்டின் சகல மாவட்டங்களிலுமுள்ள அரசாங்க அதிபர்களும் மற்றும் பிரதேச செயலர்களும் அவதானித்து, ஆராய்ந்து அறிக்கைகளை பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு சமர்ப்பிக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

இத் தகவல்கள் அடங்கிய சுற்றுநிருபமொன்று அனைத்து மாவட்ட செயலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-9-19)






# ஊடகங்களின் கேள்விக்கு ஐஸ்கதை கூறி விளக்கமளித்தார் அமைச்சர் பசில்

(யாழ்ப்பாணம்)

**ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு சிறுகதைகளைக் கூறி விளக்கமளித்துள்ளார் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ.**

யாழ்.கிறீன் கிறாஸ் விருந்தினர் விடுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் சிறுகதைகள் கூறப்பட்டு விளக்கமளிக்கப்பட்டது.

பூசணிக்காய் திருடன், ஐஸ் மலை உட்பட 3 கதைகளை அமைச்சர் ஊடகவியலாளர்களுக்கு கூறியுள்ளார்.

வடமாகாண சபை தேர்தலில் இராணுவ தலையீடுகள் இருப்பதாக ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார். அதற்கு பதிலளித்த அமைச்சர், வடமாகாண சபைத் தேர்தலில் இராணுவத்தின் தலையீடு என்பது ஐஸ் கதை போன்றது என்று கூறி அக்கதையை அமைச்சர் விளக்கினார்.

ஒரு ஊரில் ஐஸ் மலையொன்று இருந்தது. அந்த மலையில் ஒருவர் தங்கியிருந்தார். ஒருமுறை, அதே கிராமத்தைச் சேர்ந்த நபர் ஒருவர், அந்த மலையில் ஏறியுள்ளார். மலையில் தங்கியிருந்தவரின் வீட்டிற்குச் சென்ற கிராமத்தவர், தனது இரு கைகளையும் ஊதிக் கொண்டிருந்தார்.

அப்போது ஐஸ் மலை வீட்டில் இருந்தவர் ஏன் கைகளை ஊதிக் கொண்டிருக்கிறீர்கள்? என்று கிராமத்து நபரிடம் கேட்டார். அதற்கு பதிலளித்த கிராமத்தவர், குளிராக இருக்கின்றது. அதனால் ஊதிக்கொண்டு இருக்கிறேன் என்றார்.

அதைக் கேட்டு ஐஸ் மலை வீட்டில் இருந்தவர் சூடான சூப் கொண்டு வந்து அவருக்கு கொடுத்தார். சூப்பைக் கையில் எடுத்த கிராமத்தவர் அதையும் ஊதிக் கொண்டிருந்தார். அதை அவதானித்த ஐஸ் மலை வீட்டவர். மீண்டும் ஏன் ஊதுகிறீர்கள்? என கேட்டார். அதற்கு பதிலளித்த கிராமத்தவர் சூப் சூடாக இருக்கின்றது. அதனால் ஊதுகிறேன் என்றார்.

அதற்கு ஐஸ் மலைவாசி இவர் என்ன முன்னர் குளிர்கின்றது என்றார். தற்போது சுடுகின்றது என்கின்றார் என்று சிந்தித்தார்.

பின்னர் கிராமத்து ஆள் பொய்யாளாக இருப்பார் என எண்ணி அவரை அடித்து விரட்டியுள்ளார்.

இது போன்றுதான் இராணுவத்தினரின் தேர்தல் தலையீடு என்பதும் ஒரு கதையாகும் என்றார் அவர். (அ-4)

## மானிய உரம் வழங்க பதிவு நடவடிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கல்வயல் விவசாய சம்மேளனத்திற்குட்பட்ட காலபோக நெற்செய்கையில் ஈடுபடவுள்ள விவசாயிகளுக்கான மானிய உர விநியோகப் பதிவுகள் இன்றும் நாளையும் விவசாய சம்மேளனத்தில் மேற்கொள்ளப்படவுள்ளன.

மேற்படி சம்மேளனத்திற்குட்பட்ட விவசாயிகள் விண்ணப்ப படிவங்களை பூர்த்தி செய்து ஒப்படைக்க வேண்டும்.

அத்துடன் ஆண்டுச் சந்தாவை செலுத்தி, பயிர்ச் செய்கை மேற்கொள்ளவுள்ள நில அளவையையும் பதிவு செய்வதன் ஊடாக இவ்வாண்டுக்கான மானிய உரத்தை பெற்றுக் கொள்ள முடியுமென கல்வயல் விவசாய சம்மேளன செயலாளர் கா.வேதநாயகம் அறிவித்துள்ளார். (அ-9-29)



தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய கைலாச வாகன வெள்ளோட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றபோது...

# ஜனநாயக சூழலை ஐ.தே.கவே ஏற்படுத்தும்

## யாழில் எதிர்க்கட்சி தலைவர் தெரிவிப்பு

இந்த நாட்டில் சகல இன மக்களும் ஒற்றுமை,சமாதானம், சுதந்திரம் ஆகியவற்றுடன் வாழக்கூடிய ஜனநாயக சூழலைக் கொண்டு வரக் கூடிய ஒரே ஒரு கட்சி ஐ.தே.கவே எனவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்ப வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமது ஆதரவை வழங்கி ஆதரிக்குமாறு ஐ.தே.க. தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்தில் வைத்து தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபைத் தேர்தல் பிரசார நடவடிக்கையில் ஈடுபடும் நோக்குடன் யாழ்ப்பாணத்திற்கு நேற்று வருகை தந்த எதிர்க் கட்சித் தலைவர் உள்ளிட்ட அக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான என்.கே. சுவாமிநாதன், ரவிகருணாநாயக்க மற்றும் அக் கட்சியின் சார்பில் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிடும் தியாகராஜா துவாரகேஸ்வரன் உள்ளிட்ட வேட்பாளர்களும் கலந்து கொண்ட மக்கள் சந்திப்பு சங்கானை பொதுச் சந்தை பகுதியில் நேற்று முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்ட மக்களிடம் வேட்பாளர்களின் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்த பின்னர், அங்கு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தை எதிர்த்து மக்கள் ஐ.தே.கவுக்கு வாக்களித்து இந் நாட்டில் தமிழ், சிங்களம், முஸ்லிம் உள்ளிட்ட சகல இன மக்களும் ஒற்றுமையாக வாழக்கூடிய ஒரு சூழலை இங்கு ஏற்படுத்த வேண்டும். இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படுவதோடு சம உரிமையுடன் அனைவரும் வாழக்கூடிய நிலை ஏற்படுத்தப்பட வேண்டும். ஆகையால் இவை அனைத்தும் நிறைவேற ஜனாதிபதி மஹிந்தவின் அரசாங்கத்திற்கு எதிர்ப்பைக் காண்பித்து மக்கள் அனைவரும் ஐ.தே. கவுக்குவாக்களிக்க வேண்டும். மேலும் வேறு கட்சிகளுக்கு வாக்களித்து தமது வாக்குகளை மக்கள் வீணடிக்க வேண்டாம் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார். (அ-6-7)

# பொய் முறைப்பாடு செய்த இருவருக்கு விளக்கமறியல்

(கரணவாய்)

பொய் முறைப்பாடுகளைச் செய்த இரு நபர்கள் நெல்லியடிப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கரவெட்டி வடக்கைச் சேர்ந்த இவ் இரு சந்தேக நபர்களும் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் பொய் முறைப்பாடுகளைச் செய்துள்ளனர்.

இவர்களால் செய்யப்பட்ட முறைப்பாடு பொய் என தெரிய வந்ததும் பொய் முறைப்பாடு செய்த இரு சந்தேக நபர்களையும் நெல்லியடிப் பொலிஸார் கைது செய்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

விசாரணையின் பின்னர் குறித்த இரு சந்தேக நபர்களையும் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (அ-9-60)

உயர்ந்த இலட்சியம்தான் மனிதரின் செயல்களுக்குச் சிறப்பைத் தருகிறது. ஆனால் ஊக்கமின்மை அவ்வுயர் இலட்சியத்திற்கு உலை வைக்கிறது.
– லா புரூயர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகத்திற்கு ஒரு பகிரங்க மடல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகத்திற்கு அன்பு வணக்கம்.

வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடைபெற இருக்கின்ற இந்த வேளையில் இப்பகிரங்க மடலை அவசரமாக எழுத வேண்டிய தேவையுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வடமாகாணத்தின் ஒரு பெரும் கலாபீடம். தமிழ் மக்களின் எதிர்கால வாழ்வு வளமாக இருப்பதற்காக வட பகுதியின் அபிவிருத்திப் பணிகள் குறித்த திட்டமிடல்களை உருவாக்குவதில் நீங்களே சிற்பிகளாக இருக்க வேண்டும்.

ஆனாலும் வடக்கின் அபிவிருத்திப் பணியில் உங்களின் திட்டமிடல்கள் ஏதேனும் பங்கேற்கிறதா என்பது பற்றி இங்கு நாம் கேள்வி எழுப்ப வரவில்லை.

அதேநேரம் அபிவிருத்திப் பணியில் யாழ். பல்கலைக்கழக சமூகம் பங்கேற்பதற்கு சந்தர்ப்பம் வழங்கவில்லை என்ற உங்கள் பக்கத்து நியாயப்பாடுகளையோ அல்லது பல்கலைக்கழக சமூகத்திடம் அபிவிருத்தி – திட்டமிடல் குறித்த ஆக்கபூர்வமான விடயங்கள் ஏதேனும் இருப்பதாகத் தெரியவில்லையே என்ற மறு தரப்புக் குற்றச்சாட்டுக்களையோ நாம் இங்கு பகுத்தாராய விரும்பவில்லை.

இருந்தும் ஒரு காலத்தில் யாழ்.பல்கலைக்கழக சமூகம் அதிலும் எங்கள் பல்கலைக்கழக மாணவர்கள் என்ன கூறுகிறார்களோ அதன்படி நாம் செய்வோம் என்று எங்கள் வடமாகாணத்து மக்கள் முடிவெடுத்திருந்த பெருமையை ஞாபகப்படுத்திப் பார்க்கிறோம்.

அந்த நிலை இன்று இல்லாமல் போயிற்று என்பதனை வேதனையோடு சொல்லித்தான் ஆகவேண்டும்.

மூன்றாம் வருட மாணவர்களும் நான்காம் வருட மாணவர்களும் மோதல்; கலை, விஞ்ஞான மாணவர்கள் அடிதடி என்ற செய்திகள் அடிக்கடி நிகழ்ந்ததன் காரணமாகவோ அல்லது மதுப்பாவனையில் பல்கலைக்கழக மாணவர்கள் முன்னிலை என்ற புள்ளி விபரங்களின் அதிர்ச்சித் தகவல்களோ; என்னவோ பல்கலைக்கழக மாணவர்களுக்கு இருந்த பெறுமதியை – கனதிகாத்திரத்தை சிதைத்துவிட்டது.

என்ன செய்வது? தாமரைக்குளத்துத் தவளைக்கு தாமரைப் பூவின் தேனைப் பருகும் பாக்கியம் இல்லையென்று பரமன் எழுதிவிட்ட பின்பு, தவளைகளுக்காக அழுது என்ன பயன்?

ஆகையால், மதிப்போடும் மரியாதையோடும் இருந்த எங்கள் பல்கலைக்கழக மாணவர்கள் தங்கள் பெருமைகளை தாங்களே குறைத்து கொள்வதென முடிவு செய்த பின்பு நாம் அழுவது அர்த்தமற்றது.

ஆகையால் அந்த வேதனையை ஒருபுறம் ஓரங்கட்டி வைத்துவிட்டு, இப்போது யாழ்.பல்கலைக்கழக சமூகத்தின் முன்னால் இருக்கக்கூடிய ஒரு பெரும் கடமையை சிந்திப்பது அவசியமாகும்.

மரியாதைக்குரிய யாழ்.பல்கலைக்கழக சமூகத்தினரே உங்கள் முன் இருக்கக்கூடிய மிகப் பெரிய கடமை வடக்கு மாகாண சபைத் தேர்தலில் அனைத்து வாக்காளப் பெருமக்களையும் வாக்களிக்கச் செய்வதாகும்.

அவருக்கு வாக்களியுங்கள். இவருக்கு வாக்களியுங்கள் என்று பக்கம் சாராமல் நடுநிலையோடு நின்று மக்களை வாக்களிக்கச் செய்யுங்கள்.

வாக்காளர்கள் முழுப் பேரையும் வாக்களிக்க வைப்பதன் மூலம் ஒரு நீதியான தேர்தலை – மக்களின் விருப்புக்குரிய தெரிவுகளை நிறைவாகச் செய்ய முடியும்.

ஆகையால் யாழ்.பல்கலைக்கழக சமூகம் களத்தில் இறங்கி மக்களை வாக்களிக்குமாறு விழிப்பூட்டல் செய்ய வேண்டும். இது இன்றைய அவசிய, அவசர தேவையாகும்.

அதேநேரம் அறிக்கைக் கலாசாரத்திற்கும் முற்றுப் புள்ளி வையுங்கள். எதனையும் செயலில் காட்டுவதே சிறப்பும் மதிப்புமாகும்.

# இலங்கை தொடர்பில் இந்தியா மென்போக்கை கடைப்பிடிக்கிறது

## நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் தெரிவிப்பு

பொதுநலவாய நாடுகள் அமைப்பிலிருந்து இலங்கையை வெளியேற்றுவதற்கும் அங்கு மாநாடு நடைபெறாது தடுத்து நிறுத்துவதற்கும் முன்னின்று செயற்பட்டிருக்க வேண்டியது இந்திய அரசின் ஒரு கடமை என நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி. உருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார்.

தெற்காசியப் பிராந்தியத்தின் முதன்மை நாடு என்ற வகையில் இந்தியா தனது தார்மீகப் பொறுப்பை உணர்ந்து செயற்பட்டிருக்கவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தமிழகம் சென்னையில் சேவ் தமிழ் இயக்கம், தமிழீழத்திற்கான மாணவர் போராட்டக்குழு சார்பில் இடம்பெற்ற சர்வதேச இளைஞர் மாநாட்டுக்கு அனுப்பிவைத்த நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் செய்தியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அச்செய்திக் குறிப்பில் அவர் குறிப்பிட்டுள்ள விடயங்கள் வருமாறு,

உலகில் வெவ்வேறு காலகட்டத்தில் வரலாற்றை முன்னோக்கி நகர்த்தும் பணியில் மாணவர்கள் காத்திரமான பாத்திரத்தை வகித்து வந்திருக்கிறார்கள். மாணவர்கள் எழுச்சியடைந்து சரியான முறையில் தமது போராட்டப்பாதையை நெறிப்படுத்தி முன்னெடுத்துச் செல்லும்போது அவர்கள் தம்கையில் எடுக்கும் போராட்டங்கள் வெற்றிப்பாதையை எட்டுவதை எவராலும் தடுத்து நிறுத்த முடிவதில்லை.

தமிழீழ மக்களுக்கு ஆதரவாக தமிழகத்தில் தமிழக மாணவர்கள் வெளிக்காட்டிய எழுச்சி இரு விடயங்களைத் தெளிவாக வெளிக்கொணர்ந்துள்ளது.

ஒன்று தமிழீழத்துக்கு ஆதரவாக தமிழக மக்களை ஒரு திரளாக (in a mass) அணிதிரட்டும் ஆற்றல் மாணவர்களுக்கு இருக்கிறது என்பது. மற்றொன்று தமிழகத்தில் நடைபெறும் தமிழீழ ஆதரவுப் போராட்டங்கள் மாணவர்கள் தலைமையில் முன்னெடுக்கப்படல்தான் வலுவுள்ளதாக அமையும் என்பது. இந்த வகையில் இலங்கையில் பொதுநலவாய நாடுகளின் மாநாடு நடைபெறுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நடைபெறும் இம்மாநாடு மாணவர்களது தலைமையில் நடைபெறுவது மிகவும் பொருத்தம் வாய்ந்தது.

தமிழீழ விடுதலையைப் பொறுத்தவரை இந்திய அரசு எடுக்கும் முடிவுகள் விடுதலைப் போராட்டத்தின் வெற்றியில் கனதியான பங்கை ஆற்றக்கூடியவை என்பது பரவலாக உணரப்பட்டதொரு விடயம். ஆனால், இலங்கை தொடர்பாக இந்தியா ஒரு மென்மையான நட்புறவான போக்கைத்தான் கடைப்பிடித்து வருகிறது என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# தேர்தல் விஞ்ஞாபனங்களின் பிரதிகளை ஒப்படையுங்கள்

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுகின்ற அனைத்து கட்சிகளும் அதன் வேட்பாளர்களும் வெளியிடும் தேர்தல் விஞ்ஞாபனம் மற்றும் விளம்பரங்களின் பிரதியை தேசிய ஆவண பாதுகாப்பு திணைக்களத்திடம் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் நடைபெறும் எந்தவொரு தேர்தலின்போதும் கட்சிகள் மற்றும் சுயேட்சைக்குழு வேட்பாளர்களால் வெளியிடப்படும் தேர்தல் விஞ்ஞாபனம், விளம்பரங்கள், தேர்தலுடன் தொடர்புடைய ஆவணங்கள் அனைத்தும் வெளியிடப்படும் தினத்தில் இருந்து 30 நாட்களுக்குள் தேசிய ஆவண பாதுகாப்பு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படவேண்டுமென திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த 1930 ஆம் ஆண்டிலிருந்து நாட்டில் இடம்பெற்ற தேர்தல்களின் போது வெளியிடப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனங்கள் அடங்கிய தொகுப்பு தேசிய ஆவண பாதுகாப்பு திணைக்களத்தில் பேணப்பட்டு வருகின்றது.

தேர்தல் தொடர்பான ஆய்வுகளில் ஈடுபடுபவர்களுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் வேட்பாளர்களுக்கும் இவற்றைப் பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பம் காணப்படுவதாக தேசிய ஆவண பாதுகாப்பு திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (அ-2)

# உரமானியத்திற்கான விண்ணப்பப்படிவம் விநியோகம்

நாவற்குழி மேற்கு சம்மேளன எல்லைக்குட்பட்ட விவசாயிகளுக்கான இவ்வாண்டுக்கான உரமானிய விண்ணப்பப்படிவம் இன்றிலிருந்து விநியோகிக்கப்படுகின்றது.

இவ்விண்ணப்பப்படிவத்தை உடனடியாகப் பெற்று நிரப்பி மீள ஒப்படைப்பதுடன் நெற்பயிர்ச்செய்கைக்கான வரியாக நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் பரப்புக்கு ஒரு ரூபா 50 சதம் வரி செலுத்தி பற்றுச்சீட்டையும் பெற்றுக் கொள்ளும்படி அதன் தலைவர் இ. சொக்கலிங்கம் அறிவித்துள்ளார். அத்துடன் பெரும்போகத்திற்கான BG-406 விதை நெல்லினம் கைதடி கமநல சேவை நிலையத்தால் வழங்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# வெங்காயப் பயிர் அறுவடை விழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கல்வயல் விவசாய சம்மேளன வெங்காய பயிர் செய்கை அறுவடை விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு விளைவேலி தோட்டவெளியில் இடம் பெறவுள்ளது.

இதில் கமநல சேவை நிலைய அதிகாரிகள் கலந்து கொண்டு வெங்காய பயிர்ச் செய்கை தொடர்பான ஆலோசனைகளை வழங்கவுள்ளனர்.

எனவே, சாவகச்சேரி எல்லைக்குட்பட்ட விவசாயிகளும் அதற்கப்பால் வெங்காயப் செய்கையை மேற்கொள்பவர்கள் அனைவரும் இவ்விழாவில் கலந்து கொண்டு பயனடையுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-9-29)

# காயம் விளைவித்தவருக்கு விளக்கமறியல்

(முல்லைத்தீவு)

மல்லாவி பனிச்சன்குளம் பகுதியில் ஒருவரை போத்தல், கத்தி என்பவற்றைப் பாவித்து காயப்படுத்திய இரு நபர்களை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட நபர் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் கடன் பிரச்சினை சம்பந்தமாகவே இம் மோதல் உருவானதாகவும் பொலிஸார் மன்றில் தெரிவித்தனர். (ம)

# விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் சர்வதேச தற்கொலை எதிர்ப்பு தினத்தினை முன்னிட்டுவிழிப்புணர்வுகருத்தரங்குஒன்று நேற்றையதினம் நடைபெற்றுள்ளது.

300 க.பொ.த. உயர்தர மாணவர்கள் கலந்து கொண்ட இக்கருத்தரங்கினை பாடசாலையின் பழைய மாணவரும் உளநல வைத்தியருமான எம்.ஜெயராஜா நடத்தியிருந்தார்.

நேற்றையதினம் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற இக்கருத்தரங்கு ஒரு மணி நேரம் வரை நடைபெற்றது.

மாணவர்கள் தற்கொலைக்கு எதிரான விழிப்புணர்வில் எவ்வாறு ஈடுபடல், பிரச்சினைகளிற்கு எவ்வாறு முகம் கொடுத்தல் என்பது தொடர்பிலும் இக்கருத்தரங்கில் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

இக்கருத்தரங்கு கிளிநொச்சி மாவட்டத்தில் பல பாடசாலைகளில் நேற்றைய தினம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (எ-4)

# பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

## நமது எஜமானர் யார்?



❖ கடவுள் நமக்கு மிக அருகிலேயே இருக்கிறார். ஆனால், நம்பிக்கை இருந்தால் மட்டுமே அவரைத் தரிசிக்க முடியும்.

❖ பொன், பெண், மண் ஆகிய மூவாசைக்கு மனதில் இடம் கொடுத்தால் ஆன்மிக யோகம் ஒருபோதும் கைகூடாது.

❖ கடவுளே உலகின் ஒரே எஜமானர். நாம் அனைவரும் அவரின் பணியாளர்கள். அவருக்கு பணிவிடை செய்வது தான் பிறவிப்பயன்.

❖ ஆராய்ச்சி அறிவால் கடவுள்தரிசனத்தைப் பெற முடியாது. அசைக்க முடியாத நம்பிக்கை ஒன்றே தேவை.

❖ தீயவாசனை மனதில் இருக்கும் வரையில் தூய்மையான பக்தி உண்டாகாது. பக்தி செலுத்துவதே வாழ்வின் சாராம்சம்.

❖ உருவமற்ற கடவுளை தியானம் செய்வது மிகக் கடினமான செயல். அதற்காகவே உருவநிலையில் வழிபாடு செய்கிறோம்.

❖ கள்ளம் கபடமில்லாத மனம் படைத்தவர்கள் கடவுளின் அருளை எளிதில் பெற்று மகிழ்கிறார்கள்.

❖ பேராசை, காமம், கோபம் போன்ற துர்க்குணங்கள் கடவுளை அறிந்த பிறகே நம்மை விட்டு அகலும்.

நட்பு ரீதியான காற்பந்துப் போட்டியில்

# ஆஸியை வீழ்த்தியது பிரேசில்

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான நட்பு காற்பந்து போட்டியில், பிரேசில் அணி வெற்றி பெற்றது.

பிரேசில் சென்ற அவுஸ்திரேலிய அணி, நட்பு ரீதியிலான சர்வதேச காற்பந்து போட்டியில் பங்கேற்றது. சொந்த மண்ணில் உள்ளூர ரசிகர்கள் முன்னிலையில் ஆதிக்கம் செலுத்திய பிரேசில் அணிக்கு 8, 33ஆவது நிமிடத்தில் ஜோ இரண்டு கோல் அடித்தார். தொடர்ந்து அசத்திய பிரேசில் அணியின் இளம் நட்சத்திர வீரர் நெய்மர், 35ஆவது நிமிடத்தில் ஒரு கோல் அடித்தார். முதல் பாதி முடிவில் பிரேசில் 3-0 என முன்னிலை வகித்தது.

இரண்டாவது பாதியிலும் ஆதிக்கத்தை தொடர்ந்த பிரேசில் அணிக்கு ரமிரெஸ் (58 வது நிமிடம்), படோ (72வது), லூயிஸ் (83வது) ஆகியோர் தலா ஒரு கோல் அடித்தனர். கடைசி நிமிடம் வரை போராடிய அவுஸ்திரேலிய அணியினரால் ஒரு கோல் கூட அடிக்க முடியவில்லை. ஆட்டநேர முடிவில், பிரேசில் அணி 6-0 என்ற கோல் கணக்கில் அசத்தல் வெற்றி பெற்றது.



# இங்கிலாந்தில் வெற்றிகொண்டமை மகிழ்ச்சியளிக்கின்றது; மைக்கல் கிளார்க்

இங்கிலாந்தில் வைத்து கிரிக்கெட் போட்டியொன்றில் வெற்றிபெற்றமை குறித்து மகிழ்ச்சியடைவதாக அவுஸ்திரேலிய அணியின் தலைவர் மைக்கல் கிளார்க் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். இங்கிலாந்திற்கெதிரான 2ஆவது ஒருநாள் சர்வதேச போட்டியில் வெற்றிபெற்றமை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் 0-3 என்ற கணக்கில் தோல்வியடைந்த அவுஸ்திரேலிய அணி, ருவென்ரி ருவென்ரி சர்வதேச போட்டித் தொடரை 1-1 என்ற கணக்கில் சமநிலையில் முடித்திருந்தது. எனினும் மைக்கல் கிளார்க் ருவென்ரி ருவென்ரி சர்வதேசப் போட்டிகளில் பங்குபற்றுவதில்லை என்பதால் அப்போட்டிகளில் பங்குபற்றியிருக்கவில்லை.

முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டி மழையால் கைவிடப்பட்டிருந்த நிலையில், இரண்டாவது போட்டியில் அவுஸ்திரேலிய அணி 88 ஓட்டங்களால் வெற்றிபெற்றிருந்தது.

இந்நிலையில், வெற்றிபெற்றிருந்த அணியில் இடம்பெற்றமை குறித்து மகிழ்ச்சியடைவதாகத் தெரிவித்த மைக்கல் கிளார்க், வெற்றிபெறுவதென்பது எப்போதும் மகிழ்ச்சி தரக்கூடியதொன்று எனக் குறிப்பிட்டார்.


டெஸ்ட் போட்டிகளில் அவுஸ்திரேலிய அணி அவ்வப்போது சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்திய போதிலும், வெற்றி பெற முடியாது போனதாகவும், இப்போட்டியில் வெற்றிபெற்றமை சிறப்பானது எனவும் தெரிவித்தார்.




கடந்த ஜூன் மாதம் 20 ஆம் திகதி ஐக்கிய இராச்சியத்தில் கார்டிஃப் நகர மைதானத்தில் சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இரண்டாவது அரையிறுதி ஆட்டம் நடைபெற்றது. இலங்கை - இந்திய அணிகள் மோதிய இந்த ஆட்டத்தின்போது புலிக் கொடியுடன் ஓடிய சந்தேகநபரை இலங்கைக்கு கொண்டுவருவது பற்றி பிரித்தானிய பொலிஸாருடன் பேசிவருவதாக குற்றப்புலனாய்வு பிரிவினர் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

இந்த வழக்கு கொழும்பு மேலதிக நீதவான் நிசாந்த பீரிஸ் முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே சந்தேகநபரை இலங்கைக்கு கொண்டுவருவது பற்றி பிரித்தானிய பொலிஸாருடன் பேசிவருவதாக சி.ஐ.டியினர் தெரிவித்தனர்.

# அமெரிக்காவில்....



அமெரிக்க திறந்த டெனிஸ் சுற்றுப் போட்டி நியூயோர்க் நகரில் நடைபெற்றது. இப்போட்டியின் ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப்போட்டியில் உலகின் முதன்நிலை வீரர் சேர்பியாவின் நோவக் ஜோகோவிச் உலகின் 2ஆம் நிலை வீரர் ஸ்பெயினின் ரபெல் நடால் பலப்பரீட்சை நடத்தினர்.

ஆரம்பம் முதல் விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த போட்டியில், முதல் செற்றை நடால் 6-2 என்ற கணக்கில் கைப்பற்றினார். இதனை அடுத்து 2 ஆவது செற்றை ஜோகோவிச் 6-3 என்ற கணக்கில் கைப்பற்றினார். இதில் இருவரும் மாறி மாறி ஒரு செற்றை கைப்பற்றிய நிலையில் போட்டியில் மேலும் விறுவிறுப்பு கூடியது.

ஆனால் நடால் தனது அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி அடுத்த இரண்டு செற்களையும் 6:4, 6:1 என்ற கணக்கில் ஜோகோவிச்சை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை மீண்டும் கைப்பற்றினார்.

இது அவருக்கு கிடைத்த இரண்டாவது அமெரிக்க திறந்த சுற்றுப்போட்டி டெனிஸ் கிண்ணமாகும். இதற்கு முன்பு அவர் 2010ஆம் ஆண்டும் கிண்ணத்தை சுவீகரித்திருந்தார்.

தெற்காசிய காற்பந்து சம்பியன்சிப் இறுதிப் போட்டியில்

# இந்தியா ஆப்கான் பலப் பரீட்சை

தெற்காசிய காற்பந்து சம்பியன்ஷிப் போட்டியில்பலம்வாய்ந்த மாலைத்தீவு அணியை 1-0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்த இந்திய அணி இறுதிப்போட்டியில் ஆப்கானிஸ்தானுடன் இன்று பலப்பரீட்சை நடத்துகின்றது.

நேபாள தலைநகர் காத்மண்டுவில் 2ஆவது அரையிறுதிப் போட்டி நடைபெற்றது. இதில், நடப்புச் சம்பியனான இந்திய அணியும், மாலைத்தீவு அணியும் மோதின.

இந்த ஆட்டத்தில் இந்திய அணியின் சுனில் சத்தேரி பங்கேற்கவில்லை. இருப்பினும் இந்திய வீரர்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.இளம் வீரரான அர்னப் மண்டல், ஒரு கோல் அடித்து இந்திய அணியை வெற்றி பெற வைத்தார். இந்த ஆட்டத்தில் தொடக்கம் முதல் சளைக்காமல் விளையாடிய அர்னப், ஆட்டத்தின் 85ஆவது நிமிடத்தில் கோலடித்தார். இது சர்வதேச போட்டியில் அவர் அடித்த முதல் கோல் என்பது கூடுதல் சிறப்பாகும்.

இந்த வெற்றியின் மூலம் இப்போட்டியின்



இறுதிச்சுற்றுக்கு 9ஆவது முறையாகவும், தொடர்ந்து 5ஆவது முறையாகும் இந்திய அணி முன்னேறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இன்று நடைபெறும் இறுதிப் போட்டியில் இந்திய , ஆப்கானிஸ்தான் அணிகள் தொடர்ந்து இரண்டாவது முறையாக மோதுகின்றன. முன்னதாக, இந்தியாவுடான ஆட்டத்தின் போது, மாலைதீவு வீரர் அலி உமர், நடுவரைத் தாக்கினார். மேலும், போட்டி ஒருங்கிணைப்பாளர் ஒருவரை தாக்கி அந்த அணி வீரர்கள் வன்முறையில் ஈடுபட்டனர்.

மாலைதீவு அணி, லீக் சுற்றுகளில் மொத்தம் 18 கோல்களை அடித்திருந்தது. ஆனால், இந்தியாவுக்கு எதிராக அந்த அணி வீரர்களால் ஒரு கோல் அடிக்க முடியவில்லை.

## சச்சின் அடையாத சாதனை

நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் கிரிக்கெட்டில் படைக்காத சாதனையே இல்லை என்னும் அளவிற்கு பல சாதனைகளை நிகழ்த்தியுள்ளார். ஆனால், படைக்க முடியாத ஒரு சாதனையும் இருக்கிறது. எல்லா நாடுகளிலும் டெஸ்ட் போட்டிகளிலும் சதம் போட்டுள்ள சச்சின், சிம்பாவேயுடனான போட்டியில் மாத்திரம் இதுவரை சதம் பெறவில்லை.

சிம்பாவேயில் 4 டெஸ்ட் போட்டிகளில் மட்டுமே ஆடியுள்ள சச்சின், அதிகபட்சமாக 74 ஓட்டங்கள் வரை எடுத்துள்ளார்.

தற்போதைக்கு சிம்பாப்வேக்கு இந்திய அணி செல்லும் வாய்ப்புகள் இல்லை என்பதால், இந்த ஒரு விடயத்தை மட்டும் சச்சினால் நிறைவேற்ற முடியாது என்றே கருதப்படுகிறது.

சிம்பாவேக்குப் போய்த்தான் சதம் போடவில்லையே தவிர இந்தியாவுக்கு சிம்பாவே வந்திருந்தபோது அந்த அணிக்கெதிராக சதம் அடித்துள்ளார்.

ஆனால் சச்சின் படைக்காத சாதனையை ராகுல் டிராவிட் செய்துள்ளார். அதாவது டெஸ்ட் விளையாடும் 10 அணிகளின் நாடுகளிலும் அவர் சதம் போட்டுள்ளார்.

# மக்கள் விருப்ப வீரர் சங்கா




இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் 2013 டயலொக் கிரிக்கெட் விருதுகள் நிகழ்வில் மக்கள் விருப்பத்திற்குரிய வீரர் என்ற விருதினை குமார் சங்கக்கார பெற்றுக் கொண்டுள்ளார். ஆண்டுக்கான சிறந்த டயலொக் வீரர் என்ற விருதினை ரங்கன ஹேரத் பெற்றுக் கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

# தென்னாபிரிக்காவின் சிறந்த வீரராக அம்லா



தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் இவ்வாண்டுக்கான சிறந்த வீரர் விருதை அவ்வணியின் துடுப்பாட்ட வீரர் ஹசிம் அம்லா வெற்றிகொண்டுள்ளார்.

தென்னாபிரிக் கிரிக்கெட் சபையின் வருடாந்த விருது வழங்கல் விழாவின் போதே ஹசிம் அம்லா இந்த விருதை வெற்றிகொண்டார்.

2012-2013 பருவகாலத்திற்கான இவ்விருதுகளின் போது தென்னாபிரிக்கா சார்பாக சர்வதேசப் போட்டிகளிலும், உள்ளூர்ப் போட்டிகளிலும் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்திய வீரர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இதன்போது இவ்வாண்டுக்கான சிறந்த கிரிக்கெட் வீரராக ஹசிம் அம்லா தெரிவு செய்யப்பட்டார். இவ்விருது தவிர, சிறந்த டெஸ்ட் வீரர், ரசிகர்களின் சிறந்த வீரர், KFC "மிகச் சிறப்பு" விருது ஆகியவற்றையும் ஹசிம் அம்லா வெற்றிகொண்டார்.

சிறந்த ஒருநாள் சர்வதேசப் போட்டி வீரராக ஏபி.டி.வில்லியர்சும், சிறந்த இருபது-20 சர்வதேச வீரராக டேல் ஸ்ரெய்னும் இவ்வாண்டின் மிகச்சிறந்த பந்திற்கான விருதை ஜக்ஸ் கலிசும் சிறந்த புதுமுக வீரருக்கான விருதை கைல் அபொட்டும் சிறந்த வீராங்கனைக்கான விருதை மரிஸன்னே கப் உம் வென்றனர்.

இவை தவிர உள்ளூர் வீரர்களுக்கான விருதுகளும் வழங்கப்பட்டன.

**சர்வதேச விருதுகள்:**

சிறந்த கிரிக்கெட் வீரர்: **ஹசிம் அம்லா**

சிறந்த டெஸ்ற் வீரர்: **ஹசிம் அம்லா**

சிறந்த ஒருநாள் சர்வதேசப் போட்டி வீரர்: **ஏபி.டி.வில்லியர்ஸ்**

சிறந்த டுவெண்டி டுவெண்டி சர்வதேச வீரர்: **டேல் ஸ்ரெய்ன்**

வீரர்களின் சிறந்த வீரர்: **ஏபி.டி.வில்லியர்ஸ்**

இரசிகர்களின் சிறந்த வீரர்: **ஹசிம் அம்லா**

KFC "மிகச் சிறப்பு" விருது: **ஹசிம் அம்லா**

மிகச்சிறந்த பந்திற்கான விருது: **ஜக்ஸ் கலி**

சிறந்த புதுமுகம்: **கைல் அபொட்**

சிறந்த வீராங்கனை: **மரிஸன்னே கப்**

# கால்பந்தாட்ட சுற்றுப் போட்டி ஊரெழு றோயல் அணி சம்பியன்

நவாலி சென்.பீற்றர்ஸ் சமநிலை தவிர்ப்பு உதையின் மூலம் சென்.மைக்கல் அணியினை வீழ்த்தி ஊரெழு றோயல் அணி சம்பயினாகியது. நவாலி சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக்கழகம் யாழ். கால்ப்பந்தாட்ட லீக்கின் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் குருசுமுத்து நேசராசா ஞாபகார்த்த முதலாவது ஆண்டு கால்ப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியினை நடத்தி வந்தது.

யாழ்.லீக்கினைச் சேர்ந்த 12 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றிய மேற்படி சுற்றுப்போட்டிகள் யாவும் நவாலி சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது. சுற்றுப்போட்டியின் இறுதிப் அண்மையில் நடைபெற்றது.

இறுதிப்போட்டியில் ஊரெழு றோயல் அணியினை எதிர்த்து உரும்பிராய் சென். மைக்கல் அணி மோதியது. முதல் பாதியாட்டத்தில் தடுப்பற்ற உதையொன்று, ஊரெழு றோயல் அணிக்கு கிடைத்த போதும் அவ்வணி கோலாக்கத் தவறியது. இதனால் முதல் பாதியாட்டம் கோல் எதுவும் பெறாத நிலையில் முடிவடைந்தது.

இரண்டாவது பாதியாட்டத்தின் 8 ஆவது நிமிடத்தில் சென்.மைக்கல் அணிக்கு தடுப்பற்ற உதை கிடைத்தது. எனினும் அவ்வுதையினை சென்.மைக்கல் முன்கள வீரர்கள் கோலாக்கத் தவறினர்.

போட்டியின் நேரம் முடிவுக்கு வருகையில் இரு அணிகளும் கோல் எதுவும் பெறவில்லை. போட்டியின் வெற்றியாளரைத் தீர்மானிக்க சமநிலை தவிர்ப்பு உதை நாடப்பட்டபோது, தமக்கு கிடைத்த ஐந்து வாய்ப்புக்களைச் சரியாகப் பயன்படுத்திய ஊரெழு றோயல் அணி கோலாக்கியது.

எனினும் சென்.மைக்கல் அணி 5 சந்தர்ப்பங்களில் இரண்டை வீணாக்க, இறுதியில் ஊரெழு றோயல் அணி 5:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. இறுதிப் போட்டியின் நாயகனாக ஊரெழு றோயல் அணியின் தர்மகுலநாதன் கஜகோபனும், போட்டித் தொடர் நாயகனாக சென்.மைக்கல் அணியின் சிவலிங்கம் சுகிர்தனும் தெரிவு செய்யப்பட்டனர்.

# சென். நீக்கிலஸ் அணியை வீழ்த்தி பாடுமீன் அணி சம்பியனாகியது

சூசைப்பிள்ளை ஞாபகார்த்த கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியில் குருநகர் பாடும்மீன் அணி கிடைத்த தண்டனை உதை வாய்ப்பினை சரியாகப் பயன்படுத்தி கோலாக்கி சம்பியன் பட்டம் வென்றது.

ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழகம் மறைந்த கழக அங்கத்தவர் சூசைப்பிள்ளை ராஜ் ஞாபகார்த்த முதலாவது வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ். கால்பந்தாட்ட லீக்கில் அங்கத்துவம் வகிக்கும் கால்பந்தாட்ட அணிகளுக்கிடையில் அணிக்கு 7 பேர் கொண்ட கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியினை நடத்தியது.

சுற்றுப்போட்டியில் 12 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றியதுடன் அனைத்து போட்டிகளும் விலகல் முறையில் யூனியன் விளையாட்டு கழக மைதானத்தில் நடைபெற்று வந்தன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு மேற்படி சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி 40 நிமிடங்களைக் கொண்ட போட்டியாக நடைபெற்றது.

இறுதிப்போட்டியில் குருநகர் பாடும்மீன் அணியும் நாவாந்துறை சென். நீக்கிலஸ் அணியும் மோதின.

இறுதிப்போட்டியின் ஆரம்ப நிமிடங்கள் சென். நீக்கிலஸ் அணியின் பக்கம் இருந்தது. இருந்தும் கிடைத்த இலகுவான உதை வாய்ப்புக்களை அவ்வணி வீணாக்கியது.

இந்நிலையில் சுதாகரித்துக் கொண்ட பாடும்மீன் அணி தமக்கே உரித்தான ஆட்டத்தினை வெளிப்படுத்தி ஆட்டத்தில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியது.

முதல் பாதியாட்டத்தில் இரு அணிகளும் கோல் எதுவும் பெறாத நிலையில் முடிவடைந்தது.

இரண்டாவது பாதியாட்டத்தின் 10ஆவது நிமிடத்தில் சென். நீக்கிலஸ் அணி முரட்டுத்தனமாக ஆடியதாக கூறி நடுவரினால் பாடும்மீன் அணிக்கு தண்டனை உதை வாய்ப்பு ஒன்று கொடுக்கப்பட்டது.

அந்த வாய்ப்பினைச் சரியாகப் பயன்படுத்திய பாடும்மீன் அணி, அதனைக் கோலாக்கி போட்டியில் முன்னிலை பெற்றது.

தொடர்ந்து போட்டி முடிவடையும் வரையிலும் மேலதிக கோல்கள் அடிக்கப்படாத நிலையில்இ பாடும்மீன் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனாகியது.

# அரசின் பொதுத் தேவைக்காக...

போனோர், காணி அபகரிப்பு என்பவை தொடர்பில் ஊடகவியளாலர்களினால் எழுப்பப பட்ட வினாக்கு பதிலளிக்கும் போதே அவர்கள மேற்படி பதிலளித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கொழும்பினை மையமாக் கொண்ட அபிவிருத்தி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகிந்த சிந்தனையின் கீழ் மத்தியில் காணப்பட்ட அதிகாரத்தினை நாட்டிலுள்ள 16 ஆயிரம் கிராம சேவையாளர் பிரிவுகளிற்கும் 25 மாவட்டங்களிற்கும் 9 மாகாணங்களிற்கும் பகிர்ந்தளிக்கப்பட்டு வருகின்றது.

பங்குபற்றுதலுடன் கூடிய அபிவிருத்தி எனும் திட்டத்தினை அடி மட்டத்திலுள்ள மக்களினையும் அபிவிருத்தியில் பங்கெடுக்கும் விதமாக மகிந்த சிந்தனையின் மூலம் ஜனாதிபதி வகுத்துள்ளார்.

மக்கள் சபை, உள்ளூராட்சி மன்றங்கள், மாகாணசபை, பாராளுமன்றம், நிறைவேற்று ஜனாதிபதி என்ற ஒழுங்கில் இலங்கை முழுவதும் ஆட்சி நடைபெற்று வருகின்றது.

எனினும் துரதிஷ்டவசமாக வடக்கில் இம்முறைமையினை அமுல்படுத்த முடியவில்லை.

அதனை வடக்கில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதன் மூலம் வடக்கிலும் இவ் ஒழுங்கு முறைமை ஆட்சிமுறையினை மக்கள் தமக்கு விருப்பமான பிரதிநிதிகளினை தெரிவு செய்ய வழங்கியுள்ள சந்தர்ப்பத்தின் மூலம் உருவாக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் மாகாண சபைகளினால் செய்ய முடியாத அபிவிருத்திகளினை முன்னெடுத்திருந்தோம் இனியும் யாழ்.பல்கலைக்கழகத்திற்கு பொறியியல்பீடம் மற்றும் விவசாயபீடம் அமைக்கவுள்ளதோடு எதிர் வரும் 16-ம் திகதி கிளிநொச்சிக்கு ரயில் வண்டி வரவுள்ளதோடு அடுத்த வருடத்தில் யாழ்ப்பாணத்திற்கும் புகையிரதம் வருகை தரவுள்ளது.

ஆனால் இவ் அபிவிருத்தியினை நாம் திட்டம் போட்டுத்தான் செய்து வருகின்றோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறி வருகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை பொறுத்தவரையில் தனக்கு கிடைத்த உள்ளூராட்சி சபையினையோ, நகர சபையினையோ அபிவிருத்தி செய்யா அசட்டை நிலையிலேயே உள்ளது.

யாரென்று தெரியாத ஒருவர முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்தியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீண்டும் வன்முறை, துன்பம், அழிவினைத் தருவதறகாகவே போட்டியிடுகின்றனர்.

நாளுக்கு நாள் அதிகரிக்கும் சுதந்திரம், மகிழ்ச்சி அபிவிருத்தி இப்பிரதேசத்திற்கு வேண்டுமாயின் எமது குழுவினை தேர்தலில் தெரிவு செய்யுங்கள்.

வலி.வடக்கில் இராணுவத்தினரால் பிடித்து வைக்கப்பட்டுள்ள காணிகள் எப்போது விடுவிக்கப்படும் என ஊடகவியலாளர்களினால் கேட்கப்பட்டதோடு,

காணி அபகரிப்பு என்பது வடக்கில் மட்டும் இடம்பெறவில்லை தெற்கிலும்தான் இடமபெறுகின்றது. அவை அரசின் பொதுத் தேவைக்காகவே இடம்பெறுகின்றது என்றார்.

நாம் நாட்டை குழுப்புவதற்காக கேட்கவில்லை நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா காணமற்போனவர்கள் எனக் கூறுவோர் நஷ்டஈட்டினை பெறுவதற்கே எனக் கூறியுள்ளார்.

இது காணமற் போன உறவுகளின் மனங்களினை புண்படச் செய்துள்ளது என ஊடகவியலாளர்களினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நீங்கள் தானே அவருக்கு ஜனாதிபதித் தேர்தலின்போது வாக்களித்தீர்கள் எனக் கூறிய அவர், சரத் பொன்சேகாவுக்கு தெற்கில் ஆதரவு இல்லையெனவும் கூறினார்.

இதேவேளை இச் சந்திப்பின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் தான் சிறந்த ஊடகக் கலாசாரம் உண்டு என பாராட்டுத் தெரிவித்த பஷில் ராஜபக்ஷ, சந்திப்பின் இறுதியில் இங்கு தான் நாட்டைக் குழப்பும் ஊடகவியலாளர்கள் உள்ளனர் எனவும் தெரிவித்திருந்தார். (எ-4)

# தவறியோர்...

இதேவேளை யாழ்.மாவட்டத்தில் தபால் மூல வாக்களிப்பு சுமுகமாகவும் முழுமையாகவும் நடைபெற்றுள்ளது.

9301 வாக்காளர்களில் சுமார் 200 பேர் வரையிலே வாக்களிக்கவில்லை என்று கூறப்பட்டது.

இவர்களுக்கும் 12 மற்றும் 13 மற்றும் 14 ஆம் திகதிகளிலும் வாக்களிக்க சந்தர்ப்பம் கிடைத்துள்ளமையால் கிட்டத்தட்ட 100 வீதமானோர் தபால் மூலமான வாக்களிப்பை மேற்கொள்ளக் கூடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (எ-11)

# பாக்.-சிம்பாவே முதலாவது டெஸ்ட்

சுற்றுலா பாகிஸ்தான் அணிக்கும் சிம்பாவே அணிக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி தற்சமயம் இடம் பெற்று வருகின்றது.

ஹராரேயில் இடம்பெற்று வரும் இந்த போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற சிம்பாவே அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி, துடுப்பெடுத்தாடி வரும் அந்த அணி சற்று முன்னர் வரையில், 3 விக்கெட்டுக்களை இழந்த நிலையில், 165 ஓட்டங்களை பெற்றுள்ளது.

# பிரபாகரனுக்கு அஞ்சாத...

எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முயற்சிகளை தோற்கடிக்க நாட்டு மக்களை இணைத்துக் கொண்டு களத்தில் இறங்க தயாராகிவிட்டோம் என்று ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

இவ்வளவு அழிவுகள் இடம் பெற்ற பின்னர்கூட தமிழ்க் கூட்டமைப்பு மாற்றமடையவில்லை. அவர்கள் தமது மூன்றாவது யுத்தத்தை தற்போது ஆரம்பித்துள்ளனர். இதற்கு பின்னரும் எம்மால் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது.

ஆயுதங்களை ஏந்துமாறு தமிழ்த் தலைவர்கள் கூறும்போது நாங்கள் வெறுமனே இருந்து கொண்டிருக்க முடியாது என்றும் ஹெல உறுமய குறிப்பிட்டுள்ளது.

13 ஆவது திருத்தச் சட்டம் குறித்து ஆராய நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு வடக்குத் தேர்தலுக்கு முன்னர் தனது அறிக்கையை சமர்ப்பிக்கப் போவதில்லை என்பது உறுதியாகி விட்டதால் அக்குழுவிலிருந்து வெளியேறுவதற்கு தீர்மானித்து விட்டோம்.

இனி பாராளுமன்றத்துக்கு வெளியேயிருந்து பிரிவினை வாதத்துக்கு எதிராக போராடப் போகின்றோம் என்றும் ஜாதிக ஹெல உறுமய எச்சரித்துள்ளது.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தமிழ்க் கூட்டமைப்பு தனது விஞ்ஞாபனத்தில் கடந்த 30 வருடங்களாக யுத்தத்தில் ஒருலட்சத்து 50 ஆயிரம் தமிழ் மக்கள் இறந்துள்ளதாக தெரிவிக் கப்பட்டுள்ளது. இறுதிகட்ட யுத்தத்தில் 70 ஆயிரம் பேர் இறநதுள்ளதாக கூட்டமைப்பு கூறுகின்றது. இது முற்று முழுதுமான பொய்யான தகவலாகும். பாதுகாப்புத்தரப்பின் கணிப்பீடுகளின் பிரகாரம் 2007 ஆம் ஆண்டுக்கும் 2009 -ம ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில 7000 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் புலிப் போராளிகளும் உள்ளடங்கு வதாகவும் குறிபபிட்டார்.

ஆனால், புலிகள் கொலை செய்த தமிழ்த் தலைவர்கள் மற்றும் தமிழ மக்கள் குறித்து கூட்டமைப்பு தனது விஞ்ஞாபனத்தில் வாய் திறக்கவேயில்லை. அமிர்தலிங்கம், நீலன் திருச்செல்வம், யோகேஸ்வரன், உமா மகேஸ்வரன், பத்மநாபா மற்றும சபாரட்ணம் உள்ளிட்ட பல்வேறு தலைவர்களை புலிகள் கொலை செய்துள்ளனர்.

அத்துடன் வடக்கிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் தொடர்பில் கூட்டமைப்பு எதனையும் கூறவில்லை.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமது தாயகம் என்றும் தமக்கு சுயநிர்ணயம் உள்ளது என்றும் கூறியுள்ளனர். சுயநிர்ணய உரிமை எனபது தனிநாட்டுக்கான முக்கிய பண்பாகும். அந்த வகையில் தமிழ்த தேசியக் கூட்டமைப்பு பயணம் தெளிவானது. நாட்டை மீண்டும் யுத்தத்தில் தள்ளிவிடவும் அழிவுப் பாதையில் இட்டுச்செல்லவுமே கூட்டமைப்பு முயற்சிக்கின்றது. அவர்களின் அந்த சவாலை நாங்கள் ஏற்கின்றோம் என்றும் அவர் தெரிவித்தார்.

வடக்கில் கூட்டமைப்பு மாகாண சபையை அமைத்தால் நிச்சயம் யுத்தக் குற்றம் குறித்து ஆராய ஆணைக் குழுவை நியமிப்பார்கள். அது இறுதியல் ஐக்கிய நாடுகளின் கண்காணிபபுக் குழுவிலேயே வந்து முடியும். எனவே, கூட்டமைப்பின் முயற்சிக்கு எதிராக மக்களை திரட்டி செயற்பட வேண்டியது அவ சியமாகும். இந்த வடயத்தில் இந்தியா எமக்கு எதிராக செயற் பட்டால் நாமும் அந் நாட்டுக்கு எதிராக செயற்பட நேரிடும். மேலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான தொடர்புகளை ஐக்கிய தேசிய கடசியும் கைவிட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

அதாவது தேர்தல் விஞ்ஞாபனம என்ற பெயரில் எம் மீது மீண்டும் யுதகம் பிரகடனப்படுத் தப்பட்டுள்ளது. அந்த யுத்தத்தை ஏற்றுக் கொள்ளவும் அதனை எதிர் கொள்ளவும் நாங்கள் தயாராகி விட்டோம். பிரபாகரனுக்கு அச் சப்படாத நாங்கள் விக்னேஸ்வரனுக்கு அச்சப்படமாட்டோம். எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முயற்சிகளை தோற்கடிக்க நாட்டு மக்களை இணைத்துக் கொண்டு களத்தில் இறங்க தயாராகிவிட்டோம் என்றார். (எ-11)

# சோனியா காந்...

நீதிமன்றம் ஒன்று விசாரணைக்கான அழைப்பாணை பிறப்பித்திருப்பதாகத் தெரிகிறது.

இது குறித்து பதிலளித்த இந்தியப் பிரதமர் அலுவலகத் துணை அமைச்சர் வி.நாராயணசாமி, இந்த வழக்கு குறித்து காங்கிரஸ் தலைமை முடிவு செய்யும். ஆனால் சோனியா காந்தி தேசிய வழிகாட்டுதல் கவுன்சிலின் தலைவர் என்ற வகையில் அவருக்கு இந்திய அரசும அனைத்து சட்டரீதியான உதவிகளையும் தரும் என்றார்.

சீக்கியர்கள் படுகொலை சம்பவம் குறித்த பல்வேறு வழக்குகள் இந்திய நீதிமன்றங்களில் நடந்து வருகின்றன, சஜ்ஜன் குமார் கீழ் நீதிமன்றத்தில் விடுதலை செய்யப்பட்ட நிலையில், அந்த வழக்கு மீது அரசே மேல் முறையீட்டைச் செய்திருக்கிறது. ஜெகதீஷ் டைட்லர் மீது வழக்கு நடந்து வருகிறது என்றும் அவர் கூறினார்.

ஆனல் அமெரிக்காவில் தொடுக்கப்பட்ட இந்த வழக்கு விளம்பரத்துக்காகத் தொடுக்கப்பட்டது என்றும் அவர் கூறினார்.

அமெரிக்காவில் ஒரு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்திக்கு அவர் அனுமதிக்கப்பட்டுள்ளதாக நம்பப்படும் மருத்துவ மனைக்கோ அல்லது அவருடன் இருக்கும் பாதுகாப்பு அதிகாரிகளிடமோ இந்த அழைபபாணையை வழங்குமாறு அமெரிக்க நீதிமன் றம் உத்தரவிட்டுள்ளதாகச் செய்திகள் கூறுகின்றன.

நீதிக்கான சீக்கியர்கள் அமைப்பு என்ற காலிஸ்தான் பிரிவினை வாதத்தை ஆதரிக்கும் அமைப்பு ஒன்று இந்த வழக்கை தொடர்ந்திருக்கிறது.

சோனியா காந்திக்கு எங்கு சென்று சிகிச்சை பெறுகிறார் எதற்காக சிகிச்சை பெறுகிறார் போன்ற விபரங்கள் வெளியிடப்படவில்லை. (எ-11)

# பயங்கரவாதத்தை...

தலைமையிலான மத்திய அரசாங்கத்தை நெருக்கடியில் தள்ளுவதற்கே முயற்சிகளை மேற்கொள்கின்றன எனவும் தெரிவித்தார்.

யுத்தத்தை முடிவிற்கு கொண்டு வர இந்தியா உதவியது. அதே போன்று ராஜீவ் காந்தியை கொலை செய்த விடுதலை புலிகளை இலங்கையே அழித்தது.

எனவே இரு நாடுகளுக்கும் இடையே நட்புறவில் எவ்விதத்திலும் விரிசல் ஏற்படப் போவதில்லை எனறும் இந்தியாவில தேர்தல் நெருங்கிவருவ தால் ஆட்சியமைக் கக்கூடிய பலம் உள்ள காங்கிரஸை நெருக கடியில தள்ளுவதே தமிழ் நாட்டு அரசியல் வாதிகளின் நோக்கமாகும் என்றும் குறிப்பிட்டார். (எ-11)

# வடக்கு மாகா...

திப்பு தொடர்பாக ஆயா ஊடகவியலாளர்களுக்கு மேலும் தெரிவிக்கையில்,

நடைபெறவுள்ள தேர்தல் எவ்வளவு சுதந்திரமாக இடம் பெறும், மக்களின் பங்களிப்பு எவ்வளவு இருக்கும், பிரச்சினைகள் ஏதாவது இடம்பெறக் கூடிய வாய்ப்புள்ளதா? போன்ற கேள்விகளை உயர்ஸதானிகர் என்னிடம் எழுப்பியிருந்தார்.

அத்தோடு வடக்குத் தேர்தல் உங்களுக்கு மிகவும் பிரதான மானதா எனவும் கேட்டார்.

இதற்கு பதிலளித்த போது வடக்குத் தேர்தல் எமக்கு பிரதான மானது. இதன் ஊடாகத்தான் ஜனநாயக எண்ணத்தை மற்றவர்களுக்குத் தெரிவிக்க முடியும்ஆகவே எல்லா மக்களும் தங்களின் வாக்குகளை அளித்து தமக்கு விருப்பமான பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதுதான் எங்களுடைய விருப்பமாகயிருக்கின்றதுஎனவும,

அவர்களும் அதனையே விரும்புகின்றனர். குறிப்பாக எல்லா நாடுகளும் வடக்கு மாகாண சபைத் தேர்தல் சுமுகமான முறையில் இடம்பெற வேண்டுமென்பதனையே விரும்பும்எனஉயர்ஸதானிகர் கூறியதாக ஆயர் மேலும் தெரி

FALC FRENCH LANGUAGE CENTRE
CENTRE FOR FRENCH
FRENCH CLASSES
France, Canada, Swiss, Belgium செல்வோர், ஆர்வமுள்ளோர் French கற்று Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட International Certificates இனை பெறலாம்.
ஐரோப்பிய French (DELF) கடந்த Examஇல் வடக்கில் எம் மாணவர்கள் மட்டுமே சித்தி..
ஆசிரியர் : Mr. V. Jegan (Teaching Training in France - 2007) இது வரைக்கும் 726 க்கும் மேற்பட்டோர் எம்மிடம் French கற்றுச் சென்றுள்ளனர்.
ஆரம்பம் : 25.09.13 Wed at 9am. No. 23, Palaly Road, ஆரியகுளம். (அப்பலோ Hospital முன்பாக)
ஆரம்பம் : 25.09.13 Wed at 4pm No. 181, Main Street, Nelliady. (சோதி வீதி முன்பாக)
Deutsch, IELTS, B1 Sinhala வகுப்புகளும்.
0779 789 456

நீங்கள் A/L பரீட்சை எழுதி முடித்தவரா?
பதவி வெற்றிடங்கள்
SUPERVISOR
ASS. MANAGER
ADMIN
ACCOUNTS
இதோ எமது கனேடியன் கம்பனியில் அடிப்படைத் தகைமையான O/L உடன் எம்முடன் இணைந்து நிரந்தரமாக பணிபுரிய ஓர் அரிய சந்தர்ப்பம்.
துடிப்புடனும், ஆர்வத்துடனும் வேலை தேடுபவராக நீங்கள் இருந்தால் இன்றே எம்முடன் இணையுங்கள்
அடிப்படைச் சம்பளம் 12,000/= - 15,000/= பின் 50,000/=
மலையகத்தாரும் விரும்பத்தக்கது. (நுவரெலியா, ஹட்டன், பதுளை)
(3914) தொடர்பு : 0214993166

நீங்கள் A/L பரீட்சை எழுதி முடித்தவரா? பதவி வெற்றிடங்கள்
SUPERVISOR (மேற்பார்வையாளர்)
ASS. MANAGER (துணை முகாமையாளர்)
MANAGER (முகாமையாளர்)
STORE KEEPERS (களஞ்சியப்படுத்துனர்)
ACCOUNTS
இதோ எமது Canadian Companyயில் அடிப்படைத் தகைமையான "O/L" உடன் எம்முடன் இணைந்து நிரந்தரமாக பணிபுரிய ஓர் அரிய சந்தர்ப்பம்
போன்ற பல்வேறுபட்ட பதவிகளுக்கு துடிப்பும், ஆர்வமும், வேலை தேடுபவராகவும் நீங்கள் இருந்தால் இன்றே எம்முடன் இணையுங்கள்.
அடிப்படைச் சம்பளம் 12,000/= - 15,000/= பின் 50,000 /=
தங்குமிடம் & உணவு வசதிகள் இலவசம்.
இன்றே அழையுங்கள் :
(3919) 0777981471, 0775566224

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
*Learn French The French Way*
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

France, Canada வுக்கு திருமணம் முடித்து செல்வோர். மாணவர்கள் மற்றும் French கற்கவிரும்பும் யாவரும் (கிளிநொச்சி. முல்லைத்தீவு. வவுனியாவைச் சேர்ந்தவர்களும்) படிக்கிறார்கள். France இல் தொடர்ந்து French கற்பதற்கும் Embassy விடயங்களுக்கும் எமது Certificate அவசியமாகும். ஏனெனில் உலகில் French கற்பிப்பதற்கு France அரசாங்கம் அங்கிகரிக்கும் ஒரே நிறுவனம் "AF" மட்டுமே.
புதிய வகுப்பு விரைவில் உடன் பதிவு செய்யவும்
61, Kachchery-Nallur Road, Jaffna T.P. 021 222 8093
(கச்சேரியை அடுத்து வரும் சந்தியில் அமைந்துள்ள வெள்ளை மாடிக்கட்டடம்)
(3886)

தொழில் வழிகாட்டல் பயிற்சிப்பட்டறை
A/L பூர்த்தி செய்த மாணவர்களுக்கு பகுதிநேர, நிரந்தர தொழிலுக்கான பயிற்சிப் பட்டறைகள் நடைபெறவுள்ளது பதிவுகளுக்கு முந்துங்கள்
தேசிய தொழில் வங்கி Nation Job Bank
0710 920 920
www.nationjobbank.com



Why Choose BCAS for Law?
> இலங்கையில் ஒரு lawyer ஆக தொழில் புரிவதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.
> 3 வருட LLB (Hons) கற்கை நெறியை யாழ்ப்பாணத்திலேயே பூர்த்தி செய்ய முடியும்.
> இலங்கை சட்டக் கல்லூரி, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) இனால் அங்கீகரிக்கப்பட்டது.
> இலங்கை சட்டக் கல்லூரிக்கு Law college entrance exam இன்றி அனுமதி பெற்றுக்கொள்ளமுடியும்.
> Attorney படிப்பதற்கு BCAS Campus மேலதிக பயிற்சி வகுப்புக்களை நாடாத்துகின்றது.
> வயதெல்லை இன்றி அனைவரும் கலந்து கொள்ள முடியும்.
BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
For further details :
16, Point Pedro Road, Jaffna, Sri Lanka.
021 2219910 / 0777 102131
www.bcas.lk
Colombo : 077 482 9765 | Kandy : 081 222 4731
Batticaloa : 077 766 6432 | Kurunegala : 077 387 4747
Metro Ads

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.09.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.